
~~கு. அ. 73~~
ந.ப. 4380

உ
சிவமயம்

இருபத்தைந்தாவது ஆண்டு

# மணிவாசகர் விழா மலர்





250.6
மணி
SL/PR

காரைநகர் மணிவாசகர் சபை

1979

With Best Compliments
From

# RANJANA STORES

**52, BANKSHALL STREET,**
**COLOMBO 11.**

*T'Phone*: **25851**

அன்பளிப்பு

250.6
மணி
54 PR

உசாத்துணை

4380

# டொலர் காமென்ஸ் இன்டஸ்றி

நீலிப்பந்தனை - காரைநகர்

கிளை :

54, பிரதான வீதி, யா - ஸ்.

## ஓவர்லொக் யூகி மெசின் பயிற்சி நிலையம்

உம்பிச்சி பிளேஸ், - கொழும்பு.

அன்பளிப்பு

# எம். ரி. பொன்னம்பலம்

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ எங்களிடம் திறமான முயல்மார்க் ஓடுகளும்

★ மற்றும் சகலவிதமான ஓடுகளும் பெற்றுக்கொள்ளலாம்

☎ 7493

*With Best Compliments From*

# MERCANTILE CORPORATION Ltd.

**SUPPLIERS OF;**

"SLEEPEZE" RUBBERISED FIBRE MATTRESSES

AND CUSHIONS AND CONCENTRATED LATEX

NO 263, SEA STREET,

P. O. BOX 440

**COLOMBO 11**

Telephone: 31913 - 5

T'grams: *PRODUCE*

விவசாய உபகரணங்கள், ஆயுள்வேத மருந்துச் சாமான்கள்
பலசரக்குச் சாமான்கள், ஆகியவற்றிற்கும்
அலுமினியம், பித்தளை, போத்தல் வகைகள் யாவும்
வாங்கவும், விற்கவும் உகந்த இடம்

# ஸ்ரீ சக்தி ரேடர்ஸ்

**கண்டி வீதி, கிளிநொச்சி.**

கிளை ஸ்தாபனம்:

**ஹதிர் ஸ்ரோர்ஸ்**
கண்டி வீதி,
கிளிநொச்சி.

படங்கு ஓடர் உடன் கவனிக்கப்படும்

அன்பளிப்பு

# நியூ சுந்தரம்

பஸ்நிலையம் கிளிநொச்சி

தொலைபேசி: 289

கிளை:

ஆதவன்

கண்டி றோட், கிளிநொச்சி.

அன்பளிப்பு

# லிங்கம் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி, நெடுங்கேணி.

அன்பளிப்பு

மு. காசிப்பிள்ளை சகபுத்திரர்கள்

பஜார் வீதி, வவுனியா.

தொலைபேசி எண்; 386
302

அன்பளிப்பு

வி. எச். ஏ. டி. சில்வா அன் கோ

பஜார் வீதி, வவுனியா.

தொலைபேசி எண்: 319

WITH BEST COMPLIMENTS

*of*

# S. S. K. HAJA ALAWDEEN & SONS

**WHOLESALE DEALERS IN TEXTILES**

**99, SECOND CROSS STREET**

## COLOMBO - 13

**T. Phone:** *24226* **T'Grams:** *Nachatiram*

அன்பளிப்பு

நாளுக்குநாள் மாறும் நாகரீக

★ புடவைத் தினிசுகள்

★ கைத்தறிப் புடவைகள்

★ வர்ணக் குடைகள்

உள்நாட்டு வெளிநாட்டு

★ உற்பத்திப் பொருட்கள்

★ அன்பளிப்புப் பொருட்கள்

யாவற்றிற்கும்

விஜயஞ் செய்யுங்கள்

# ஏ. வி. பி. பான்ஸி ரேடேஸ்

B7, நவீன சந்தை, சுன்னாகம்.

தொலைபேசி இல: 217

அன்பளிப்பு

பாலா அச்சகம்

வலந்தலை, காரைநகர்.

வையகம் போற்றும் காரை மணிவாசகஞர் மன்றம் செய்யும்
நற்சேவை என்றும் சிறப்புற வாழ்த்துகின்ருேம்

உயர்ந்த ரகம்! நிதான விலை!!

உள்நாட்டு உற்பத்தி
கைத்தறிப் பிடவைகள்
மற்றும்
சகலவித உயர்தர
பிடவைத் தினிசுகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

ஓம் முருகா ரெக்ஸ்ரைல்ஸ்

வலந்தலை காரைநகர்

உரிமையாளர்: ஐ. சோதிநாதன்

வையகம் போற்றும் காரை மணிவாசகஞர் மன்றம் செய்யும்
நற்சேவை என்றும் சிறப்புற வாழ்த்துகின்ருேம்

நியூ முருகேசு ஸ்ரோர்ஸ்

( பலசரக்கு வியாபாரம் )

140, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 220

# NATHAN & CO.

102/3, 1 st FLOOR, 3 rd CROSS STREET,

COLOMBO - 11.

Dealers in Textiles Representative of Manufacturers Stockists and Distributors Specialists in Easwary Saree, Verstey And Ktti Suiting.

*Branch:*

**VENKADESWARA**

Upstoer

25, Model Market, Jaffna.

T'Phone: 7197

*Factory:*

**KHATTAU TERY**

*Textiles Industries*

37, Wyman Road, (Nallur) Jaffna.

T'Phone: 4 92

உங்கள் அன்றாட தேவைக்கு வேண்டிய

★ உணவுப் பொருட்களுக்கும்

★ சாய்ப்புச் சாமான்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்

# எஸ். வி. முருகேசு

154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# எம். ஜி. எம். றைக்கிளீனோர்ஸ்

உரிமையாளர்: எம். குணநாயகம்

59, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நைலோன், பட்டு, சிந்தெட்டிக், பொலிஜெஸ்ரர், கம்பளி

மற்றும் எவ்வகையான உடைகளுக்கும்

விருப்பத்திற்கேற்ப திருப்திகரமான முறையில்

றைக்கிளீன் செய்து கொடுக்கப்படும்

திருமண வைபவங்களுக்கு ஏற்ற

சர்வாணி, தலைப்பாகை வாடகைக்கு விடப்படும்

தொன்மைச் சைவத்தின் உண்மை நெறிபரப்பும்
மணிவாசகர் சபை முப்பத்தொன்பது ஆண்டுகள் ஆற்றிய
சமய பணிக்கு எமது இதயங் கனிந்த நல்லாசிகள்

புற்றில் வாழ் அரவுமஞ்சேன் - பொய்யர்தம் மெய்யும் மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர் தெய்வம் தன்னை உண்டெனை நினைந்தெம் பெம்மாற்
கற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே

( மணிவாசகர் )

SANGU BRAND
REFINED
CAMPHOR
GNANAMBIKAI INDUSTRIES
KARAINAGAR

சங்கு மார்க் கற்பூரத் தயாரிப்பாளர்கள்

ஞானம்பிகை இன்டஸ்ரீர்ஸ்

சிவன் கோவிலடி, காரைநகர்.

( இலங்கை )

அன்பளிப்பு

ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்

நகை அடைவு பிடிப்பவர்

இல 364, பிரதான வீதி,

பசறை.

அன்பளிப்பு

நாதன்ஸ்

287, பிரதான வீதி.

பசறை.

அன்பளிப்பு

E. V. A.

இ. வேலுப்பிள்ளை

அடைவு பிடிப்பவர்களும், புடவை, சாய்ப்புச் சாமான்கள் வியாபாரமும்

192/9 மெயின் வீதி,

பசறை.

கிளை:

307, பசறை.

# NAGARAJAH CORPORATION

General Merchants, Hardware Dealers
Goverament and Estate Suppliers
and Transport Agents

*( Licensed Dealers in Cartridges and Explosives )*

## AUTHORISED DEALERS:

Building Materials Co. poration
Sri Lanka State Trading (General) Corporation
Sri Lank Sugar Corporation
Ceylon Cement Corporation
Ceylon Fertilizer Corporation
Ceylon Oil and Fats Corporation

320, Main Street,

**PASSARA.**

Head office:
109, Old Moor Street
Colombo - 12
Dial: 33863

Branch:
*NELL MA RICE MILL INDUSTRIES*
Vavuniya

இல்லத்தரசிகள் என்றும் விரும்புவது
விருந்து வைபவங்களைச் சிறப்புறச் செய்வது

உடனுக்குடன் உங்கள் முன்னிலையில்
மின்சார ரேஸ்டரில் வறுத்து அரைக்கப்பட்டது

# அண்ணா கோப்பி

தலைமையகம்;

அண்ணா தொழிலகம்

இணுவில்

தொலைபேசி; 7412

கிளை;

அண்ணா தொழிற்சாலை

இல 1 மத்திய சந்தை,

சுன்னுகம்.

இல 4 நவீன சந்தை

யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

தொன் நெறிச் சைவத் தொண்டின் தொழுபணி நிறையவாற்றி
ஆண்டுகள் நாற்பதைக் கடந்த எங்கள்
மணிவாசகர் சபை இளமை மீதுற எமது ஆசிகள்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

-திருமந்திரம்

உங்களுக்குத் தேவையான சாய்ப்புச் சாமான் வகைகளையும்
பலசரக்குப் பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**நாடுங்கள்**

# க. கணபதிப்பிள்ளை

**103, பிரதான வீதி, பண்டாரவளை.**

**கிளைகள்:**

க. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்
45, பிரதான வீதி,
பண்டாரவளை.

காளு காளு அன் சன்ஸ்
நகை அடைவு பிடிப்பவர்
212, கே. கே. எஸ். ரோட்
யாழ்ப்பாணம்

இரத்தினம் ஸ்ரோஸ்
111, பிரதான வீதி
பண்டாரவளை.

அன்பளிப்பு

"திருவாசகத்திற்கு உருகாதார்
ஒருவாசகத்திற்கும் உருகார்"

முருகன் ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,

மடுல்கெல.

அன்பளிப்பு

அசோகன்ஸ்

(நகை அடைவு பிடிப்பவர்களும்)

புடவை வியாபாரமும்)

இல 23 பிரதான வீதி,

மடுல்கெல

அன்பளிப்பு

ஸ்ரீ நடராசா பிறதர்ஸ்

காங்கேசன்துறை வீதி,

இணுவில்

அன்பளிப்பு

வி. என். கார்த்திகேசு

54 பிரதான வீதி,

பசறை

With Best Compliments From

A· Perampalam

57 BAZAAR STREET

BADULLA

With Best Compliments From

A. Subramaniam

No: 43/45 LOWER STREET

BADULLA

With Best compliments From

S. Ponnambalam & Son

NO: 49, LOWER STREET

BADULLA

With Best Compliments From

**K. A. KANDIAH**

General Merchant

**100 LOWER STREET**

**BADULLA**

T. Phone: 459

அன்பளிப்பு

கே. வி. சுந்தசாமி ஸ்ரோர்ஸ்

26 லோவர் வீதி,

பதுளை,

மணிவாசகர் சபையின் இருபத்தைந்தாவது ஆண்டு மணிவாசகர் விழா
சிறப்புடன் நடைபெற எமது நல்லாசிகள்
அவர்களின் நற்பணிகள் மேலும் தொடரட்டும்

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரிய தோர் பேரிழந்தாரே

( திருமந்திரம் )



**பராசக்தி அம்மன் ஸ்டோர்ஸ்**

**இல 71 பிரதான வீதி**

**பண்டாரவளை**

தொலைபேசி இல: 370

சிவமயம்

இருபத்தைந்தாவது ஆண்டு

# மணிவாசகர் விழா மலர்



வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானுமதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.

- மாணிக்கவாசகர்

மலர் ஆசிரியர்கள்:

வித்துவான் க. முருகேசன்

பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை

மணிவாசகர் சபை

காரைநகர்

1979

# காரைநகர் மணிவாசகர் சபைச்

## செயற்குழுவினர் - 1979

| | |
|---|---|
| தலைவர்; | பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை |
| உப தலைவர்கள்: | திரு. மா. சிவசுப்பிரமணியம் |
| | திரு. நா. பொன்னையா |
| | திரு. வி. கேதீஸ்வரதாசன் |
| செயலாளர்: | திரு. க. சிவகுமரன் |
| உப செயலாளர்: | திரு. சு. கணேசமூர்த்தி |
| தனாதிகாரி: | திரு. து. நாகேந்திரன் |
| செயற்குழு உறுப்பினர்கள்: | பிரம்மஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் |
| | திரு. க. கந்தையா |
| | திரு. க. கணேசபிள்ளை |
| | திரு. சோ. இராசரத்தினம் |
| | திரு. க. ஸ்ரீகரன் |
| | திரு. ம. அழகேந்திரன் |
| | திரு. மா. கனகசபாபதி |
| | திரு. சு. சத்தியமூர்த்தி |
| | திரு. ஆ. செந்தில்நாதன் |
| பரீட்சைச் செயலாளர்: | திரு. ந. நகுலநாதன் |
| மலர்க் குழுவினர்: | திரு. வி. கேதீஸ்வரதாசன் |
| | திரு. க. ஸ்ரீகரன் |
| | திரு. க. கணேசபிள்ளை |
| | திரு. ம. அழகேந்திரன் |
| | திரு. ந. நகுலநாதன் |

# காரைநகர் மணிவாசக விழா மலர்

## வாழ்த்து

செந்தமிழ்ச் சிரோமணி, பண்டித வித்துவான்
திரு. க. கி. நடராஜன் *B.O L , Dip-in Ed,* அவர்கள்

1. எல்லாமே ஒடுங்கி நிற்கும் ஏகாந்த காலந் தன்னிற்
பொல்லாத தனிமை நீக்கப் புனிதநல் லமிழ்தாந் தேனுஞ்
சொல்லினற் பொருளா லென்றுஞ் சுவைமணி வாச கத்தை
மெல்லவே சுவைக்க வெண்ணி மிகும்இறை எழுதிக் கொண்டான்.

2. அத்தகைப் பெருமை வாய்ந்த அருந்திரு முறையைத் தந்த
மெய்த்தவ முனிவன் வாத வூரனின் விழுப்பம் ஓர்ந்து
பத்தியிற் படிப்பிற் குன்றாப் பணியினில் ஓங்கி நிற்கும்
வித்தகர் வாழுங் காரை மேன்மைசால் நகரின் மாந்தர்.

3. பத்தினே டொன்ப தின்மேல் பகர்ந்திடும் ஐம்பத் தைந்தாம்
உத்தம ஆண்டு தன்னில் உயரிய விழாவெ டுத்தே
அத்தனர்க் குரிய தாகும் ஆதிரை நாளைக் கொண்ட
உய்த்தகு திருவெம் பாவை யுயரிய நாட்க டோறும்.

4. குழுக்களை யமைத்துச் சைவம் குதூகல மடையச் செய்ய
முழுக்கலை முழங்கத் தேர்வு முதன்மைகள் ஆண்டு தோறும்
மழலைமென் மொழியார் சைவ மாணவர் மகிழும் வண்ணம்
கழறுநற் பரிசில் நல்கிக் காசினி திளைக்க வைத்தார்

5. அதுமட்டோ இசைக்கக் கேண்மின் அறிவுடைப் பெரியோ ரான
முதுதமி ழறிஞர் தம்மை மொய்திரை வலயஞ் சூழ்ந்த
பதியதாம் பார தத்தில் பகர்ந்திடும் ஈழ நாட்டில்
முதன்மையோ டழைத்துச் சைவம் முத்தமிழ்ப் பயிர்வ ளர்த்தார்.

6. ஈழத்துச் சிதம்ப ரத்தின் இணையறு மடியா ராக
வாழுமப் பெரியோர் வாழி மணிமொழி மன்றம் வாழி
தாழ்விலா விழாவும் வாழி தகைமைசால் மலரும் வாழி
வேழமா முகத்தன் தண்மை வியனருள் பெருக வாழி.

# மணிவாசகர் விழாத் தலைவர்களின் பட்டியல்

1955 - சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்
(கைத்தொழில், சமூக சேவைகள் அமைச்சர்)

1956 - திருவாவடுதுறை, மதுரை ஆதீன வித்துவான், சித்தாந்தச் சொல்மணி உயர்திரு வீர. சிவசுப்பிரமணியம் அவர்கள்

1957 - திரு. க. கனகரத்தினம் அவர்கள்
( கணக்காய்வுத் திணைக்கள பதில்மா அதிபர் )

1958 - ஸ்ரீ. கி. பி. ஹரன் அவர்கள்,
(வீரகேசரி ஆசிரியர்)

1959 - செந்தமிழ்க் கவிமணி, வித்துவான், பண்டிதர் கா. பொ. இரத்தினம் M. A., B. O. L அவர்கள்
(தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், அரசகரும மொழித் திணைக்களம்)

1960 - சித்தாந்தப் பேராசிரியர், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள்
(தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

1961 - திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை O.B.E. அவர்கள்
(வர்த்தக உணவு அமைச்சின் நிரந்தரச் செயலாளர்)

1962 - திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் M.A., I.A.S.
(திருநெல்வேலி மாவட்டம் முன்னாள் கலெக்டர், தமிழ்நாடு)

1963 - திரு. வே. க. கந்தசாமி B. A. அவர்கள்
(குருநாகல் மாவட்ட நீதிமன்ற நீதிபதி)

1964 - திரு. செ. தனபாலசிங்கம் அவர்கள்
(இளைப்பாறிய மாவட்ட நீதிபதி)

1965 - பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள்
( இலங்கைப் பல்கலைக் கழகப் பௌதிகத்துறைப் பேராசிரியர் )

1966 - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
( நல்லை ஆதீன முதல்வர் )

1967 - செஞ்சொற்கொண்டல், வித்துவான். சொ. சிங்காரவேலன் அவர்கள்
( மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் )

1968 - சைவப்பெரியார் ஸ்ரீமத் த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள்

1969 - திரு. ந. சபாரத்தினம் அவர்கள்
(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, அதிபர்)

1970 - சட்டத்தரணி த. சோமசுந்தரம் அவர்கள்

1971 - சட்டத்தரணி, பண்டிதர் நா. ஏகாம்பரம் அவர்கள்

1972 - ஸ்ரீலஸ்ரீ. சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம் குருமகா சந்நிதானம்)

1973 - நியாயவாதி நம. சிவப்பிரகாசம் அவர்கள்
(யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைத் தலைவர்)

1974 - திரு. க. வை. நவரத்தினம் அவர்கள்
(ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி)

1975 - சட்டத்தரணி த. சோமசுந்தரம் அவர்கள்
(யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைத் தலைவர்)

1976 - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
(நல்லை ஆதீனம் குருமகா சந்நிதானம்)

1977 - பண்டிதவித்துவான், சைவப்புலவர், சித்தாந்தநன்மணி தொல்காப்பியச் செல்வர், தருமையாதீனப் புலவர் கு. சுந்தரமூர்த்தி M.A. அவர்கள்.
(அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர்)

1978 - தருமை ஆதீனப் புலவர், திருநெறிச் செம்மல், நல்லிசைப் புலவர் வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் M.A. அவர்கள்.
(தருமபுரம் ஆதீனம் பல்கலைக் கல்லூரி முதல்வர்)

1979 - முத்தமிழ் அரசு, சைவச் செங்கதிர், வித்துவான் இரா. செல்வக்கணபதி M.A. அவர்கள்.
(தருமபுரம் ஆதீனம் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்)

# காரைநகர் மணிவாசகர் சபை

## ஆரம்பம் 1-1-1940

| ஆண்டு | தலைவர் | செயலாளர் |
|---|---|---|
| 1940 | பிரம்மஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள் | ந. அருளையா<br>த. இராசரத்தினம் |
| 1941 | நா. கனகசுந்தரம் | த. இராசரத்தினம் |
| 1942 | நா. கனகசுந்தரம் | ச. பரமநாதர் |
| 1943 | நா. கனகசுந்தரம் | ச. பரமநாதர் |
| 1944 | து. விசுவநாதன் | ச. பரமநாதர்<br>ச. வேலுப்பிள்ளை |
| 1945 | சி. ஆறுமுகநாதன் | ச. வேலுப்பிள்ளை<br>ச. பரமநாதர் |
| 1946 | ச. வேலுப்பிள்ளை | கு. தண்டாயுதபாணி<br>ந. குணரத்தினம்<br>ச. அம்பலவாணர் |
| 1947 | நா. கனகசுந்தரம் | ச. செல்லையா |
| 1948 | ச. அம்பலவாணர் | கு. இராமநாதன்<br>ந. குணரத்தினம் |
| 1949 | வே. சுப்பிரமணியம் | கு. இராமநாதன்<br>ந. குணரத்தினம் |
| 1950 | வே. சுப்பிரமணியம் | க. சிற்றம்பலம்<br>நா. கனகசுந்தரம் |
| 1951 | வே. சுப்பிரமணியம் | க. சிற்றம்பலம்<br>நா. கனகசுந்தரம் |
| 1952 | வே. சுப்பிரமணியம் | க. சிற்றம்பலம்<br>நா. கனகசுந்தரம் |

| | | |
|---|---|---|
| **1953** | நா. கனகசுந்தரம் | ச. செல்லையா |
| **1954** | நா. கனகசுந்தரம் | க. வைத்தீஸ்வரக்குருக்கள் |
| **1955** | வே. சுப்பிரமணியம் | நா. கனகசுந்தரம்<br>க. வைத்தீஸ்வரக்குருக்கள் |
| **1956** | ந. சபாரத்தினம் B.A. | க. சிற்றம்பலம்<br>நா. கனகசுந்தரம் |
| **1957** | டாக்டர் இ. கனகசுந்தரம் | க. சிற்றம்பலம்<br>ச. சுந்தரம்பிள்ளை |
| **1958** | ஆ. தியாகராசா M.A.M.Litl | க. சிற்றம்பலம்<br>ச. சுந்தரம்பிள்ளை |
| **1959** | அ. கனகசபை J.P. U.M. | க. நல்லதம்பி<br>நா. கனகசுந்தரம் |
| **1960** | ஆ. விநாயகசிவம்பிள்ளை | பண்டிதர் சு. அருளம்பலம்<br>வித்துவான் மு. சபாரத்தின |
| **1961** | இ. கந்தையா | வித்துவான் க. முருகேசன்<br>க. நல்லதம்பி |
| **1962** | க. நல்லதம்பி | மு. கண்மணிராசா<br>வித்துவான் க. முருகேசன் |
| **1963** | ச. சபாபதி | வித்துவான் க. முருகேசன்<br>மு. கண்மணிராசா |
| **1964** | ச. சபாபதி | வித்துவான் க. முருகேசன்<br>மு. கண்மணிராசா |
| **1965** | ச. சபாபதி | வித்துவான் க. முருகேசன்<br>க. நவரத்தினம் |
| **1966** | சட்டத்தரணி செ. இராசையா | சு. விசுவநாதன்<br>ந. அருளையா |
| **1967** | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>க. சாம்பவமூர்த்தி |
| **1968** | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>க. சாம்பவமூர்த்தி |

| | | |
|---|---|---|
| 1969 | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>க. சாம்பவமூர்த்தி |
| 1970 | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>மு. நாகராசா |
| 1971 | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>மு. நாகராசா |
| 1972 | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>ச. தட்சணாமூர்த்தி |
| 1973 | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>ச. தட்சணாமூர்த்தி |
| 1974 | சட்டத்தரணி செ. இராசையா | வே. செல்வநாயகம்<br>ச. தட்சணாமூர்த்தி |
| 1975 | க. சிற்றம்பலம் | வே. செல்வநாயகம்<br>ச. இராசையா |
| 1976 | க. சிற்றம்பலம் | வே. செல்வநாயகம்<br>வே. குமாரசாமி |
| 1977 | க. சிற்றம்பலம் | வே. குமாரசாமி<br>க. சிவகுமரன் |
| 1978 | பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை | க. சிவகுமரன் |
| 1979 | பண்டிதர் சு. வேலாயுதபிள்ளை | க. சிவகுமரன் |

அன்பளிப்பு



# செல்வமஸ்

பிரதான வீதி, நெடுங்கேணி.

தொலைபேசி இல; 8

அன்பளிப்பு

உ

# திருப்பதி ஸ்ரோர்ஸ்

இல 51 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

7119
7881

WITH BEST COMPLIMENTS

FROM

# ASOKANS

83, 2ND CROSS STREET

COLOMBO - 11

T. Phone: 36773

*Branch:*

**Asogans**

*B 152 New Market*

JAFFNA

ஸ்ரீராம ஜெயம்

அன்பளிப்பு

செ. சண்முகராசா அன் சகோதரரும்

இல. 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

சகலவிதமான உப உணவுப் பொருட்களும்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

அன்பளிப்பு

ஆ. நல்லதம்பி அன். சன்.

( தங்கப்பவுண் நகை, இரத்தின வியாபாரம் )

75, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

தந்தி; கமலம் தொலைபேசி இல: 664

அன்பளிப்பு

உ

# யாழ் உலோகத் தொழிற்சாலை

**250 - 254 கே. கே. எஸ். வீதி,**

**யாழ்ப்பாணம்.**

*தொலைபேசி; 7049*

*கிளை ஸ்தாபனங்கள்:*

**1. யாழ்மெற்றல் விற்பனை நிலையம்**

*6, நவீன சந்தை,*

**யாழ்ப்பாணம்.**

*தொலைபேசி: 7596*

*2. 63. பாங்ஷால் வீதி,*

**கொழும்பு**

*தொலைபேசி; 26150*

# ஆசிச்செய்தி

எல்லாம் வல்ல இறைவன் - உள்ளம் உருகும் இயல்புடைய அடியவர்கட்குத் தேனாய், இன்னமுதாய் தித்திக்கின்றான் என்பர் பெரியோர். இறைவனை நினைந்து உருகும் மனமுடையவரை நோயடையா என்றும், அவர்தம் உள்ளத்தே இறைவன் ஞானமணிவிளக்காக விளங்குகின்றான் என்றும், உருகாதவர் நெஞ்சினை இறைவன் விரும்பான் என்றும் கூறும் ஆன்றோர் வாக்குகளை நாம் பக்தி இலக்கியங்கள் பலவற்றிலும் காணலாம். இத்தகைய மன உருக்கத்தை மக்கள் எளிதில் பெறுதற்குரிய பக்தி நூலாய்த் திகழ்வது 'திருவாசகம்'. கருங்கல் மனத்தையும் கரைத்து உருக்கும் அருளாற்றல் பொருந்திய திருவாசகம் தமிழ் மக்களின் சேம வைப்பாக விளங்குகின்றது.

சைவ சமயத்தின் சிறப்புக்களை உலக மக்கள் உணர்ந்து போற்றற் குரிய நூலாய்த் திகழும் இத்திருவாசகத்தின் சிறப்புக்களையும், ஏனைய திருமுறைகள், மற்றும் சைவ சமய உண்மைகள் முதலியவற்றையும், மக்கள் அறிந்து உணரும் வண்ணம் பணிசெய்து வருகிறது காரைநகர் மணிவாசகர் சபை.

ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் காரைநகர் இலங்கையில் புகழ் மிக்க ஊராக விளங்குவது. காரைநகர்த் திருக்கோயிலில் விளங்கும் 'நடராசப்பெருமான்' அன்பர்களின் கண்ணையும், கருத்தையும் கவரும் மூர்த்தியாக விளங்குகிறார். காரைநகர் மணிவாசகர் சபையின் அன்பர்கள் ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் திருவாசக விழாவை நடத்தியும், திருவாதிரை விழாவைக் கொண்டாடியும், மற்றும் கல்லூரிகள், பள்ளிகளில் பயிலும் குழந்தைகட்கு, சமய நூல் பயிற்சித் தேர்வு நிகழ்த்திப் பரிசுகள் வழங்கியும் சிறந்த சமயப் பணிகள் பலவற்றைச் செவ்வனே ஆற்றி வருகின்றனர்.

மணிவாசகர் விழாவின் இருபத்தைந்தாவது ஆண்டு விழாவை ஒட்டி, மலர் வெளியிடுவது பயன் தரும் பணிகளுள் ஒன்றாகும். மலர் நன்முறையில் வெளிவரவும், மக்கள் அந்நூலை உணர்ந்து போற்றிப் பயன் பெறவும், மணிவாசகர் சபை, மேலும் மேலும் வளர்ந்து, சிறந்த பயன் தரவும், செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவையாதினர், மாயூரம்.
21-12-1979

# ஆசிச்செய்தி

காரைநகர்

மணிவாசகர் சபையினரின் மணிவாசகர் விழா வெள்ளிவிழா ஆண்டாக இவ்வாண்டு அமைவது ஒரு தனிச்சிறப்பு, ஈழத்துச் சிதம்பரம் எனத் தனிச்சிறப் புடைய தேவாலயத்தில் தில்லைக் கூத்தனை நினைவு படுத்தும் வகையில், விழா அமைந்து அவ் விழா வில் வந்தனை செய்ய வரும் பக்தர்கட்குச் சிந்தனை யும், அவன் சிந்தனையாக்க, ஆண்டு தோறும் மணி வாசகர் விழாவெடுத்து, தமிழக அறிஞரும், ஈழத்து அறிஞரும், ஒருங்கிணைந்து அறிவுரை ஆற்றவைக் கும் பெருமை இச் சபையினரது தனிச் சிறப்பு, இச் சபையின் சேவை மேன்மேலும் வளர எல்லாம் வல்ல அனந்த நடராஜப் பெருமானைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம். இவ்விழாவையொட்டி வெளி வரும் மணிவாசகர் விழா மலர் சிவானந்தத் தேன் ததும்பும் தமிழ் மணங்கமழும் அருள் மலராக மிளிர ஆசீர்வதிக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

நல்லை ஞான சம்பந்த ஆதீனம்
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
14-12-79.

# ஆசிச்செய்தி

மாணிக்க வாசகர் பெருமானின் வாசகத்தை நெஞ்சில் நிறுத்தி 38 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட காரைநகர் மணிவாசகர் சபை, சென்ற 24 ஆண்டுகளாக திருவாதிரை காலங்களில் சைவப்பெருமக்களின் ஆன்மீக அறிவையும் சைவ சமயத்தின் மேல் உள்ள நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்து முகமாக விழா எடுத்து வருவதை நாம் போற்றுகிறோம்.

இந்தியாவில் இருந்து பல ஆண்டுகளுக்கு முன்னர் காரை நாட்டிற்கு வந்த முனிவர்கள் திண்ண புரத்திலும் அதன் அண் மைப் பிரதேசங்களிலும் தவம் செய்து வீடு பேறடைந்த வர லாற்றையும், இறைவன் தாம் திண்ணபுரத்தின் அரசமரத்தின் கீழ் இருப்பதாக ஆண்டி முனிவருக்கு கூறிய வரலாற்றையும் நினைவிற்கொண்ட மணிவாசகர் சபையினர். சைவப் பெருமக்களை வருடா வருடம் அவ்விடத்திற்கு அழைத்து விழா எடுப்பதில் வியப்பு ஒன்றுமில்லை.

சென்ற ஆண்டு விழாவுக்குத் தலைமைதாங்கிச் சிறப்பித்த தருமை ஆதினப் பல்கலைக்கழக முதல்வர் வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்களின் வருகை சைவ சமய வளர்ச்சிப் பாதையிலே ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்திவிட் டது என்றால் மிகையாகாது.

இவ்வாண்டு விழா மிகவும் சிறப்புடன் நடைபெற வேண் டும் என்று வாழ்த்துகின்ற அதே வேளையில் இவ்வாண்டு விழா வுக்குச் சிகரமாக வெளிவரும் சிறப்பு மலர் பரிபூரணமாக உருப் பெற்று நறுமணம் வீச எல்லாம் வல்ல சுந்தரேஸ்வரப் பெரு மான் துணைநின்று உதவ வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''


ஜே / 3 / 6
அன்டசன் மாடி வீடு.
கொழும்பு 5.
14-12-79

நா. பொன்னையா
செயலாளர்
காரை அபிவிருத்திச்சபை

# ஆசிச்செய்தி


காரைநகர் மணிவாசகர் சபையினர் கடந்த இருபத்தைந்து வருடங்களாக மணிவாசகர் சபை மூலம் ஆண்டு தோறும் விழா நடாத்தியும் சமயப் பரீட்சைநடத்தியும் திருவெம்பாவை காலத்தில் திருப்பள்ளியெழுச்சி ஓதியும் எங்கள் கிராம சமயவளர்ச்சிக்கு ஏற்ற சமயப் பணியாற்றிவருவதை நாம் பாராட்டிக் கொள்ளுகிறோம். அன்றியும் அவர்கள் இடைக்கிடை சில பிரசுரங்களும் வெளியிட்டும் பணி புரிந்துள்ளனர். இன்று அவர்கள் வெளியிட உத்தேசித்தமலர்மூலம் அவர்களுக்கு நல்லாசி கூறுவதோடு அவர்கள் பணி சிறப்புற ஆண்டு தோறும் நடைபெற இறையருள் கூடுவதாக.

ச. சபாபதி
தலைவர்
சைவ மகாசபை காரைநகர்.



ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தின்
முன்பக்கத் தோற்றம்

ஈழத்துச் சிதம்பர
இரதோற்சவக் காட்சி





1977 ஆம் ஆண்டு மணிவாசகர் விழாவிற்குத் தலைமை தாங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. அவர்கள் பலாலி விமான நிலையத்தில் மணிவாசகர் சபைத் தலைவரினால் மாலையிட்டு வரவேற்கப்படுகையில் எடுத்த படம்.





1979 ஆம் ஆண்டு மணிவாசகர் விழாவுக்கு தலைமை தாங்கிய தருமைஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் இரா. செல்வக்கணபதி எம், ஏ. அவர்களும் அவரது துணைவியார் புலவர் சந்திரா செல்வக்கணபதி பி லிட் அவர்களும்.

அன்பளிப்பு

# சரவணா ஸ்டோர்ஸ்

இல 18 பிரதான வீதி, அப்புத்தளை.

தொலைபேசி: 263

கிளை:

**வெங்கடேஸ்வரா ஸ்டோர்ஸ்**
**97 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**WITH BEST COMPLIMENTS**
**OF**

# K. VELUPPILLAI

*GENERAL MERCHANTS & COMMISSION AGENTS*

**NO. 1, MAIN STREET, HAPUTALE.**

''பிறப் பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம் பொருள் காண்ப தறிவு''

-குறள்

காரைநகர் மணிவாசகர் சபையின் வளர்ச்சிக்கு

எமது நல் வாழ்த்துக்கள்



# சுப்பிரமணியம் ஸ்டோர்ஸ்

இல 5 பிரதான வீதி, அப்புத்தளை.

ஏக விநியோகஸ்தர்கள்:

லீவர் பிரதர்ஸ் லிமிட்டெட் உற்பத்திப் பொருட்கள்
யூனியன் காபைட் உற்பத்திப் பொருட்கள்
யானை மார்க் நீப்பெட்டிகள்
சுயாதீனப் பத்திரிகைகள்

கிளை;

அ. சுப்பிரமணியம் அன் சன்ஸ்

இல 3 பிரதான வீதி,
அப்புத்தளை.

தொலைபேசி; 219

WITH BEST COMPLIMENTS FROM

# A. S. Veluppillai & Co

GENERAL MERCHNT

NO 56 MAIN STREET

HAPUTALE

அன்பளிப்பு

# மு. ம. கந்தையாபிள்ளை அன் சன்ஸ்

74, பஜார் வீதி, அப்புத்தளை.

கிளை;

மு. ம. கந்தையாபிள்ளை அன் சன்ஸ்

ஆலடி;
காரைநகர்.

# உள்ளுறை


1. அன்பினில் விளைந்த ஆரமுது — 1
வித்துவான் இரா. செல்வக்கணபதி எம். ஏ. அவர்கள்

2. அப்பர் காட்டும் புழு — 2
வித்துவான் க. முருகேசன் அவர்கள்

3. பண்டைமகளிர் விளையாட்டுக்கள் — 8
வித்துவான். திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள்

4. தயாவான தத்துவன் — 11
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

5. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்? — 13
திரு ம. சற்குணம் எம்.ஏ அவர்கள்.

6. சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள் — 17
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

7 ஐயனுர் வழிபாடு — 51
வித்துவான் திரு. வி. சா குருசாமி தேசிகர் எம். ஏ.

8 இறைவனின் தனிப்பெருங் கருணை — 30
வியாகரண சிரோமணி பூரண - தியாகராஜக் குருக்கள்.

9 மார்கழி நினைவூட்டுவது — 34
கலாநிதி வே. இராமகிருஷ்ணன் அவர்கள்.

10. நினைவித்துத் தன்னை என் நெஞ்சத்திருந்து. — 37
திரு. க. சிற்றம்பலம் அவர்கள்.

11 மனிதப் பிறவியும் வேண்டுவதே — 39
வித்துவான் திருமதி ப். நிலா அவர்கள்.

12 காரைநகர் தந்த கவிஞர் நூல்கள்
க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள்

# முன்னுரை

ஆலயங்கள் பண்பட்ட நிலம் போன்றவை. ஆசாரிய மூர்த்திகளால் பாடல் பெற்றுப் பண்படுத்தப்பட்டவை. அவர்களுடைய திருவடிபட்ட நல்ல நிலங்கள் அங்கு நாம் அன்பெனும் விதையை விதைத்து இறையருள் என்னும் பயிரை விளைவித்துப் பூசித்து நம் ஆணவ மலமென்னும் பிணியைக் களைந்து தூய்மை பெற வேண்டும். தண்ணீர் பருகினால் தாகம் அடங்க வேண்டும் என்பது இயற்கை, அதற்கு மாறாக இருப்பின் அது உடல் நல மின்மையைத்தான் உணர்த்தும். அது போல் நாம் ஆலயங்களில் அருளாக்கத்தை உணர முடியவில்லையெனில் அது நம்முடைய மனக் கோளாறுகளைத் தாமுணர்த்தும். இம்முறையில் நாம் ஆலயங்களில் அருளாக்கத்தை உண்டு பண்ணவே கோயில்களில் பக்திரசம் ததும்பும் சொற்பொழிவுகள், பக்திப்பாடல்கள் ஆகியவற்றை நடத்தி வருவதுண்டு.

இந்த வகையில் நாமெல்லோரும் இறைவன் அருட்கடலில் திளைக்க வேண்டுமென்ற பெரு நோக்குடனேயே காரைநகர் மணிவாசகர் சபை, ஈழத்துச்சிதம்பரம் என்னும் ஆலயத்தில் ஆண்டு தோறும் மணிவாசகர் விழாவைத் திருவாதிரை நாட்களில் கொண்டாடி வருகிறது. இவ்விழாக் காலங்களில் கல்வியறிவு ஒழுக்கங்களில் மேம்பட்ட பெரியோர்கள் பலரைத் தாய்நாடாம் இந்தியாவிலிருந்து வரவழைத்தும் உள்ளூர் அறிஞர்களை அழைத்தும் மணிவாசகப் பெருமானின் அருள் மொழிகள் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றுவித்தும், விழா மலர்கள் வெளியிட்டும், மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்க ஆண்டு தோறும் சமயபாடப் பரீட்சைகள் வைத்துப் பரிசில்கள் வழங்கியும், இவ்வாண்டில் சிறப்பாக கவிதைப் போட்டி வைத்துப் பரிசில்கள் நல்கியும் தொண்டாற்றி வருகிறது.

இவ்வாண்டு வெளியிடும் இவ்வெள்ளி விழா மலர் ஈழம், தமிழ்நாடு என்னும் இரு நாட்டையும் சேர்ந்த சிறந்த சைவத் தமிழ் அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்டு மிளிர்கின்றது இம் மலருக்கு ஆசிச்செய்தி அனுப்பியுள்ள தருமை ஆதீனகுருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்கட்கும், நல்லையாதீனகுருமகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும், மற்றைய சபைகளுக்கும், வாழ்த்துக்கவி புனைந்துதவியும், கட்டுரைகள் தந்தும், விளம்பரங்கள் உதவியும், அவ்விளம்பரங்கள் சேகரிக்க ஒத்துழைத்தும் இம்மலர் சிறப்பாய் அமைவதற்கு அதனை அச்சிட்டு உதவிய காரைநகர் பாலா அச்சகத்தார்க்கும் மலரின் முன் அட்டையை அழகுற அமைத்துத் தந்த சுன்னாகம் அச்சகத்தார்க்கும் மற்றும் இம்மலர் சிறக்கப் பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த அன்பர்கட்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்,

**மணிவாசக சபையார்.**

காரைநகர்.

*30 - 12 - 79*

WITH BEST COMPLIMENTS

OF

C. V. BHATT

WITH BEST COMPLIMENTS

of

SITHY

NO 537, MAIN STREET

KANDANA

அன்பளிப்பு

# நியூ சிறி ஸ்ரோர்ஸ்

( பலசரக்கு வியாபாரம் )

இல 17ஏ மார்க்கட் ரேட் பாணந்துறை

அன்பளிப்பு

## ரட்ணம் ஸ்ரோர்ஸ்

(சாய்ப்புச் சாமான்கள் வியாபாரம்)

இல; 260 பிரதான வீதி,

பாணந்துறை.

உரிமையாளர்: எம். சபாரத்தினம்

அன்பளிப்பு

## ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்

இல 271 பிரதான வீதி,

பாணந்துறை.

WITH BEST COMPLIMENTS OF

# P. K. PARAMANATHAN & CO

109 OLD MOOR STREET

COLOMBO - 12

IMPORTERS EXPORTERS AND MILLERS & COMMISSION AGENT

Tele Phone: 33863

T. grams: *SRIDHARAN*

WITH BEST COMPLIMENTS OF

IMPORTERS & WHOLESALE INDENTERS

# INTER - TEND CO

## 127 NEW CHETTY STREET

## COLOMBO 13

T. P. 34688 T. grams: *POOMBUKAR*

# அன்பினில் விளைந்த ஆரமுது

முத்தமிழ் அரசு, சைவச்செங்கதிர், வித்துவான்,
புலவர் இரா. செல்வக்கணபதி எம். ஏ.
பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம், மாயூரம்.

## சிந்தனை ஓட்டம்:

நெகிழ்ச்சியும், உருக்கம், அருளனுபவ வெளிப்பாடும் திருவாசகத்துள் காணப்படுவன போல், தமிழ் நூல்களுள் யாண்டும் காணப்படவில்லை. இதனை, ஓர் அன்பிலக்கியம் எனவும், அருளனுபவப் பெட்டகம் எனவும் சான்றோர் பலரும் பாராட்டிப் போற்றுவர். அறிவியலும் - அருளியலும், இன்பியலும் - உலகியலும் திருவாசகத்துள் காணப்படினும், அன்பின் இயல்பைத் திருவாசகம் ஏதோ ஒரு நோக்கில் விரிவாக வரையறுத்திருக்கவேண்டும். இல்லையென்றால், அன்புக் கருவூலமாக-அன்புப்பிழம்பாக - அன்பின் பயனாக இதனைத் தண்டமிழ்ச் சான்றோர் பெரிதெடுத்துப் போற்றியிருக்க இடமில்லை. திருவாசகத்துள் அன்பியல் பொங்கும் அருமைப்பாட்டை ஒரு கோணத்தே நின்று பார்க்கும்போது ஏற்படும் புதுமைகள் எவ்வளவு நலமுடையனவாக நம்மை ஈர்க்கின்றன! அதைக்காண முயலும் முயற்சியில் நம் சிந்தனை ஓட்டத்தை எங்கெங்கோ கொண்டு செல்கிறோம்.

## சுவையனுபவம்:

நுண்பொருள்களை அறிவிற்கே புலப்படுவன எனவும், அனுபவத்திற்கு மட்டுமே வருவன எனவும் இரண்டு வகைப்படுத்தலாம். கற்கண்டின் சுவைபற்றி ஒருமணிநேரம் விளக்கமுடியும்; என்றாலும், கேட்பான் நாவில் கற்கண்டின் சிறு கூறு படும்போதுதான் சுவையனுபவம் நிறைவு பெறமுடியும். பொதுவாகவே, நாம் ஒட்டி உறவாடும் பொருள்களையும், நம்மோடு மிகநெருங்கிய தொடர்புடையாரையும் ஆராய்வதும் இல்லை, ஆராய முற்படுவதுமில்லை. குணங்களும் - சுவைகளும் நமக்கு மிக உறவுடையன. ஆயினும்அவற்றை இன்ன இலக்கணத்த என வரையறுத்துக்காட்டவோ, தெளிவுபடவுணர்த்தவோ நாம்முயன்றதே இல்லை. இந்தக் குறைபாடே அன்பியல் பற்றி ஆராயத் தடையாக நிற்கிறது. அன்பாவது யாது என்ற வினாவிற்கு ஒரு சரியான வடிவத்தை வரையறுத்துக் கொண்டாலன்றி அவ்வியல் பற்றிய திருவாசகக் கண்ணோட்டம் முழுமையாக அமைய முடியாது. அன்பை அறியாதார் யார்? நம்மால் நாளும் நாளும் உணரப்படுவதாகிய அன்பை, நாம் உணர்ந்த அளவு; இலக்கணங்காட்டி விளக்கும் வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. பின், அன்பினை விளக்குவதுதான் எங்ஙனம்? நம் சிந்தனை ஓட்டத்தில் எண்ணற்ற செந்தமிழ் இலக்கியங்கள் நிழலாடுகின்றன' எங்கேனும் அன்பு விளக்கப்பட்டிருக்கிறதா?சிந்தனையைக் கூர்தீட்டுகிறோம்.

## முப்பாலுள் ஏமாற்றம்:

'எல்லாப்பொருளும் இதன் கண் உண்டு' என்ற நினைவோடு திருக்குறளில் 'அன்புடைமை' என்ற அதிகாரமே அமைந்திருப்பதை நினைக்கிறோம். 'வாய்மை எனப்படுவது யாதெனின்' என வினவி விடைதரும் ஆசிரியர், 'பழமை எனப்படுவது யாதெனின்' எனக்கேட்டு மறுமொழிதரும் வள்ளுவப்பெருந்தகை, 'பேதைமை என்பதொன்று யாதெனின்' என வினவிக் கொண்டுவிளக்கும் அற இலக்கிய முதல்வர், அன்பாவது யாதென விளக்குகிறாரா என விரைந்தால், அங்கும் ஏமாற்றமே நிற்கிறது. அன்பின் சிறப்பும் - அன்பின்மையால் விளையும் தீமைகளும் சுட்டப்படுகின்றனவே தவிர அன்பிலக்கணம் அங்கே விளக்கப்பெறவில்லை. 'ஆர்வலர் புன்கணீர்' பற்றிய குறிப்புக்கூட

அன்பின் மறைக்கமுடியா இயல்பினை விளக்க வருகிறதேயன்றி, அன்பின் இலக்கணமாகக்கொள்ளப் பயன்படவில்லை.

## நிறைவுதாரா நெய்தற்கலி:

ஆற்றுதல் - போற்றுதல், அறிவு - செறிவு, நிறை - முறை போன்ற நுணுக்கப் பண்புகளை விளக்கும் நெய்தற்கலி, அன்பினைப் பற்றிச் சிறு குறிப்புத் தருகிறது. 'அன்பெனப்படுவது தன் கிளை செறாஅமை' என்ற அக்குறிப்புக்கூட, தெருளாத அகப்பொருள் தலைவனைத் தெருட்டித் தலைவியை அவனொடு கூட்ட முயன்ற தோழியின் அப்போதைக்குபகாரப்படும் விளக்கமாக அமைகிறதேயன்றி நிறைவு பெற்றிருக்கவில்லை.

## இலக்கண உறவு:

பாலை நிலமாவது யாது என்ற குறிப்பினைத் தொல்காப்பியம் தரவில்லை. ஆனால், பின் தோன்றிய சிலம்பு நில அமைப்பை அழகுபட அமைத்துக்காட்டுகிறது. இலக்கணத்திற்கு - இலக்கியம் அங்கே நலஞ்சேர்ந்தது போல, அன்பாவது யாதென்ற இலக்கிய ஆய்வு வினவிற்கு, ஓர் அகப்பொருள் இலக்கணநூல் திட்டவட்டமான விடைதந்து நிறைவு செய்யும் அருமைப் பாட்டை நினைக்கையில் இலக்கண - இலக்கிய உறவின் இன்றியமையாமை நம்முள் உறுதிபூத்துத் துலங்கக் காண்கிறோம்.

## களவியல் அன்பு:

பொருளிலக்கண நூல் பெறாது கவன்று நின்ற பாண்டி மன்னனுக்கு ஆலவாயில் அழல் நிறக்கடவுள் கருணை மீதூர்ந்து அருளிய பெருஞ் சிறப்புடையது; களவும் கற்புமாக அறுபது நூற்பாக்களானியன்ற 'இறையனார் களவியல்' என்ற அருநூல். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கடைச்சங்கத்தின் தலைமைப் புலவராக விளங்கிய நக்கீரர் பெயரால் அந் நூற்கு அமைந்த செந்தமிழ் நலமிக்க பேருரையில், நாம் காணவிழைந்த அன்பின் இலக்கணத்தைப் பூரணமாகக் காண்கிறோம். அகப்பொருள் தலைவன் தலைவியரிடையே எழும் காதல் அன்பினையே நக்கீரர் உரை விளக்க வருகிறது. குடத்துள் விளக்கிருக்கலாம்; வெளியில் தெரியாது. நம்ப மறுப்பானைத் திறந்து காட்டி இதோ பார் இதனுள் விளக்கு என அறிவிக்கலாம். நெஞ்சகத்து அன்பை அங்ஙனம் திறந்து காட்ட முடியுமா? நக்கீரர் வினவுகிறார். பின், அன்பினை அறிவதுதான் எங்ஙனம் என்ற வினவிற்கும் அவரே விடை தருகிறார்.

"அன்பாவது......, குடத்துள் விளக்கும் தடற்றுள் வாளும்போல, இதுகாண்அன்பு என்று போதத்திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணங்கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற் பாற்று" எனவே அன்பை அதற்குரிய குணங்களின் வெளிப்பாட்டால் அறியக்கூடுமெனப் பேசவரும் நக்கீரர் மேலும் விளக்குவார்.

"அன்புடையரான குணம் யாவையோ எனின் (1) சாவிற்சாதல் (2) நோவில் நோதல் (3) ஒண்பொருள் கொடுத்தல் (4) நன்கினிது மொழிதல் (5) புணர்வு நனி வேட்டல் (6) பிரிவு நனி இரங்கல் என இவை".

ஒத்த அன்புடையார் எனப் பாராட்டப்படும் தலைவன் - தலைவியரிடை நிகழும் அன்பின் திறத்தை அனுமானித்துக்கொள்ள மேற்கண்ட ஆறு நிலைக்களன்களை வகுத்துக் காட்டுகின்றார். 'தன்னுயிர் கொண்டு அவன் உயிர் தேடுநள்போல்' 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என உயிர் நீத்த பாண்டிமாதேவியின வாழ்வில் அன்பின் வெளிப்பாடு 'சாவிற்சாதல்' என்ற நிலைக்களத்தே வைத்து உணர்ந்து கொள்ளப்படுகிறது. தலைவனின் துயரத்திற்குத் தான் நோதலும், தனக்குரிய உடைமைகளை எல்லாம் அவனுக்கே ஈந்துவிடும் பேரன்பும், தலைவனுடைய பெருஞ் சிறப்புக்களைப் பலப்பட எடுத்தியம்பி நிறைவுகாணும் காதல் நெஞ்சம், அவனோடு கூடி மகிழ

எண்ணும் பெருவேட்கையின் வெளிப்பாடும், அவனைப் பிரிந்துறையும் காலத்தே அப்பிரிவாற்றாது கழிபெரும் ஆற்றாமை கொண்டு புலம்புதலுமாகிய நிகழ்ச்சிகளின் நிலைக்களத்தின்மீதே ஒரு தலைவியின் அன்புடைமையின் ஆழத்தை அறிந்துகொள்ள முடியுமென்ற நக்கீரரின் விளக்கந்தான் எத்தனை ஆழமுடையதாக விளங்குகின்றது.

## அகவியலும் அருளியலும்;

குறைவிலா நிறைவாய் விளங்கும் இறைவன் ஒருவனே தலைவன் எனப்படுவான். சிற்றறிவும், சில வாழ்நாளும் பெற்ற உயிர்கள் யாவும் அவன் முன்னிலையில் தலைமை இழந்து, அவன் திருவடிப் பேறெய்த முயலும் முயற்சியும், வேட்கையுமுடைய தலைவியர்களாகவே விளங்குகின்றன என்பதுவும் அருளாளர்கள் வலியுறுத்தியிருக்கும் சமயக் கோட்பாடுகள் என அறிகிறோம். புற உலகத்தே ஆடவர் - பெண்டிரிடையே தோன்றும் அன்பிற்கு வகுத்த அதே இலக்கணத்தை அகவாழ்வாகிய அருளியல் வாழ்விலும் கொண்டு கூட்டி ஆராய முற்படுதல் மிகப் பொருத்தமாகவே அமையும்.

ஒப்பற்ற ஆன்மநாயகனாகிய சிவபெருமான் திருவடிக்கு மாணிக்கவாசகராகிய நாயகி வைத்த அன்பை மேற்கண்ட அன்பிலக்கணத்தோடு தனித்தனி இணைத்துக் காண்கையில் திருவாசகத்தே அன்பியல் நுட்பமாகவும் - விரிவாகவும் அமைந்து கிடக்கும் பாங்கு நம் நெஞ்சத்தே தேன் பாய்ச்சிச் சிலிர்க்க வைக்கிறது.

## சாவாமூவாப்பெரியன்:

அகவாழ்விற்கு - காதல்வாழ்விற்கு உரைத்த அறுவகை அன்பின் நிலைக்களன்களுள் 'சாவிற்சாதல்' என்ற ஒன்று அருளியல் அன்பில் வீழ்ந்து படுகிறது. சாவாமூவாப் பெரியனாகிய சிவபெருமானுக்குமுன் 'சாவிற்சாதல்' என்ற இலக்கணம் வலிவிழந்ததனால். அஃதொழித்து எஞ்சிய ஐந்து நிலைக்களன்களிலேயே மணிவாசகர் காட்டும் அன்பின் ஆழத்தை உணர முடிகிறது.

## ஐயமும் தெளிவும்:

ஒருகோணத்தே நின்று திருவாசகப் பாடல்களை ஆராய்ந்தால், இந்த ஐந்து நிலைக்களன்களுக்குள்ளேயே அனைத்துப் பாடல்களும் சென்றமைந்து திருவாசகமே அன்பியல் நூல் என்ற முடிவை நமக்கு வழங்கும் என்பதிலே ஐயமில்லை. நக்கீரருடைய இலக்கணமே, திருவாசகத்தில் மிளிரும் அன்பின் திறங்கண்டே அமைத்துக்கொள்ளப்பட்டதோ என்ற ஐயம்கூட எழுகிறது. இறையனார் களவியல் உரை, மிகப் பிற்காலத்தே திருத்தி அமைக்கப்பட்டது என்ற கருத்தும், திருவாசகம் மூவர் தேவாரத்திற்கும் முற்பட்டது என்ற கருத்தும் உறுதிப்படுமானால், இந்த ஐயம் உண்மையாகவேகூட அமைந்துவிட இடமுண்டு என்றே நம்பமுடியும்.

சிறு கட்டுரைக்கண் அனைத்தையும் வகைப்படுத்தித் தொகுத்தல் இயலாது என்பதுமட்டுமன்று, தேவையற்றதும் என்பதால் அன்பின் நிலைக்களன்களின்மீது ஒன்றிரண்டு திருவாசகப் பாடல்களை, அல்லது வரிகளைக் கோடிட்டுக் காட்டுவதே திருவாசகச் சிந்தனையுள் திளைப்பார்க்குப் போதுமானது என்று கருதுகிறேன். அந்த முடிவில்'நோவில்நோதல்' என்ற நிலைக்களத்தை நோக்குகிறோம்.

## புண்சுமந்த பொன்மேனி:

தன்னளவில் நோதல் என்பது இறைவனுக்கு இன்றேனும், அன்பு நெஞ்சம் அவன் நொந்து வாடுவதாகக் கருதி, தானும் நோவதனை உலகியல் வாழ்விலும் காணமுடிகிறது.

விண்சுமந்த கீர்த்தியும், பெண்சுமந்த பாகமும் கொண்டு நெற்றிக்கண் சுமந்த கடவுள் தன் பொருட்டு மண்சுமந்தானே என்ற ஆற்றாமையால் விளைந்த கழிவிரக்கமும், மண் சுமந்த பொன்

மேனி புண் சுமந்ததே என்ற நெஞ்சத்தின் அழுகையும் அவன் நோவிற்குத் தானும் நொந்து அழியும் மணிவாசகரின் அன்பினை அற்புதமாக எடுத்துக்காட்டும் பாங்கினை அம்மானை விளங்குகிறது.

''பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்''

என்ற பாடலில் இறைவன் திருமேனி புண்பட்டு நொந்ததாக அன்பால் கருதித் தானும் நோகும் மணிவாசகரின் அன்பின் வெளிப்பாட்டைக்கண்டு மகிழ்கிறோம். மயிலுக்குப் போர்வையும், முல்லைக்குத் தேரும் ஈந்த வள்ளல்களின் செயல்களிலே காணப்படும் நோவில் நோதல் திருவாசகத்துள் இறையன்பாக மலர்வதை அறியமுடிகிறது.

## ஒண்பொருள் கொடுத்தல்

'வஞ்சித்தென் வளை கவர்ந்தான்' என்ற தொடரும் 'தன் நாமம் கெட்டாள்' என்ற தொடரும் விளக்கும் கருத்துக்களில் தனக்கென ஏதுமின்றி யாவும் தலைவனுக்கே என்று அர்ப்பணித்துவிடும் பேரன்பைப் பார்க்கிறோம். அப்பர் பெருமானின் இத்தொடர்களிலும் ஓர்படி மேலே சென்று மாணிக்கவாசகர் ஒண்பொருள் கொடுத்து அன்பு செய்யும் நெருக்கத்தைக் கண்டு உள்ளம் நெகிழ்கின்றோம். ஒண்பொருள் கொடுத்தல் என்ற நிலைக்களத்திற்கு முழுமையான இலக்கியமாகத் திகழும் திருவாசகம் நெஞ்சில் தானே வெளிப்படுகிறது. குருந்தமர நிழலில் உன் கோலத்திருமேனி காட்டி என்று ஆட்கொண்டாயோ அன்றே யாவும் நினதாக்கினேன்' என்ற மணிவாசகத்துள் அன்பின் ஆழத்தை இனங்கண்டுகொள்கிறோம்.

'அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்டபோதே கொண்டிலையே
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே'

என்று மணிவாக்கில் அன்பு பூத்துக்குலுங்கிப் பொலிவதனைக் கண்டுகொள்ள முடிகிறது. 'தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை' என வேறிடத்தும் பலபடப் பேசும் மாணிக்கவாசகரின் அன்பினை 'ஒண்பொருள் கொடுத்தல்' என்ற நிலைக்களத்தே அறிகிறோம்.

## நன்கினிது மொழிதல்

தன் நாயகனின் பேரியல்புகளை நன்கெடுத்து மொழியும் தலைவியின் நெஞ்சிலேயே திருவாசகத்தை அடக்கிவிட முடியும். ஆன்மநாயகனாகிய சிவபெருமானின் புகழ் பேசுதலன்றி திருவாசகத்துள் வேறென்ன உண்டு! இறைவனது வியத்தகு செயல்களை வியக்கும் மணிவாசகரின் நெஞ்சத்தில் 'நன்கினிது மொழிதல்' என்ற நிலைக்களன் அன்பிற்கு வகை செய்வதைக் காண்கிறோம் சிவபெருமானின் அளவிறந்த ஆற்றல்களுக்கு இப்படி எத்தனை எத்தனையோ திருப்பாடல்கள் உண்டு.

''விச்சகின்றியே விளைவு செய்குவாய்
வண்ணும் பண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்சகப் பெரும்
புலையனேனை உன் கோயில் வாயிலில்
பிச்சனாக்கினாய்; பெரிய அன்பருக்கு

உரியனுக்கினும்; தாம் வளர்த்ததோர்
நச்சுமாமரம் ஆயினுங் கொலார்
நானும் அங்ஙனே உடையநாதனே''

'வஞ்சகனுய என்னைக்கூட மாற்றி உன் திருவடிக்கு அன்புசெய்ய வைத்த உன் ஆற்றலே ஆற்றல்' என வியக்கும் வியப்பில் திருவாசகத்தின் அன்பியற் புலப்பாடு வெளிப்படுகிறது.

## புணர்வுநனி வேட்டல்:

'என்பொல்லா மணியை நான் புணர்ந்து நிற்றல் எப்போது' என விளவும் பல்வேறு திருப்பாடல்கள் 'புணர்வு நனிவேட்டல்' என்னும் அன்பின் நிலைக்களனுக்கு அரண் சேர்க்கின்றன. மணிவாசகரின் இந்த விரைவை,

'நெக்கு நெக்குஉள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி
திகழநோக்கிச் சிலிர் சிலிர்த்துப்
புக்குநிற்ப தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே'

என்ற திருவாசகம் எவ்வளவு உணர்வும் விரைவும் காட்டி விளக்குகிறது என்று கண்டு நிறைவும் நிறைவில் அன்பியல் தெரிகிறது.

## பிரிவுநனி இரங்கல்:

தலைவன் பிரிவுக்கு இரங்கும் தலைவியின் ஆற்றுமையிலேயே அகப்பாடல்களின் பெரும் பகுதியாகிய பாலைப் பாடல்கள் கிளைத்தன என்பர் ஆய்வாளர். ஒன்றைப் பெருர்படும் வேதனையினும், பெற்றுப் பிரிந்தார்படும் வேதனையே மிக்கது என்பதனை அறிந்த நமக்கு 'பிரிவு நனியிரங்கல்' என்ற நிலைக்களத்தின் மேல் திருவாசகத்தை வைத்தெண்ணி இனங்கண்டு தெளிவதிலே கடுமையிருக்க முடியாது. பிரிவில் வரும் இரக்கம் தன்னை அவனெடு ஒப்பிட்டு இரங்குதலினும் தன் நிலைக்குத் தானே இரங்குதலினும் - தடுமாற்றத்தினும் விளைவதைக் காதற் பாட்டுக்கள் நன்கெடுத்து இயம்புகின்றன. ஒரு தலைவியின் கழிபெரும் பிரிவிரக்கத்தை மாணிக்கவாசகர் விளம்பும்போது நாமும் அவர் உணர்வுகளோடு கலந்து உருகி அழுகிறோம். அதுதானே திருவாசகத்தின் சிறப்பு,

'உரியேன் அல்லேன் உனக்கடிமை;
உன்னைப் பிரிந்திங் கொருபொழுதும்
தரியேன் நாயேன்; இன்ன
தென்றறியேன்; சங்கரா கருணையினுல்
பெரியோன் ஒருவன் கண்டுகொள்
என்றுன் பெய்கழல் அடிகாட்டிப்
பிரியேன் என்றென் றருளிய
அருளும் பொய்யோ எங்கள் பெருமானே.

இறைவன் அருளைக்கூடப் பிரிவாற்றுமையால் 'பொய்யோ' என வினவவைக்கும் தடுமாற்றத்தை அன்பின் வெளிப்பாட்டில் நிறுத்திக்காட்டும் இத்திருப்பாட்டு நெஞ்சு நிறைந்த அருட்பாட்டாகவே அமைகிறது.

இங்ஙனம் வகைப்படுத்தித் திருவாசகத்தை ஊடுருவி நோக்கும்போது களவியல் உரை காட்டும் அன்பிலக்கணம் முழுதும், இலக்கியமாகத் திருவாசகத்துள் விரிவது தெரிகிறது. முழுமையான அன்பின் இயல்புணர்த்தும் திருவாசகத்தை அன்பிலக்கிய அருள் நூல் என்னுது வேறு எங்ஙனம் அழைப்பது?

# அப்பர் காட்டும் புழு

வித்துவான் க. முருகேசனார்
முன்னைநாள் தமிழ் விரிவுரையாளர்
காரை இந்துக்கல்லூரி, காரைநகர்.

புழுவுக் குங்குணம் நான்கெனக் கும்மதே
புழுவுக் கிங்கெனைக் குள்ளபொல் லாங்கில்லை
புழுவி னுங்கடை யேன்புனி தன்தமர்
குழுவுக் கெவ்விடத் தேன்சென்று கூடவே

இதன் பொருள்:-

புழுவுக்கும் குணம் நான்கு - (என்பிலவாகிய ஓரறிவுடைய) புழுவினுக்கும் தன் உடலுக்குறுதிபயப்பனவாகிய நற்குணங்கள் நான்கேயாம்,

எனக்கும் - என்போடியைந்த தொடர்போடுகூடி ஆறறிவுடைய உயிருக்கு உறுதி நாடும் அடியேனுக்கும்,

அதே - அந்நற்குணங்கள் நான்கும் உள்ளன.

புழுவுக்கு - ஓரறிவோடு உடலோம்பும் புழுவினுக்கும் என்போடியைந்ததொடர் போடுகூடி ஆறறிவுடன் உயிரோம்பும் எனக்கும் இந்நான்கு நற்குணங்கள் பொதுமையினிருப்பினும் இந்நான்கு நற்குணங்களான ஓரறிவோடுகூடி உடலோம்புதல் செய்யும் புழுவினுக்கும்,

இங்கு - இம்மாயாகாரியமாகிய உலகத்தில்,

எனக்கு - ஆறறிவோடுகூடி உயிரோம்பும் சிறப்புடைய அடியேனுக்கு,

உள்ளபொல்லாங்கில்லை - அந்நான்கு பெருங்குணங்களால் உடலை ஓம்பிக்காக்கும் புழுவினுக்கு அந்நாற்பெருங்குணங்களான் உயிரைப் பாதுகாவாமை யானுளவாம் குற்றம் போன்ற பொல்லாங்குகள் இன்றாம்

புழுவினுங்கடையேன் - ஆதலால் ஓரறிவுடைய புழுவிற்கு இக்குணங்களின்மையால் அப்புழுவைக்காட்டினும் கடைப்பட்டவனாகிய நான்,

புனிதன் அமர் - அநாதி முக்தசித்துருவாதலாற் றூயவுடம்பினனாகிய இறைவன் விரும்பப்பட்ட,

குழுவுக்கு - ஞானத்தைப்பெற்று ஞேயத்தைக் கண்ட சீவன்முக்தராகிய அணைந்தோர் மாலரன் நேயமலிந்தவர் வேடத்தை யரனெனக் கண்ட அக்கூட்டத்தினுள்

சென்றுகூட - போய்ச்சேறற்கு,

எவ்விடத்தேன் - எத்தன்மையாகிய பரிபக்குவத்தை யுடையேனுவேன் என்க

குறிப்பு - புழுவினுக்குள்ள நான்கு குணங்களாவன:-

1. ஒன்றைப்பற்றி ஒன்றைவிடல்
2. நோக்கிற்றே நோக்கல்
3. விருப்பு வெறுப்பின்றித் துய்த்தல்
4. இடையறவு படா முயற்சி

என்பனவாம்

(1) ஒன்றைப்பற்றி யொன்றைவிடல்:-

இந் நாற் பெருங் குணங்களையுடையவாய் என்பிலவாகி இயங்குஞ் செயலுடைய ஓரறிவுயிராகியபுழு தன்னுடல் ஓம்புதற்பொருட்டு வலியுளவாகிய பற்றுக்கோடொன்றனைப்பற்றி பின்னர்த்தான் பற்றிய பற்றை விடுமாதலால் அதனினும் ஐயறிவுமிக்கு உயிரோம்பும் யான் என்றும் அழிதலிலவாகிய இறைவனடியாகிய பற்றினைப் புற்று அழிதன்மாலையவாகிய மாயாகாரியப் பொருள்களைப் பற்றுக் கோடாகப் பற்றிப் பற்றற்றான் பற்றைத் துறந்தேன் ஆதலானும்

(2) நோக்கிற்றே நோக்கல்:-

அப்புழு தன்னுடலோம்புதற் பொருட்டு கைப்பினையுடைய வேம்பைத் துய்க்குஞ்ஞான்று கரும்பு வந்து தலைப்படினும் அக்கரும்பை நமக்குரித்தல்லவென்றுணர்ந்து பயிற்சிவயத்தான் முன்னர்த்துய்த்த வேம்பினைத்துய்க்கும் யான் பலபிறவியினும் பழகிய பயிற்சிவயத்தான் இன்பச்சேற்றின் மூழ்கி இறுமாந்திருக்குங்காலத்து இறைவன் கைமாறிலாக் கருணையான் பக்குவ முணர்ந்து சிவாநுபவத்தை யேய்ப்பினும் பயிற்சி வயத்தான் அருமையறியாததனை வெறுத்து நோக்கிற்றே நோக்கி உயிரைப் பாதுகாவாமையானும்,

(3) விருப்பு வெறுப்பின்றித்துய்த்தல்:-

அப்புழு ஆன்மாக்களின் பிராரத்த கன்மத்துக்கிடாக நியதிதத்துவத்தான் வரையறை செய்த போகத்தை விருப்பு வெறுப்பின்றித் துய்த்து உடலோம்புதலாகிய உறுதிப்பொருளைத் தேடும் நற்குணமுடையது. அதனினும் ஐயறிவு மிக்க நான் உடம்பு முகந்து கொண்ட பிராரத்தவினைக்கிடாக இறைவனால் நியதிசெய்த போகத்தை இருவினையொப்புவாய்ந்து துய்க்காது விருப்பு வெறுப்புச் செய்து முனைந்து உயிரோம்பாது சாதலினால் நானே பிரமம் எனக்கழறித்திரிதலானும்,

(4) இடையறவு படாமுயற்சி:-

அப்புழு உடலோம்புதற் பொருட்டு உணவு கருதி பகலினு மிரவினும் மடிந்திராது முயன்று போகந்துய்த்து இன்புறும் குணமுடையது யானோ உயிரோம்புதற் பொருட்டு அரிதின் முயன்று அடைதற்பாலதாகிய உயிருக்கு உறுதி பயக்கும் திருவடியின்பினை முயன்று பெற்று இன்புறாது பேய்த்தேரினை நீரென முகக்கும் பேதைபோல வினைக்கிடாக அமைந்து கிடக்கும் உலக இன்பினை முயன்றெய்தி இன்புற்று உயிரோம்பும் முயற்சி யின்றி மடிந்து கிடந்து நரகினைக் காணியாகக்கொள்ளும் அறியாமையானும் வருந்திஉழலுதலை நோக்கி நாவரசர் பெருமான் ''புழுவுக்கிங் கெனக்குள்ள பொல்லாங்கில்லை'' என்றார்.

# பண்டை மகளிர் விளையாட்டுக்கள்

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

இயற்கையிலேயே மென்மையான இயல்புகளுக்கு உறைவிடம் பெண்மக்களாவர். இக்காரணம் பற்றியே மெல்லியலார், பூங்கொடியார் என்றெல்லாம் பெண்களைக் காரணப் பெயரிட்டு அழைக்கின்றார்கள்.

தேனின் கசிவந்த சொல்லை உடைய இம்மெல்லியலார்கள் முற்காலத்தில் தங்கள் பெரும் பொழுதை எப்படிப்போக்கினர்? தங்கள் உடல்நலன் செம்மையுற எத்தகைய விளையாட்டுக்களை மேற்கொண்டனர் என்று ஒருசிறிது நின்று நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அதோ! விண்ணர மகளிர் மண்மிசை போந்தது போன்று எங்கு பார்த்தாலும் மகளிர் கூட்டம் ஆணிப்பொன் மாலைகள் அசைய அணிமேகலைகள் ஆர்ப்ப, மின்னலை நிகர்க்கும் பொன்னங் கொடியார் முன்னும், பின்னும் எங்கும் பரந்து சென்று துள்ளி ஓடி அந்தரத்தில் பந்துகளை அடித்து விளையாடுகின்றனர்

''வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண்டி யாழ்செய் குற்றாலம்.''

''பொடிகள் பூசித் தொண்டர் பின்செல்லப் புகழ் விம்மக்
கொடிகளோடும் நாள்விழ மல்கு குற்றாலம்.''

''பெருந்தண் சாரல்வாழ் சிறைவண்டு பேடை புல்கிக்
குருந்தம் ஏறிச் செவ்வழி பாடுங் குற்றாலம்.''

என்றெல்லாம் திருஞானசம்பந்தப் பெருமானால் புகழப் பெறும் திருக்குற்றாலத்துறை குறும்பலா ஈசர் மீது காதல் கொண்ட வசந்தவல்லி பந்து விளையாடும் அழகை நம் கண்முன் நிறுத்துகின்றார் திருகூட ராசப்பக் கவிராயர். பாட்டின் சந்தத்திலே பந்து விழும் ஓசை மெத்தென வந்து நம் செவியில் மோதுகின்றது.

1. செங்கையில் வண்டு கலின் கலினென்று செயஞ்செய
   மென்றாட இடை

   சங்கத மென்று சிலம்பு புலம்பொடு தண்டை
   கலந்தாட இரு

   கொங்கை கொடும்பகை வென்றன மென்று குழைந்து
   குழைந்தாட மலர்ப்

   பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
   பந்து பயின்றாளே.

2. இந்திரையோ இவள் சுந்தரியோ தெய்வ ரம்பையோ
   மோகினியோ மன

முந்தியதோ விழிமுந்தியதோ காலமுந்திய
தோவெனவே உயர்
சந்திர ஆடர் குறும்பல வீசுரர் சங்கணி
வீதியிலே மணிப்
பைந்தொடி நாரி வசந்தவொய் யாரி பொற்
பந்துகொண் டாடினளே.

நன்றியில் நனைந்த உள்ளங்களின் வெளிப்பாடு இது, இதோ... இங்கே காணும் பாவையர்கள் பாதங்களில் இருப்பன, முத்து, பவளம், மாணிக்கம் இவற்றால் ஆன அம்மனைக் காய்கள். அம்மனை விளையாடுவதே ஒரு தனிக்கலை. மேலே ஒரு தனிக்கலை. மேலே ஒரு காயை விட்டெறிந்து, இரண்டு கைகளிலும் இரண்டு காய்களை வைத்துக் கொள்ள வேண்டும். மேலே எறிந்த காய் கீழ் நோக்கி இறங்கு முன்னம் வலது கையிலுள்ள காயை மேல் நோக்கி எறிந்துவிட்டு, முதலில் எறிந்த காயை வலக்கையில் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல மேல்நோக்கி எறியப்பெற்ற, வலதுகைக் காய் கீழ்நோக்கி இறங்கா முன்னம், இடது கையிலுள்ள காயை மேல்நோக்கி வீசிவிட்டு, இறங்கும் காயை இடக்கையில் ஏற்க வேண்டும். இப்படி மாறிமாறிக் காய்கள் விழாமல் ஆடுவது சுலபமல்ல... பழக்கத்தினால் ஏற்படும் ஒருவகைப் பயிற்சியாலேயே இதனைச் சாதிக்க முடியும். இப்படி அழகும் நளினமும் பொங்க வித்தகத் தன்மையுடன் விளையாடும் இவ்விளையாட்டின் இடையே விடையேறும் பெருமானின் புகழ் மலர்கின்றது.

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

அறைகூவி வீடருளும் அந்தணனானின் தன்மை கண்டு மறுபுறத்தே சென்றால் "உந்தி" விளையாடும் கொந்து குழலார்களைச் சந்திக்கின்றோம். இப்பாவையர்கள் வட்டமாக நின்று பறவை போல நிலத்தில் இரு பாதங்கள் மட்டும் பதிய, இரு கைகளையும் முடக்கி உட்கார்ந்து, பின் விரைந்தெழுந்து இரு கரங்களையும் இரு புறங்களிலும் சிறகு போல நீட்டி, பறவைகள் பறப்பது போல பாவனை செய்து ஓடிச் சென்று வேறோர் இடத்தில் அமர்வார்கள். அங்கிருந்தவள் மீண்டும் ஓடி ஆட்டத்தைத் தொடர்வாள். பெண்கள் ஒருவரை ஒருவர் "உந்தீ" என அழைத்து "பற" என்று ஏவுவார்கள்.

இப் பழம்பெரும் விளையாட்டைக் கருத்துள் கொண்டு திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார், அநாதியாய்த் தோன்றி மயலை விளைக்கும் மும்மலங்களும் ஞானம் தோன்ற நம்மை விட்டு நீங்குமாறு போல (உம் + தீ + பற) "திருவுந்தியார்" என்ற அற்புத நூலைத் தந்தருளார்'

"அகளமா யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென் றுந்தீபற."

"சிந்தையின் உள்ளும்என் சென்னியினுஞ்சேர
வந்தவர் வாழ்க்கஎன் றுந்தீபற."
மடவாள் உடனோஎன் றுந்தீபற"

அடுத்துப்... பொழிலும் பொழிலைச் சார்ந்த இடத்தும் பெண்கள் மலர்க்கொடிகளால் ஊஞ்சல் கட்டி விளையாடி மகிழ்வர். அவ்வாறு இன்னூஞ்சல் ஆடும் பொழுதே ஆங்கு நாயகனைக் கூவி அழைத்து மகிழ்கின்றனர்.

"சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து
நாராயண னறியா நாண்மலர்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா வமுதின் அருட்டாளினை பாடிப்
போரார் வேற்கண் மடவீர் பொன்னூசல் ஆடாமோ."

தெரிவையர் தெள்ளேணம் கொட்டும் ஒலி காற்றில் மிதந்து வந்து நம் செவிப்பறையை மோதுகின்றது. "ஏணம்" என்பது பறை போன்ற ஓர் தோற்கருவி. இதனை ஒரு விரலால் தெறித்தும், ஐந்து விரல்களால் குவித்தும் முழக்குவார்கள்.

ஒரு சாரார், தற்காலத்தில் கும்மி கொட்டுவதைப் போன்ற ஒருவகை விளையாடல் என்பர். கல்லைப் பிசைந்து கனியாக்கும் கண்ணுதற் பெருமானின் அற்புதத் திறத்தைப் பாடி "தெள்ளேணம்" கொட்டிக் களிக்கும் கன்னியரைக் காண்கின்றோம்.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ."

"நல்லார் தந்தோள் வீசு" "நற்சாழல்" என்பார் சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார். பெண்கள் தோள்வீசி ஆடும்பொழுது அம்மனைப் பாடலைப் போலத் தடை விடை முறைகளை அமைத்துப் பாடி விளையாடி மகிழ்கின்றனர். அம்முறையை ஒட்டி, ஈழநாட்டு ஊமைப்பெண்ணை இறை புகழை "திருச்சாழல்" முறையில் பேச வைத்ததன் மூலம் சைவ சமயத்தை வாழ வைத்தார் வாதவூர்ப்பெருமான்.

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ."

இவ்வாறாகப் பண்டைக்கால மகளிர் இறைபுகழ் பாடிப் பொற்சுண்ணம் இடித்தும், பூக்கொய்தும், நீர் விளையாடியும் இமைப்பொழுதும் பிரியாப் பெற்றியனை பிரானின் வண்புகழை சிந்தித்துத் தங்கள் ஆன்மாவிற்கு ஈடேற்றத்தையும், அதேசமயம் உடல் வலிமையும் பெற்றமையை எண்ணும்பொழுது நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை. எத்தனையோ நேரிய சிந்தனை... விளையாட்டாகவே இசைத்துறையில் மூழ்கி முத்தெடுத்த பெண்மக்களின் புதுமைப் போக்கினைப் போற்றி விடை பெறுகின்றேன்.

வணக்கம்.

# "தயாவான தத்துவன்"

கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

'தயாவான தத்துவனே' என்கின்றது சிவபுராணம்.

தத் - அது; துவம் - நீ;

இறைவன் உயிர்க்குயிர். அநாதியிலேயே இறைவன் உன்னோடத்துவிதப்பட்டு, நீயாயிருக்கின்றான். 'அது' என்றது இறைவனை.

அத்துவிதம், பிரிக்க முடியாத இரு பொருட் கூட்டுறவு; உயிர் இறைவனை என்றாயினும் பிரிந்திருப்பதில்லை. உயிரோடு உயிர்க்குயிராகிய இறைவனுக்குள்ளதாய அத்துவிதம் நித்தியமானது.

---

உயிராகிய நீயோ, உன்னோடு அத்துவிதப்பட்டிருக்கும் உயிர்க்குயிரான இறைவனோடு அத்துவிதப்படுகின்றிலை. எப்பொழுதோ ஒரு காலத்தில் இறைவனோடு நீ அத்துவிதப்பட்டே தீர வேண்டும். அதுவே முத்திநிலை.

---

பாவம்! நீயோ அறியாமையாகிய இருளோடு அத்துவிதப்பட்டு, நீ அதுவாய், அஃதாவது துவம் தத்தாய்க் குறுகிப்பட்டுக் கிடக்கின்றாய்.

துவம் - நீ; தத் - அது. இங்கே அது என்றது அறியாமையாகிய ஆணவ இருளை.

---

இறைவன் ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெருஞ் சோதி. பேரொளிப் பிழம்பு. பேரொளியைத் தாங்கும் ஆற்றல் உனக்கின்மையால், உன்னோடத்துவிதப்பட்டிருக்கும் இறையாகிய பேரொளியும் இருள்செய்து விடுகின்றது.

ஒளியும் மிக இருளேயாம் என்பது திருவருட்பயன்.

---

உயிரே, ஒளியும் உனக்கிருள் செய்ததாயின் உன் கதி என்னாகும்! நீ படுகுருடாய் விட்டாயே. உனக்கு உய்தி இல்லைப் போலும் என்று ஏக்கமுறும் போது தேற்றரவு செய்கின்றது திருவருட்பயன்.

"ஒன்று மிகினும் ஒளிகவராதேல் உள்ளம்
என்றும் அகலா திருள்"

என்பது இருண்மல நிலையில் ஒரு தேற்றரவு வெண்பா. "ஒன்று மிகினும் ஒளி உள்ளம் கவரும்" என முதல் வரியை அன்வயம் செய்க. 'கவராதேல்' என்பதால் 'கவரும்' என்பது தானே வந்து குதிக்கும்.

ஒன்று - அறியாமை இருள்; மிகினும் - மிக்குமூடியிருந்தாலும், ஒளி - அந்த இறையொளி, உள்ளம் - உயிரை; கவரும் - தன்பால் ஈர்க்கும்.

ஒளி இருள் செய்து கொண்டிருந்ததாயினும், தன்னைத் தணிக்கை செய்து, ஒருவாறு உள்ளத்தை ஈர்க்கும்.

இறைஒளி - சிவசக்தி; அதற்கு இரங்காமலிருக்க மாட்டாமை இயற்கை. இரக்கத்தின் பயன் உயிரைத் தன்பால் ஈர்த்தலாம்.

O O

இறைவன் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன். நள்ளிருள் உயிர் அழுந்திக் கிடக்கும் இருள். நட்டம் - நடனம். பஞ்சகிருத்திய நடனம். நடனப்பயன் இருளோடத்து விதப்பட்டிருந்த உயிரை இருளிலிருந்து எடுத்து இறையாகிய அன்னோடு அத்துவிதமுறச் செய்வதாம். உயிர் இறையோடு அத்துவிதப்படுதலே முத்திநிலை.

O O

'ஆணவத்தோ டத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத் தானுவினோடத்துவிதம் ஆகும் நாளெந் நாளோ' என்ற தாயுமானவரின் ஏக்கம் சிந்திக்கத்தக்கது. மெய்ஞ்ஞானத்தானு உயிர்க்குயிராகிய இறைவன். அது இன்னும் கைகூடவில்லையே என்பது ஏக்கம்.

இறை அத்துவிதம் அநாதி

உயிர் அத்துவிதம் ஆதி என்பது அறிய வேண்டியது.

இறை யத்துவிதம் தத்துவம், அது நீ

உயி ரத்துவிதம் துவம்தத், நீ அது

உயிரே, நீ அநாதியில் இருளாகிய அதுவாயிருந்தாய். முத்திநிலையில் அருளாகிய அதுவாயிருப்பாய் என்றவாறு உயிரே கேட்பாயாக.

இறை யத்துவித விளைவே, உன்னை இருளிலிருந்தெடுத்து, உன்னிலையை, நிலைபெயர்த்து அருளொடு நிலையா அத்துவித நிலையை நல்கியதென்பதை உணர்வாயாக.

இதனாலேதான், இறைவனைத் 'தயாவான தத்துவன்' என்றது சிவபுராணம்.

தயா - தயை, இரக்கம்; இறையொளி - சிவசக்தி; இரக்கமே வடிவமானது.

உயிரை உய்யக்கொள்ளும் தத்துவனின் தயை இருந்தவாறு.

O O

இறையத்துவிதம், தத்துவம் - அது நீ

உயி ரத்துவித மனைத்தும், 'துவம்தத்' - நீ அது

இரண்டிடத்தும் நீ என்றது உயிரை

O O

''அவன்தானாய் அத்துவிதமானபடி மாசகன்று

தான் அவனாய் அத்துவிதமாகுநாளெந்நாளோ''

என்று ஒரு சூத்திரம் புதுவது புனைந்து கொள்ளலாம்.

அவன் - இறைவன் தான் - உயிர்

'மாசகன்று' என்ற தொடர்ப்பொருள் வெகு விசாலமானது.

WITH BEST COMPLIMENTS

FROM

வீட்டிற்குத் தேவையான சகலவிதமான இரும்புத் தளபாட வகைகள்
யன்னல் கிறில்கள், கேட்டுக்கள் என்பன
உங்கள் விருப்பத்திற்கேற்ப குறைந்த செலவில்,
திறமையாகச் செய்பவர்கள்

## சென்றல் இன்டஸ்றியல் என்ஜினியரிங் வேக்ஸ்

இல 70. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

( யாழ் தபாலகத்திற்கு அருகாமையில் )

ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

வீட்டிற்குத் தேவையான சகலவிதமான உயர்தர மரத்தளபாடங்கள்
கண்ணடி அலுமாரிகள், சியென்டர் மெத்தைகள், ஆகியவற்றின்

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:

## வூட்சன்ஸ் தளபாட மாளிகை

38 B காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல; 7700

WITH BEST COMPLIMENTS

*of*

# THE NEHRU PRESS

282 - 284 WOLFENDHAL STREET

COLOMBO 13

31588

*With Best Compliments From*

# V. M. SHANMUGAM & BRO.

GENERAL MERCHANTS & TRANSPORT AGENTS

85, HOSPITAL ROAD,

JAFFNA.

TEL: 657

*BRANCH:*

CITY ARECANUT COMPANY

*74, OLD MOOR STREET,*

COLOMBO - 12

Telephone: *31160*

# மஹாஜன ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

மில்றேட், வவுனியா.

எங்களிடம்

கட்டிடங்களுக்குத் தேவையான உபகரணங்கள், ரசாயனப் பொருட்கள்
தீந்தை வகைகள், டிராக்டர் மற்றும்
தண்ணீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும்

**எஸ் - லோன்**

பைப்வகைகளும் இன்னும் பலவும் பெற்றுக்கொள்ளலாம்

எல்லாவிதமான பிடவைத் தினிசுகளுக்கும்

★ சாறி ★ சூட்டிங் ★ சேட் ★ சன்சூட்

சூட்கேஸ் ★ றேடியோ ★ கைக்கடிகாரங்கள்

மற்றும்

பல பொருட்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

**இன்றே விஜயம் செய்யுங்கள்**

# க. நாகமுத்து அன் சன்

183, பஜார் வீதி, வவுனியா.

# பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

திரு. ம. சற்குணம் எம். ஏ. அவர்கள்
(உள்ளூராட்சி அலுவலகம், மட்டக்களப்பு)

சிவபெருமானுடைய புகழைச் சொல்லும் சைவத் திருமுறைகள் தமிழிலே பன்னிரண்டாக வகுத்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதல் ஏழும் தேவாரம் என்னும் பெயரை உடையன ஞானசம்பந்தப் பிள்ளையாருடையது முதல் மூன்றாகவும், திருநாவுக்கரசருடையது நான்கு, ஐந்து ஆறாகவும், சுந்தரருடையது ஏழாகவும் வகுக்கப்பட்டுத் தேவாரம் என்ற பெயரைக் கொண்டிலங்குகின்றன. மணிவாசகப் பெருமானுடைய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையாகவும், திருமந்திரம் பத்தாந் திருமுறையாகவும், ஆலவாய் இறைவன் திருமுகப்பாசுரம் முதல் காரைக்காலம்மையார், சேரமான் பெருமான் நாயனுர் முதலிய பலர் பாடிய நூல்களின் தொகுதி பதினொராந் திருமுறையாகவும், பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறையாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

இத் திருமுறைத் தொகுப்பில் ஒருவர் பாடியவை பல திருமுறைகளாகவும், பலர் சேர்ந்து பாடியவை ஒரு முறைக்குள்ளும் தொகுக்கப்பட்டுள்ளன. ஞானசம்பந்தப்பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளியவை முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. முதலாந் திருமுறையில் 136 பதிகங்களும், இரண்டாந்திருமுறையில் 122 பதிகங்களும், மூன்றாந்திருமுறையில் 125 பதிகங்களும் அமைந்து காணப்படுகின்றன. இவை பண்முறை வைப்பைக் கொண்டு தொகுக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. முதலாந்திருமுறையில் நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம் தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்முரி என்ற பண்களில் அமைந்த திருப்பதிகங்கள் காணப்படுகின்றன, இரண்டாந்திருமுறை இந்தளம், சீகாமரம் காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்னும் ஆறுபண்களால் அமைந்த பதிகங்களையுடையதாகக் காணப்படுகின்றது. மூன்றாந்திருமுறை காந்தாரபஞ்சமம், கொல்லி, கொல்லிக்கௌவாணம் கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம், புறநீர்மை, அந்தாளிக்குறிஞ்சி என்ற ஒன்பது பண்களையும் கொண்ட பதிகங்களையுடையதாய் உள்ளது.

இதே போல அப்பர் சுவாமிகளுடைய தேவாரங்களும் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டு, அவை நான்காம், ஐந்தாம், ஆறாந்திருமுறைகள் என்ற பெயரைப் பெற்றுள்ளன. நான்காந் திருமுறையில் 113 பதிகங்களும், ஐந்தாந் திருமுறையில் 100 பதிகங்களும், ஆறாந்திருமுறையில் 99 பதிகங்களும் அமைந்துள்ளன. நான்காந்திருமுறையில் அமைந்துள்ள பதிகங்களில், முதல் 21 பதிகங்களும் கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, காந்தாரபஞ்சமம், பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி என்னும் பத்துப் பண்களையும் கொண்டு அமைந்துள்ளன. அடுத்துள்ள 58 பதிகங்களும் திருநேரிசை என்னும் யாப்பிலமைந்த பாடல்களையுடையன. அதன் பின்னுள்ள 34 பதிகங்களும் திருவிருத்தத்தாலானவை, ஐந்தாந் திருமுறை முழுவதும் குறுகிய பாவினமாகிய கலிவிருத்தங்களாக அமைந்து திருக்குறுந்தொகையாகவும், ஆறாந் திருமுறை யாவும் திருத்தாண்டகமாகவும் அமைந்து காணப்படுகின்றன.

ஒருவர் பாடிய பாடல்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டிருந்தாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியவை ஏழாந் திருமுறையாகவும் மாணிக்கவாசகப் பெருமான் பாடியவை எட்டாந் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டிருப்பது போலத் திருமூலர் பாடிய திருமந்திரம் அனைத்தும் பத்தாந் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட பலர் பாடிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாந் திருமுறையாகவும், திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாணுயனார் முதலானோர் பாடிய பாடல்கள் பதினோராந் திருமுறையாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. சேக்கிழார் பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறை என்பது மரபு.

இங்கு மேலே காட்டப்பட்ட திருமுறைத் தொகுப்புக்களை வகுத்தவர் நம்பியாண்டார் நம்பியா அல்லது அவர் வகுத்துக் காட்டியதன் பிரகாரம் பின்வந்தோர் அவர் வழிநின்று திருமுறைத் தொகுப்பைப் பூர்த்தியாக்கினரா என்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. நோக்கம் அதுவாயினும் பெரியளவினதாகிய ஆராய்ச்சியிற் புகுந்து எது சரி எது பிழை என்ற முடிவுக்கு வர நான் முயலவில்லை. எனினும் திருமுறைத் தொகுப்பினைப் பற்றிப் பலரும் பலவிதமாகத் தங்கள் ஆராய்ச்சிகளின் மூலம் நிலைநாட்டிச் சென்றவற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டி அதனை மேலும் ஆன்றோர் ஆராய்தல் வேண்டும் என்ற கருத்துடன் இதனை எழுதலானேன்.

முதல் ஏழு திருமுறைகளையும் நம்பியாண்டார்நம்பி தொகுத்தார் என்றும் ஏனையவற்றைப் பின் வந்தோர் தொகுத்தனர் என்றும் ஒரு சாரார் கூறிச் செல்ல, அவ்வாறன்றிப் பதினொரு திருமுறைகளையும் நம்பியாண்டார்நம்பியே தொகுத்து வகுத்தார் என்று மற்றொரு சாராரும் கூறிச் சென்றுள்ளனர். முதல் ஏழு திருமுறைகளை மட்டும் நம்பியாண்டார்நம்பியே தொகுத்தார் என்பதைப் பின்வருவோர் நிலைநிறுத்த முயன்றுள்ளனர்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் தனது "சேக்கிழார்" (1945) என்னும் நூலில் பக் 76 - 77ல் பின்வருமாறு தனது கருத்தை நிலைநாட்டியுள்ளார்.

> "நம்பிக்கே காலத்தாற் பிற்பட்டவராகக் கருதத்தக்க அடியார் பலர் பாடல்களை ஒன்பதாந் திருமுறையாகவும், அப்பர் சம்பந்தர் காலத்துக்கு முற்பட்டவரான திருமூலர் பாடிய திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும், நாயன்மார் காலத்தவரும் நம்பி காலத்தவருமான கபிலதேவர் பட்டினத்தார் போன்ற அடியார் பாக்களைப் பதினொராந் திருமுறையாகவும் நம்பி தொகுத்தார் என்று திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. நம்பிக்குப் பிற்பட்டவர் பாக்களை நம்பியே தொகுக்க முடியுமா? காலத்தால் முற்பட்ட அடியார் பாக்களைப் பின்வைக்க இயலுமா? அங்ஙனம் வைப்பதில் ஒருவகைப் பொருத்தமேனும் இருக்க வேண்டும் அல்லவா? இவ்விபரங்களை வரலாற்று முறையிலும், ஆராய்ச்சி முறையிலும் இருந்து கவனிப்பின் நம்பி முதல் ஏழு திருமுறைகளையே தொகுத்தனர். பிற்பட்ட திருமுறைகளை அவை கிடைக்கக் கிடைக்கப் பின்வந்த அறிஞர் முறைப்படுத்தினர் என்று கொள்வதே மிகவும் பொருத்தமாகத் தெரிகிறது."

இராசமாணிக்கனார் எம். ஓ எல். பட்டத்துக்காக "A Critical study of Sekkilar and his Historical Material" என்னுந் தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதி 1945-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்துக்குச் சமர்ப்பித்த ஆராய்ச்சி முடிவுகளின் விளக்கம் சற்று விரிவான முறையிலே "பெரிய புராண ஆராய்ச்சி" (1948) என்னும் நூலாகத் தமிழிலே வெளிவந்தது. அந்நூலிலும் மேற்கூறிய தமது கருத்தினை ஆணித்தரமாக வலியுறுத்தியுள்ளார். நூலின் 78-ம் பக்கத்திலே பின்வருமாறு கூறுவதை அவதானிக்கலாம்.

"நம்பி தொகுத்தவை முதல் ஏழு திருமுறைகளே என்று கொள்வதே அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்தியது. பின்னவை நம்பிக்குப் பின்னர் நாளடைவில் திருமுறைகளாகப் பிற்காலத்தவராற் சேர்க்கப்பட்டன எனக் கோடல் நலம்... 8, 9, 10, 11 ஆந் திருமுறைகள் எப்போது யாரால் முறைப்படுத்தப்பட்டன என்று கூறுதல் இயலாது! இயலாது!! அவை நம்பிக்குப் பின் கி. பி. 11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் நாளடைவிலே திருமுறைகளாகச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் என்ற முடிபே இங்கு பொருத்தமாகும்."

இலங்கைப் பல்கலைக் கழகத்துப் பேராதனை வளாக முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியராகவிருந்த வி. செல்வநாயகம் அவர்களும் இக்கருத்தினையே கூறிச் சென்றுள்ளார். தமிழிலக்கிய வரலாறு (1956) என்னும் நூலின் 131-ம் பக்கத்தில்,

"நம்பியாண்டார்நம்பி நாயன்மார் பாடிய தேவாரத் திருப்பதிகங்களைத் தேடிப் பெற்று ஏழு திருமுறைகளாக வகுத்துச் சைவ உலகுக்கு அளித்தனர்." என்று கூறிச் சென்றிருப்பதை நோக்கியுணரலாம்.

இது இவ்வாறிருக்கப் பதினொரு திருமுறைகளையும் நம்பியாண்டார்நம்பியே வகுத்துரைத்தார் என்ற கட்சியிற் பின்வருவோர் இடம்பெறுகின்றனர். முதல் ஏழு திருமுறைகளை நம்பியாண்டார்நம்பியே தொகுத்தார் என்பதை இருசாராரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதன் பின்னுள்ளவற்றைத் தொகுத்தவர் யார் என்பதிலே இவர்கள் முரண்பாடுடையவர்களாகக் காணப்படுகின்றனர். கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த நம்பியாண்டார்நம்பி இயற்றிய "திருமுறை கண்ட புராணம்" நம்பியாண்டார்நம்பி திருமுறைகளை வகுத்தமை பற்றிப் பின்வருமாறு கூறிச் செல்லுகின்றது.

"பண்புற்ற திருஞான சம்பந்தர் பதிகமுந்நூற்
றெண்பத்தி னொன்றினால் இலங்குதிரு முறைமூன்று
நண்புற்ற நாவரசர் முந்நூற்றேழ் மூன்றினால்
வண்பெற்ற முறையொன்று நூற்றினால் வன்றொண்டர்" (25)

"ஆகவளர் திருமுறையேழ் அருட்டிருவா சகமொன்று
மோகமெறி திருவிசைப்பா மாலைமுறை யொன்றுசிவ
போகமிகு மந்திரமாம் முறையொன்று புகழ்பெறவே
பாசமிதும் திருமுறைகள் பத்தாக வைத்தார்கள்." (26)

"வைத்ததற்பின் நம்பிகழல் மன்னர்பிரான் மகிழ்ந்திறைஞ்சிச்
சித்திதரும் இறைமொழிந்த திருமுகப்பா சுரம்முதலாம்
உய்த்தநபதி கங்களையும் ஒருமுறையாச் செய்கவெனப்
பத்திதரும் திருமுறைகள் பதினொன்றாப் பண்ணினார்." (27)

பெரியபுராணத்தை வசனத்தில் எழுதி (1852) வெளியிட்ட நாவலர் பெருமான் அந்நூலின் முற்பகுதியில் "நம்பியாண்டார்நம்பிகள் சரித்திரம்" எழுதிச் சேர்த்துக்கொண்டபோது நம்பிகள் பதினொரு திருமுறைகளையும் தொகுத்தார் என்றே கொண்டுள்ளார். இக்கருத்து மேலே கூறப்பெற்ற திருமுறை கண்ட புராணத்தைப் பின்பற்றி எழுந்ததாகவே இருக்க வேண்டும். இது போலவே "Tamil Studies" என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதி (1914) வெளியிட்ட எம். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களும் அந்நூலின் 220-ம் பக்கத்தில் நம்பியே பதினொரு திருமுறைகளையும் தொகுத்தவர் எனத் தெரிவித்துள்ளார்.

புறத்திரட்டு என்னும் நூலை (1938) பதிப்பித்த எஸ். வையாபுரிப்பிள்ளை அந்நூலின் முன்னுரை xxiii ம் பக்கத்தில் ''சேக்கிழார் அருளிச் செய்த திருத்தொண்டர் புராணத்தைத் தவிர்த்து ஏனைய பதினொரு திருமுறைகளையும் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகளே'' எனக் கூறியுள்ளார். ஆனால் இவர், டாக்டர். மா. இராசமாணிக்கனார் எம். ஓ. எல். பட்டத்துக்குத் தனது ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்தபோது சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராக இருந்து, அதனை நன்கு பார்வையிட்டு உதவியவர். ஆனால் ஆய்வுக்கட்டுரையிலே கூறப்பட்டிருந்த கருத்துக்களைத் திருத்திக் கொடுத்தாரல்லார். எனவே பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை 1938-ல் ஏற்றுக்கொண்ட கருத்தை 1945-ல் மாற்றிக்கொண்டார் போலத் தெரிகிறது. (பெரியபுராண ஆராய்ச்சி - 1948, முகவுரை)

திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பாக வெளிவந்த திருமந்திரத்துக்கு (1951) முன்னுரை எழுதிய துடிசைகிழார் அ. சிதம்பரனாரும் நம்பிகள் பதினொரு திருமுறைகளையும் தொகுத்தார் என்றே கொண்டுள்ளார். இக்கருத்தினைக் கே. என். நீலகண்ட சாஸ்திரியும் (Cholas - 1955, P. 678) கி. வா. ஜெகந்நாதனும் (ஒன்றே ஒன்று - 1955 முகவுரை) தத்தமது நூல்கள் வாயிலாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இவர்களைப் போலவே பின்வந்தோரும் அதாவது கா. சுப்பிரமணிய பிள்ளையும் (இலக்கிய வரலாறு - 2ம் பாகம், 5ம் பதிப்பு, 1958 பக். 338) ச. சோமசுந்தரமும், வே. தா. கோபால கிருஷ்ணனும் (தமிழ் இலக்கிய வரலாறு, 3ம் பதிப்பு, 1968, பக். 223) நம்பிகள் பதினொரு திருமுறைகளையும் தொகுத்தார் என்றே கொண்டுள்ளனர்.

கா. பொ. இரத்தினம் வெளியிட்ட (1961) ''நூற்றாண்டுகளில் தமிழ்'' என்னும் நூலில் (பக். 89) நம்பியாண்டார்நம்பி பன்னிரு திருமுறைகளில் முதற் பதினொன்றையும் வகுத்தார் என்று கூறியிருப்பதோடு, அடிக்குறிப்பில் ''நம்பிகள் முதல் ஏழு திருமுறைகளையே வகுத்தனர் என்பாருமுளர்.'' எனக் குறிப்பிட்டுள்ளார். எனினும் யார்யார் அவ்வாறு கூறியவர்கள் என்பதை அவர் தெளிவாகக் காட்டினாரல்லர். எனவே இவரும் இக்கட்டுரையின் இரண்டாம் கட்சியினரையே சேர்ந்தவராகிறார்.

மேலே நான் எடுத்துக்காட்டிய விபரங்கள் சில பன்னிரு திருமுறைகளின் தொகுப்புப் பற்றி எழுந்த பிரச்சினைகளுக்கு ஆதாரமான ஆராய்ச்சியாளர்களின் கூற்றுகளே. பன்னிரு திருமுறைகள் சைவ நன்மக்களுக்கு எவ்வளவு தெய்வீகமானதோ அவ்வளவுக்கு அதனைத் தொகுத்தவர்களையும் தெய்வீகமாகக் கொண்டு அவர்களின் கால எல்லையினை அறிந்து ஒரு முடிவுக்கு வருதல் நமது தலையாய கடமையாகும்.

தரத்தில் சிறந்த உபஉணவுப் பொருட்களை
கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யும் ஒரேஒரு ஸ்தாபனம்

உ

# நாதன் ஸ்ரோர்ஸ்

இல 87/1 (213B) ஆஸ்ப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7581 தந்தி: நாதன்

நாதன் ஸ்பெசல் அப்பளம் தயாரிப்பாளரும் விற்பனையாளரும்

அன்பளிப்பு



# வே. தர்மலிங்கம்

பத்திய சந்தை, சுன்னாகம்.

உங்கள் விவசாய உற்பத்திப் பொருட்களை நியாய விலைக்கு விற்பதற்கும்
மற்றும் சகலவிதமான பலசரக்கு வகைகளை கொள்வனவு செய்யவும்

விஜயம் செய்யுங்கள்

# முருகன் ஸ்ரோர்ஸ்

பஸ்நிலையம்

முத்தையன்கட்டு ஒட்டிசுட்டான்

உரிமையாளர்; எஸ். சிவஞானம்

WITH BEST COMPLIMENTS OF

# VELANANTHA STORES

(GENERAL MERCHANTS & DEALERS IN TIN FOODS)

174, 4-TH CROSS STREET,

COLOMBO 11

24364

DONATED BY

A WELL WISHER

WITH BEST COMPLIMENTS FROM

M. G. M. Printing Works & Industries

102/2 WOLFENDHAL STREET

COLOMBO - 13

Dail: 31964

WITH BEST COMPLIMENTS

OF

# A. S. SANGARAPPILLAI & SONS

NO: 15 and 17 DAM STREET,

*PETTAH*

**COLOMBO - 12**

Telephone: 32221


அன்பளிப்பு

# உதயசூரியன் ரொபி இனிப்புகள்

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்

அளவை கொன்பக்சனரி வேக்ஸ்

அளவெட்டி



1955 ஆம் ஆண்டு முதலாவது மணிவாசகர் விழா நடந்த போது மகாவித்துவான் பிரம்மஸ்ரீ. சி. கணேசையர் நந்திக்கொடி ஏற்றி வைக்கும் போது எடுத்த படம். இவ்விழாவிற்குத் தலைமை தாங்கிய கைத்தொழில் சமூகசேவைகள் அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் மாலையுடன் காணப்படுகின்றார்.



1978 ஆம் ஆண்டு மணிவாசகர் விழாவிற்குத் தலைமை தாங்கிய தருமை ஆதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ. அவர்களுக்கு நடந்த பாராட்டு வைபவத்தில் மணிவாசகர் சபையின் சார்பில் அன்னுருக்கு நல்லை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட போது எடுத்த படம்.



1970 ஆம் ஆண்டு நடந்த மணிவாசகர் விழாவின் போது பண்டிதை, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு காரைநகர் மணிவாசகர் சபையினர் சிவத்தமிழ்ச்செல்வி என்ற பட்டமளித்துக் கௌரவித்த போது எடுத்த படம்.

# சைவ சித்தாந்த அடிப்படைக் கொள்கைகள்

'சிவத்தமிழ்ச் செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

உலகிலே ஆத்மீக உயர்விஞல் உயர்ந்த நாடு பாரதநாடு. இதற்குக் காரணம் இந்நாட்டினர் குறிப்பிட்ட ஒரு சமயநெறியை ஒழுங்காகக் கடைப்பிடித்தொழுகி வந்தமையேயாகும். எந்தச் சமயத்தை எடுத்துக்கொண்டாலும் அதன் உட்பொருளாக விளங்குவது ஒரேஒரு பரம்பொருளேயாகும். இவ்வுண்மையைச் சிறப்பாகச் சைவ சமயம் வலியுறுத்திக் காட்டுகிறது. சைவ சமயம் மிகவும் பழமை வாய்ந்தது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மொகன்சோதரோ நாகரீகத்திலே சிவலிங்க வழிபாடு இடம்பெற்றிருந்த செய்திக்குச் சான்றுகள் உண்டு. புதைபொருள் ஆராய்ச்சியினர் அங்கு சைவ சமயக் கடவுளரின் உருவங்களைக் கண்டெடுத்தனர் என்பது சரித்திர சம்பவமாகும். கிறீஸ்து பிறப்பதற்கு முன்பே கிழக்கு ஐரோப்பா, எகிப்து, பாரசீகம், மொசப்பத்தேமியா முதலிய நாடுகளில் வாழ்ந்த மக்கள் சைவசமயக் கொள்கையுடையவர்களாய் வாழ்ந்தார்கள் என்று கூறப்படுகிறது. உலகம் முழுவதுமே உவந்து ஏற்றுக்கொள்ளும் கருத்து வளர்ச்சி இச்சமயத்தில் உண்டு. எல்லாச் சமயக் கொள்கைகளையும் தனக்குள்ளே அடக்கியதுமன்றி, தனக்கெனச் சிறப்பான கொள்கைகளையும் உடையது. இது காலத்தாலும் கருத்தாலும் அனுபவ நிலையாலும் உயர்ந்தது.

சைவம் என்பது சிவத்தை முழுமுதற் கடவுளாகக் கொண்டது. சிவம் என்பதற்கு அன்பு, பூரணம், செம்மை, இன்பம், மங்களம் என்னும் பல பொருள்கள் உண்டு. அச்சிவத்தையே பதி என்றும், கடவுள் என்றும், பரம்பொருள் என்றும் அழைப்பர். பதிக்கு, சொரூப லட்சணம், தடத்த லட்சணம் என இருவகை லட்சணங்கள் உண்டு. பதி ஒன்ருயும், வேருயும், உடஞயும், உயிர்களோடு இரண்டறக் கலந்துள்ளது. அதுவே ஐந்தொழில் ஆற்றும். சைவசமயத்தில் சிறப்பாக செய்வினை, செய்வான், அதன் பயன், சேர்ப்பான் என்ற நான்கு பொருளும் பேசப்படும். பதியாகிய முழுமுதற் கடவுளை அடையும் பேறே உயிர்களின் முடிவான நிலையாகும். இந்த நிலையையடையத் தடுத்து நிற்பனவே பாசங்கள். பாசங்களை நீக்கித் திருவருட்துணை கொண்டு பதியை அடைய முடியும். இதனையே சைவ சித்தாந்த சாத்திரங்கள் விரித்துக் கூறுகின்றன.

சைவ சித்தாந்தம் மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. அவை மக்களைக் குறிப்பனவாயும், மக்கள் வாழும் உலகினைக் குறிப்பனவாயும், உலகினை இயக்கும் கடவுளைக் குறிப்பனவாயும் அமைந்துள்ளன. கடவுள், உயிர், உலகம் இம்மூன்றையும் நிலையான பொருள் என்றே சைவம் குறிப்பிடுகிறது. இவற்றின் சிறப்பான வேறுபாடுகள் என்னவெனில், அறிவிக்காமல் அறிகின்ற பொருள் பதி. அறிவித்தாலறிந்து அறிவியாவிடில் அறியாதது பசு. அறிவித்தாலும் அறிய முடியாதது பாசம். இந்த மூன்றில் எந்த ஒன்றும் வேறு ஒன்ருக மாற மாட்டாது. ஆனுல் ஒன்ருேடொன்று தொடர்புடையவை. அதனைப் பின்னே குறிப்பிடுவோம்.

முதலில் பதியைப் பற்றி எடுத்துக்கொள்வோம். பதியாகிய கடவுளுக்கு இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று தன்னியல்பாகிய சிறப்பியல்பு. அதனையே சொரூப இலக்கணம் என்பர். இந்த நிலையில் கடவுளுக்குப் பெயர், குணம், குறி என்பன ஒன்றும் இல்லை. உருவம், அருவம், அருவுருவம் ஒன்றுமில்லை, மனம், வாக்கு, காயம் மூன்ருலும் அறியப்படாத நிலையில் இருப்பார். இந்தக் கடவுள் நிலையே பரமசிவம் எனப்படும். ஆனுல் பெயர் இல்லாத கடவுளுக்குப் பெயர் தந்து வழங்குகிற மரபு எமது மரபு. அதன்படி ரூபமற்ற கடவுளுக்கு ரூபமும், நாமமற்ற கட

வுளுக்கு நாமமும் வைத்து வழிபடுகிறோம். சிறப்பு நிலையில் உள்ள பரமசிவன் உயிர்களின் துன் பங்களைப் போக்கி, உயிர்களுக்கு அருள் செய்வதற்காக இரக்கங்கொண்டு தானாகவே பல படிகள் இறங்கி வந்து பல நிலையிலுள்ள கடவுளர்களை மேற்கொண்டு, அவர்கள் மூலமாக ஐந்தொழில் செய்கிறான். இந்த நிலையை பொதுநிலை அல்லது தடத்தலட்சணம் என்று சொல்லப்படும். இந்தப் பொதுநிலையில் ஒன்பது திருமேனிகள் கொள்ளப்படும். சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன், மால், அயன் என்பவை அவையாகும். ஒன்றிலும் தோய்வு இல்லாமல் சுயம் பிரகாசமாய் நிற்கும் தன்மையில் சிவம் எனவும், உலகெலாம் ஆகி, வேறாய், உடனாய் நிற்பதில் சத்தி எனவும், ஐந்தொழில் ஆற்றும் தன்மையில் பதி எனவும் பெயர் பெறுபவன் ஒருவனே.

உடலுக்குள் உயிர் இருப்பது போல இறைவன் உயிர்களுடன் கலந்து ஒன்றாய் நிற்கிறான். சூரியன் ஒளி கண்ணொளியில் கலந்திருந்தாலும் இரண்டும் வேறாக நிற்பதுபோல் இறைவன் வேறாக வும் நிற்கிறான். ஒன்றைப் பார்க்கும்போது கண்ணொளிக்கு உயிருணர்ச்சியிருப்பது போல உடனாய் உயிர்களுடன் நிற்கிறான்.

சிவம் உயிர்களிடம் கொண்டுள்ள கருணையே சத்தியாகும். அருள் ஆற்றல்தான் சத்தி. அதனைப் பெண்ணாகக் கண்டு வழிபடுகிறோம். ஆனால் சிவத்தையும் சத்தியையும் பிரிக்கமுடியாது. பழமும் சுவையும் போலவும், நெருப்பும் சூடும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பண் ணும் இசையும் போலவும், சிவமும் சத்தியும் பிரிக்க முடியாதவை. உலக வழக்கையொட்டி இத் தொடர்பை நாயகன் நாயகியாகக் கொள்வர். ஆனால் அவன் பிரம்மச்சாரி; அவள் கன்னி.

கடவுள் இருப்பிடங்களாக எட்டு இடங்களைக் கூறுவர். சூரியன், சந்திரன், ஆன்மா, நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்பன அவை. அவன் மக்கள் குணங்களாகிய மூன்று குணங்களையும் கடந்து எட்டுக் குணங்களையுடையவன். ஞானிகள் அறிந்த அளவில் இப்படிக் குறித்தனரேயன்றி இவற்றைக் கடந்த நிலையே அவனுடைய நிலையாகும்.

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில் களைச் செய்கிறான். உயிர்கள் என்றுமுள்ளவை. ஆகவே உயிர்களைப் படைப்பதில்லை. உடம்பை யும் உலகங்களையும், கருவி கரணங்களையும் போகப் பொருள்களையுமே படைக்கிறான். படைக் கும்போதும் இல்லாதது படைக்கப்படுவதில்லை. நுண்மையான காரணத்திலிருந்து பருமையான காரியந் தோன்றுவதுதான் படைப்பு. குயவன் பானையை மண்ணில் இருந்து படைக்கிறான். சக்கரம் முதலிய கருவிகளைத் துணையாகக் கொள்கிறான். அதேபோல் இறைவன் மாயையிலிருந்து இவற்றைப் படைக்கிறான். மாயையே முதற் காரணம்; சத்தி துணைக்காரணம்; இறைவன் நிமித்த காரணம். காத்தல் என்பது உயிர்களை உடம்புகளில் உரிய கால எல்லைவரை நிலை நிறுத்திக் காப்பாற் றல். அழித்தல் என்பது உயிருக்கு இளைப்பாற்றுக் கொடுத்தல். (நித்திரை போல) மறைத்தல் என்பது உயிரின் கவனத்தை ஒருமுகப்படுத்தித் திரைச்சீலையால் மறைப்பது போல மறைத்து வினைகளை ஒப்பு வருவித்தல். அருளல் என்பது உயிர்களின் பந்தங்களை ஒழித்து, வீடுபேற்றை நல்குதல். இதுவே இறைவன் செய்யும் பேரருட் செயலாகும்.

இறைவனை உருவங்கொடுத்து வழிபடும் முறை சைவ சமயத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம் வணங்குவோருடைய மன ஒருமைப்பாட்டுக்கேயாகும். எல்லோரும் தமது மனதைக் கட்டுப்படுத்தி வணங்கும் ஆற்றல் உடையவர்களன்று. அப்படியானவர்களுக்கு உள்ளத் தில் நிலைபெற்று விளங்குவதற்காகவே ஆலயங்களைக் கட்டி உருவங்களை அமைத்தனர். பசுவின் உடம்பு முழுவதும் பால் இருக்கிறது என்றாலும் அதன் மடியிலிருந்தே பாலைப் பெறுகிறோம். அதேபோல் இறைவன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்துள்ளான் எனினும் ஆல யங்களிலேயே அவனுடைய அருளை நாம் பெற முடியும் என்ற நம்பிக்கையை எமது முன்னோர் எமக்குக் காட்டியுள்ளார்கள். இதனாற்றான் இறைவனை நாம வடிவிலும், மந்திர வடிவிலும், ரூப வடிவிலும் வைத்து வணங்கப்படுகிறது. ''நமசிவாய'' என்ற நாம வடிவிலும், 'ஓம்' என்ற மந்திர வடிவிலும் மற்றும் நடராசர், சிவகாமி, பிள்ளையார், முருகன் என்ற ரூப வடிவிலும் வைத்து வழிபடுவது சைவ மரபு.

கடவுள் எப்படியோ, அப்படியே உயிர்கள் தொன்மையே நிலைபெருக என்றும் இருப்பவை. உயிர்கள் அனந்தம் எனலாம். அவற்றை ஓரறிவு முதல் ஆறு அறிவு உயிர் ஈருகவும் நான்கு வகைத் தோற்றமுடையனவாகவும், ஏழு வகைத் தோற்றமுடையனவாகவும் கூறப்படும். ஒருமித்து மொத்தமாக எண்பத்துநான்கு லட்சம் யோனி பேதம் எனக் கணக்கிட்டுள்ளனர். உயிர்களனைத்தும் மலத்தால் பீடிக்கப்பட்டுள்ளது. மலச்சார்பைக் கருதி உயிர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஆணவ மலம் ஒன்றேயுடையவர்களை விஞ்ஞானகலர் என்றும், ஆணவம் கன்மம் என்ற இரு மலங்கள் உடையவரை பிரளயாகலர் என்றும், ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்கள் உடையவரை சகலர் என்றும் பிரிப்பர். உயிர்களின் குற்றங்கள் யாவற்றுக்கும் ஆணவமே காரணமாகும். மலம் உள்ள வரையில் பிறப்பு உண்டு. பாவபுண்ணியங்களின் விளைவாகவே அதற்கேற்ற பிறப்பு ஏற்படுகிறது. கடவுளையடைந்து முத்தியடைவதற்கு மக்கட் பிறவியே மிக மிகச் சிறந்தது. உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாக உள்ளன. கடவுளைச் சாரும்போது தெளிவுடையதாயும், உலகத்தைச் சாரும்போது மயக்கமுடையதாயும் இருக்கும். மயக்க நிலையிலிருந்து தெளிவு பெற்று முத்தியடைவதற்காகவே மனிதப் பிறவியைக் கடவுள் கொடுத்துள்ளார்.

சைவ சித்தாந்தம் கூறும் மூன்ருவது பொருள் பாசமாகும். இது உயிர்களுக்கு மயக்கத்தையும் அறியாமையையும் கொடுப்பதாகும். மாயை மயக்குவது. ஆணவம் அறியாமையைக் கொடுப்பது. கன்மம் பிறவி எடுப்பதற்குக் காரணமானது. எனவே பாசம் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று வகைப்படும். ஆணவம் பல சக்திகளையுடையது. உயிர்கள்தோறும் அது கலந்து அநாதியாகவே உள்ளது. ஆன்மாவின் தொழிலை மறைப்பது. இது இருளிலும் பார்க்கக் கொடியது. இருள் தன்னைச் சேர்ந்த மற்றப் பொருள்களைக் காட்டாவிட்டாலும் தன்னையாவது காட்டும். ஆனுல் ஆணவம் தன்னையும் காட்டாது; பிற பொருளையும் காட்டாது. ஆனுல் முத்திநிலையில் இது வலி கெட்டு நீங்கும். எனினும் முத்தியடையத் தகுதியற்ற ஏனைய உயிர்களோடு என்றைக்கும் கூடி நிற்கும். எனவே இதற்கு அழிவில்லை. இடையிலே இது ஆன்மாவோடு சேரவில்லை. அப்படிச் சேர்த்தது யார்? என்ருல் விடை காண முடியாது. இறைவன் இப்படியான செயலைச் செய்யான். ஆன்மாவும் தனக்கெனச் செயலில்லாதது. ஆணவம் சடப்பொருளான படியால் சேர மாட்டாது. ஆகவே ஆணவம் அநாதியாகவே செம்பிற் களிம்பு போன்றும், நெல்லில் உமி போன்றும் உள்ளது. மாயை என்பது உடம்பு, உலகம், கரணம், போகம் என நான்கு வகைப்படும். உயிரின் அறிவை ஒரு அளவுக்கு விளக்குவது இதுதான். விடியும்வரை எரிகின்ற விளக்கு இருளை ஒரு அளவுக்கு நீக்குவதுபோல் மாயையானது ஆன்மாவுக்கு விளக்கம் கொடுக்கிறது. முப்பத்தாறு தத்துவங்களும் இதனுள் அடங்கியுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| ஆன்மதத்துவம் | 24 | -- | அசுத்தமாயை |
| வித்தியாதத்துவம் | 7 | -- | சுத்தாசுத்தமாயை |
| சிவதத்துவம் | 5 | -- | சுத்தமாயை |

மாயையின் தொழில் இச்சை, ஞானம், கிரியையை எழுப்புவதாகும்.

கன்மம் என்பது வினையாகும். இது பழவினை என்றும், புதுவினை என்றும், அனுபவவினை என்றும் மூன்று வகைப்படும். பழைய வினையைச் சஞ்சிதம் என்பர். இது பிறக்கும்போதே எம்முடன் வருவது. முற்பிறப்பில் செய்து ஈட்டியதே இதுவாகும். இதனையே இப்பிறப்பில் அனுபவிக்கிறேம். அதனைப் பிராரத்தம் என்பர். இப்பிறவியில் புதிதாகச் செய்யும் வினையை ஆகாமியம் என்பர். இதுவே மற்றப் பிறவிக்குப் போகும்போது சஞ்சிதம் என்று பெயர் பெறுகிறது. நல்வினை செய்தவன் நற்பிறப்பையும், தீவினை செய்தவன் தீய பிறப்பையும் அடைவான். வினைகள் யாவற்றையும் சிவவினைகளாக்கி விட்டால் எப்பிறப்பும் வருவதற்கு இடமில்லை.

பிறவியில்லாத பெருநிலேயே வீடுபேருகும். வீடும் பேறும் என அதனைக் கொள்ளலாம். வீடு என்பது பாசவீடு; பேறு என்பது சிவப்பேறு ஆகும். செம்பிலே களிம்பு கழிந்துவிட செம்பு பிர காசமாக நிற்கும் நிலேபோன்றது இதுவாகும். முத்தி நிலேயில் ஆன்மா இறைவனுடன் இரண் டறக் கலந்து நிற்கும்.

நீரொடு நீர் கலந்தது போலன்று; நீரொடு உப்புக் கலந்தது போலாகும். இதனை அத்து விதம் என்பர். அ + துவிதம். துவிதம் இரண்டு; அ என்பது அல்ல; ஆகவே இரண்டு அல்ல; ஆனல் ஒன்றுமல்ல; இந்த நிலேயே முத்திநிலேயாகும். விளக்கமாகச் சொன்னல் உயிர் திருவரு ளால் மலமற்று, சிவமாகிச் சிவத்தொடு சேரும் நிலேயாகும். நான் எனது என்ற செருக்கற்ற நிலேயிலேயே இது கைகூடும்.

இந்த நிலேயை அடைவதற்கு நான்கு மார்க்கங்கள் உண்டு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சிவனடியார் பணியும், சிவத்தொண்டுகளும் சரியையின்பாற்படும். இதனல் புறத்தடைகளே நீக்கலாம். கிரியை என்பது இருதயசுத்தி செய்து வேள்வி செய்தல் முதலியன. இதனல் இந்திரிய மயக்கங்கள் நீக்கப்படுகிறது. யோகம் என்பது புலனெடுக்கித் தியானத்தில் மூழ்கல். இதனல் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் சுத்தி செய்யப்படுகிறது. ஞானம் என்பது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற நிலேயில் உயர்ந்து அறியாமை அகற்றல். சரியை வழி நின்ருல் ஈசன் உலகை அடைய லாம். கிரியை வழி நின்ருல் ஈசன் அருகில் இருக்கலாம். யோகத்தின் வழி நின்ருல் ஈசன் உருவம் பெறலாம். ஞானவழி நின்ருல் சிவனுடனும் பெற்றியை அடையலாம். சமயகுரவர் நால்வரும் இந்த வழியிலேயே நின்று இறைவனடி சேர்ந்தார்கள்.

எனவே சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களாகிய பதி, பசு, பாசம் மூன்றும் அநாதி யானவை என்றும் நடுநின்ற பசு பாசங்களோடு சேர்ந்து உழன்று, பின் நல்வினை வசத்தால் திருவருட்டுணை கொண்டு பதியை அடைகிறது என்றும், அப்படி அடைவதற்குரிய வழிகளே சரியை, கிரியை, யோகம், ஞானமென்றும் கண்டோம்.

25வது ஆண்டாக நடைபெறும் மணிவாசகர் விழா சிறப்புற

எமது வாழ்த்துக்கள்

# காரை ரேடிங் கோ

18/3 டாம் வீதி

கொழும்பு - 13

தொலைபேசி இல: 34351

அன்பளிப்பு

ஆ.ச. நடராசா

இல. 296, பிரதான வீதி,

கந்தானை.

அன்பளிப்பு

குறிஞ்சி ஜவுளி பூங்கா

A4 நவீனசந்தை,

சுன்னாகம்

அன்பளிப்பு

# ஜெகதீசன்ஸ்

பிறிஸ்டல் பில்டிங் 51, யோர்க் ஸ்ரீற்

கொழும்பு 1

☎ 24353

தந்தி: ஜெகஜோதி, கொழும்பு

அன்பளிப்பு

# முருகன் ஸ்டோர்ஸ்

ஜெனரல் மேர்சன்ட்

210, கஹுவலை

ஜா - எல

430

WITH BEST COMPLIMENTS

of

# NEW KALYANI STORES

General Merchants & Commission Agents

294, MAIN STREET

PANADURA

T. Phone: 2680

WITH BEST COMPLIMENTS

OF

# S. K. MURUGESUPILLAI & SONS

General Merchants,

316 & 318 MAIN STREET

PANADURA

T'Phone: 2458

# ஐயனார் வழிபாடு

தருமையாதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர்
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

## 1. கிராம தேவதைகள்

ஐயனார் - ஹரிஹரபுத்திரர், சாஸ்தா, வனரக்ஷகர், ஐயப்பன் முதலிய பல பெயர்களால் வழிபடப்பெறும் தெய்வமாவார். நம் நாட்டில் சிவபெருமான் திருக்கோயிலை ஊர் நடுவே அமைத்து ஊரின் நான்கு புறங்களிலும் ஊர்க்காவல் தெய்வங்களாக மாரியம்மன், பிடாரி, ஐயனார் முதலிய தெய்வங்களை எழுந்தருளச் செய்து மக்கள் வழிபட்டனர்.

கிராமங்களில் மழையில்லாத காலத்திலும், அம்மை, காலரா முதலிய பிணிகள் வரும் காலத்திலும் மாடுகளுக்குக் கோமாரி முதலிய நோய்கள் வரும் நேரத்திலும் மக்கள் இத் தெய்வங்களை வழிபட்டு நன்மைகள் பெற்றுவருவது கண்கூடாகும். போகம் மோக்ஷம் எனப்பெறும் பெரும் பயன்களைப் பெறுதற்குரிய தெய்வமாகச் சிவபெருமானையும் அவ்வப்போது நமக்கு ஏற்படும் இடையூறுகளைப் போக்கிக்கொள்ள கிராம தேவதைகளையும் மக்கள் வழிபட்டுவருகின்றனர். ஐயனாரின் பிறிதொரு அவதாரம் ஐயப்பன் ஆவார்.

ஐயப்பன் வழிபாடு கேரளத்தில் சிறப்பாகப் போற்றப்பெற்று வருகிறது. இன்று தென்னாட்டில் நகரங்களிலும் கிராமங்களிலும் பல லட்சம் மக்கள் ஐயப்பன் வழிபாட்டை மேற்கொண்டு குறிப்பிட்ட காலங்களில் கேரள நாட்டிலுள்ள சபரிமலைக்கு யாத்திரை சென்று வருகின்றனர்.

ஒரு மண்டலகாலம் காலை, மாலை இருவேளைகளிலும் நீராடித் தியானம் செய்தல், க்ஷவரம் செய்து கொள்ளாமலிருத்தல்', உணவு உடை இவைகளில் சில நியதிகளை மேற்கொள்ளுதல் போன்ற சில நெறி முறைகளை மேற்கொண்டு 'சாமியே சரணம் ஐயப்பா' சொல்லிக் கொண்டு மக்கள் ஐயப்பன் வழிபாட்டைச் செய்கின்றனர். விரத முடிவில் இருமுடி சுமந்து சபரிமலை யாத்திரை செய்து ஐயப்பனை வழிபட்டு நன்மைகள் பலவும் பெறுகின்றனர்.

இந் நோன்பை மேற்கொள்வோர் விரதம் முடிந்ததும் தாங்கள் மேற்கொண்ட தியானம் வழிபாடு முதலிய பழக்கங்களைக் கைவிடாமல் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் மேலும் பல பயன்கள் விளையும்.

ஐயனார் வரலாற்றையும் ஐயப்பன் வரலாற்றையும் பற்றிய சமய நூற்கருத்துக்களை இக் கட்டுரையில் தொகுத்துக் காண்போம்.

## 2. ஐயனார் தோற்றம்

முன்னொரு காலத்தில் திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் அமுதம் பெறவேண்டித் திருபாற்கடலைக் கடைந்தனர். சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலைக் கடைந்தனர். சிவபெருமான் திருவருளால் திருப்பாற்கடலில் அமுத கலசம் தோன்றிற்று அதைக்கண்ட தேவர்

களும் அசுரர்களும் தனித்தனியே 'இது எங்கள் முயற்சியால் வந்தது ஆதலால் எங்களுக்கே உரியது' என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட முற்பட்டனர். அதனைக்கண்ட திருமால் பிணக்கை ஒழிக்கவும், தேவர்களே சாவாமருந்தாகிய அமுதத்தை உண்டு இறவாமல் வாழவும் விரும்பி மூவுலகத்தாரும் மையல் கொள்ளும் மோகினி வடிவத்தை எடுத்தார். அம் மோகினியின் அழகைக் கண்ட அவுணர்கள், அமுதத்தைப் பெற விரும்பும் முயற்சியைக் கைவிட்டு ஆசைமேலிட்டுக் கொண்டு மோகினியைச் சுற்றிவர முற்பட்டனர்.

### திருமாலின் சூழ்ச்சி;

மோகினி வடிவம் கொண்ட திருமால் தன்னைச் சுற்றிவரும் அசுரர்களை நோக்கி உங்களுக்குள் சிறந்த வீரன் எவனோ அவனே என்னை அடைதற்கு உரியவன் என்றார். அசுரர்கள் அனைவரும் நானேவலியவன். நானே வீரன் என்று கூறித் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொண்டு இறந்தனர். இராகு கேதுக்களாகிய அசுரர் இருவர் மட்டும் தேவர்களோடு கூடிக் கள்ளத்தனமாக அமுதமுண்டு திருமாலால் தலை துணிக்கப்பட்டுக் கரும்பாம்பும் செம்பாம்புமாகி அமுதமுண்ட மகிமையால் ஒன்பது கிரகங்களில் இருவராக எண்ணப்படும் பெருமையைப் பெற்றனர்

### சிவபிரானும் மோகினியும்

தேவர்களுக்கு அமுதளித்தபின் திருமால் மோகினி வடிவோடு திருப்பாற்கடலின் கரையில் அமர்ந்து இருந்தார் சிவபெருமான் தமது நால்வகைச் சக்திகளில் திருமாலும் ஒருவர் என்பதை அறிவித்தருளும்பொருட்டு அழகிய திருவுருவோடு அங்குவந்தார். மோகினியைக் கண்டு காதல் கொண்டார் மோகினியும் சிவபிரானிடம் காதல் கொண்டார். சிவபெருமான் மோகினியைத் தழுவ வந்தார். அப்போது திருமால் நான் ஆடவன்: அடியேனைத் தாங்கள் வந்து கூடுதல் முறையோ என்று கூறினார் பெருமான் திருமாலை நோக்கி, 'நமது சக்தி நான்கு வகையான பெயர்களோடு இலங்குவாள்: எனக்கு மனைவியாகும்போது பவானி என்றும், கோபம்கொண்டபோது காளி என்றும், போர் செய்யும்போது துர்க்கை என்றும், ஆணுருவடையும் போது திருமால் என்றும் பெயர் பெறுவாள் ஆதலின் நீ எமக்குச் சக்தியேயாவாய்' என்று கூறினார். நாம் முன்பு தாருகாவனத்திற்குப் பிக்ஷாடனராய்ச் சென்றபோது நீயும் மோகினி வடிவந்தாங்கி வந்து நம்மைக் கூடிப் பிரமனைப் பெற்றாய் அல்லவா? இன்றும் அதுபோல் உன்னைக்கூட வந்துள்ளோம் என்று கூறி மோகினியின் கரத்தைப் பற்றினார். மோகினியும் உடன்பட்டார். நாவலந்தீவில் தேங்கு மரத்தடியில் இருவரும் கூடியின்புற்றனர்.

### ஹரிஹரபுத்திரர்:

சிவபெருமானும் திருமாலும் இவவாறு கூடியகாலத்தில் கருங் கடல்போன்ற மேனியும், செவ்வானம்போன்ற சடையும், செண்டாயுதம் ஏந்திய திருக்கரமும் போற்றுதற்குரிய வீரமும் கொண்டவராய் ஞானியர் போற்றும் பெருமையும் நன்மையேபுரியும் கருணையும் உடைய ஐயனார் திருவவதாரம் செய்தார், சிவபெருமான் அவருக்கு ஹரிஹரபுத்திரர் எனத் திருப்பெயர் சூட்டினார் பல வரங்களையும் தந்தார் உருத்திரர்களுள் ஒருவராக்கினார் ஒரு புவனத்தைக் கொடுத்து, தேவர்களும் முனிவர்களும் வணங்கும் தலைமை அளித்து அவரைப் புவனத் தலைவராக்கினார். உலகங்கள் அனைத்தையும் காத்துக்கொண்டிருக்கும் பெருவரம் அளித்தார்.

மைக்க ருங்கடல் மேனியும் வானுலாம்
செக்கர் வேணியும் செண்டுறு கையுமாய்
உக்கிரத் துடன் ஓர்மகன் சேர்தலும்
முக்கண் எந்தை முயக்கினை நீங்கினான்.

அத்த குந்திரு மைந்தற்கு அரிகர
புத்தி ரன்எனும் நாமம் புனைந்துபின்

ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்
வைத்து மிக்க வரம்பல நல்கியே

புலனம் ஈந்து புவனத் திறையென
அவனை நல்கி அமரரும் மாதவர்
எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினன்
சிவனது இன்னருள் செப்புதற் பாலதோ

-கந்தபுராணம் - மகாசாத்தாப்படலாம்

ஐயனார் சிவகுமாரர்களில் விநாயகர் முருகன் ஆகியோரின் இளவலாகும் பெருமையைப்பெற்று, சிவபெருமான் ஆணைப்படி, தம் கடமைகளைச் செய்துகொண்டு விளங்கிவருகின்றார் என்பது கந்த புராணத்தில் காணப்படும் ஐயனார் திருவவதார வரலாறாகும்.

**பாத்ம புராணத்தில்;**

பஸ்மாசுரன் என்பவன் சிவபெருமானைக்குறித்துத் தவம்செய்து யார் தலையில் கை வைக்கின்றேனோ அவர் உடனே பஸ்மமாக வேண்டும் என்ற வரத்தைப் பெற்றான். தான் பெற்றவரம் சரியானதுதானா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பிய பஸ்மாசுரன் வரமளித்த சிவபெருமான் தலையிலேயே கைவைக்க ஓடினான், சிவபெருமான் அஞ்சியதுபோல மறைந்தார். ஐவேலிக்காய் எனப்படும் சிவலிங்கக்காயில் மறைந்திருந்தார். என்றும் சிலர் கூறுவர்.

வரம்பெற்ற பஸ்மாசுரன் உலகையே அழிக்க முற்பட்டான். திருமால் பஸ்மாசுரனின் செய்கையை அறிந்தார். மோகினி வடிவோடு சென்று அவனை அணுகினார். பஸ்மாசுரன் மோகினியிடம் மயங்கினான் தான்பெற்ற பெருவரத்தை மோகினியிடம் தெரிவித்தான். திருமால் பஸ்மாசுரனை நோக்கி வரம் பெற்றால் மட்டும் போதுமா? வரத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய மந்திரத்தைச் சொல்லுமுன் கரநியாசம் அங்கநியாசம் செய்ய வேண்டாமா? என்றார். பஸ்மாசுரனும் அவ்வாறே அங்கநியாசம் செய்ய முற்பட்டு, 'சிரசே சுவாகா' என்று கூறித் தன் கையைத் தானே தன்தலையில் வைத்துக்கொண்டு பஸ்மமானான். மோகினி தன்னை அடைய வேண்டுமானால் எண்ணெய் தேய்த்துக் குளித்துவா என்று கூறியதாகவும், பஸ்மாசுரன் தலையில் எண்ணெய் தேய்ப்பதற்காகக் கையை வைக்கும்போது அழிந்ததாகவும் கூறுவது உண்டு. பஸ்மாசுரன் அழிந்த பின் சிவபெருமான் வெளிப்பட்டார்; திருமால் மோகினி அவதாரமெடுத்து அவனை அழித்ததை அறிந்தார். இருவரும் தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அழிக்க மோகினியாகவும், பிக்ஷாடனராகவும் சென்றனர். அப்போது ஐயனார் அவதரித்தார் என்று பாத்மபுராணம் கூறுகிறது

## 3. இந்திராணியைக் காத்தருளியது

கந்தபுராணத்தில் சூரபத்மனுக்கு அஞ்சிய இந்திரன் தன் மனைவியோடு சீர்காழிக்கு வந்து மூங்கிலாய் மறைந்து தங்கித் தவம் செய்ய முற்பட்டான். சூரபன்மனிடமிருந்து தன் மனைவி இந்திராணியைக் காத்தருளுமாறு ஐயனாரை வேண்டினான். ஐயனார் பூதகணங்கள் புடைசூழ வெள்ளை யானையின் மேல் பூரணை, புட்கலை என்னும் இருபெரும் தேவியரோடு இந்திரனுக்குக் காட்சி தந்தார். இந்திரன் சூரபன்மன் கொடுமையால் தேவர்கள் துயருறுவதையும், அதனைச் சிவபெருமானிடம் தெரிவிக்கத் திருக்கயிலை செல்வதையும் கூறித் தான் கயிலை சென்று திரும்பி வரும்வரை இந்திராணியை அடைக்கலமாக ஏற்றுக் காப்பாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். ஐயனாரும் அதற்கிசைந்து தனது வீரருள் மாகாகாளர் என்பவரை இந்திராணிக்குக் காவலாக இருக்குமாறு கூறி மறைந்தார்.

சூரபத்மனின் தங்கை அஜமுகி என்பாள் அங்குவந்து இந்திராணி தவம்புரிவதைக் கண்டு அவளைத் தூக்கிக்கொண்டு போய்த் தன் தமையன் சூரபத்மனுக்கு அளிக்க விரும்பினள். முடிவில் இந்திராணியை அழைத்தாள். அவள் மறுக்கவே அவளை அஜமுகி தன் கைகளால் பிடித்து இழுத்தாள். அஞ்சி நடுங்கிய இந்திராணி,

பையரா அமளி யானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ! ஓலம் ; விண்ணோர்க்கு ஆதியே ! ஓலம்; செண்டார்
கையனே ! ஓலம் ; எங்கள் கடவுளே ! ஓலம் ; மெய்யர்
மெய்யனே ! ஓலம் ; தொல்சீர் வீரனே ! ஓலம் ; ஓலம் ;

ஆரணச் சுருதியோர்சார் அடலுருத் திரன்என்று ஏத்தும்
காரணக் கடவுள் ! ஓலம் ; கடல்நிறத்து எந்தாய் ! ஓலம்;
பூரணைக்கு இறைவா ! ஓலம் ; புட்கலை கணவா ஓலம்;
வாரணத்து இறைமேல் கொண்டு வரும்பிரான் ! ஓலம்.

என்று ஐயனாரை விளித்துத் தன் அபயக்குரலை வெளிப்படுத்திப் பலவாறு கதறினள்.

அபயக்குரல் கேட்ட ஐயனாரின் படைத்தலைவர் மகாகாளர் தன் வாட்படையைச் சுழற்றிக் கொண்டு இடிபோல் ஆரவாரித்து வெளிப்பட்டார். அஜமுகியைத் தடுத்தார். அவர் வார்த்தையைக் கேட்க மறுத்த அஜமுகி முத்தலைச் சூலத்தையும் மலையையும் அவர் மீது எறிந்தாள். மகாகாளர் அவற்றைப் பொடிபடுத்தித் தன் ஆணையைக் கேளாது இந்திராணியைத் தீண்டிய அஜமுகியின் கையை வெட்டினார். காவால் அவளை இடறி ஓட்டினார். இந்திராணியைக் காத்த ஐயனார் கோயில் சீகாழியில் தென்பாதித் தெருவில் உள்ளது. இவ்விடத்திற்குக் கைவிடான் சேரி என்று இப்போது பெயர் வழங்கி வருகிறது.

சூரபத்மனுக்குப் பயந்த இந்திரன் கோமுத்தீசுரம் என்னும் திருவாவடுதுறைத் தலத்தில் தங்கித் தவம் புரிந்தான். அஜமுகி இந்திரனைக் கண்டு காதல் கொண்டு அவனைப் பலவந்தமாக அணைய முற்பட்டாள். அதன் காரணமாகக் கருவுற்ற அஜமுகி கிருத்தியா என்ற பெண் குழந்தையைப் பெற்றாள். கிருத்தியை கண்ணில் கண்ட பொருள்களையெல்லாம் வாரி விழுங்கி நாசமாக்க முற்பட்டாள். ஐயனார் சிவபெருமான் ஆணைப்படி அவளைக் கடலில் எறிந்து உலகைக் காத்தருளினார்.

## 4. திருவுலா வெளியிட்ட திருப்பிடவூர் ஐயனார்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான்பெருமாள் நாயனாரோடு திருவஞ்சைக்களத்தில் தங்கியிருந்தபோது ஒருநாள் அஞ்சைக்களத்து இறைவனை வேண்டி இவ்வுலக வாழ்வு போதும் என்னை ஏற்றருள் என்ற குறிப்புடைய திருப்பதிகம் பாடி வழிபட்டார். பெருமான், இந்திரன், மால், பிரமன் முதலிய தேவர்களை அனுப்பிச் சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித் திருக்கயிலைக்கு அழைத்து வருமாறு கட்டளையிட்டார். சிவபிரான் அருளியவாறு தேவர்கள் திருவஞ்சைக்களம் வந்து சுந்தரரை வெள்ளையானை மீது ஏற்றித் திருக்கயிலாயத்திற்கு அழைத்துச் சென்றனர். சுந்தரர் சேரமான்பெருமானை மனதில் நினைத்துக்கொண்டே கயிலை சென்றார். சுந்தரர் கயிலை செல்வதை அறிந்த சேரமான்பெருமானும் ஒரு குதிரையைக் கொண்டுவரச் செய்து அதன் காதில் திருவைந்தெழுத்தை ஓதி அக்குதிரை மீது ஏறிச் சுந்தரரை வலம்வந்து வான்வழியே கயிலை சென்றார். சுந்தரர் திருக்கயிலாயம் சென்று இறைவனை வணங்கினார். சேரமான்பெருமாள் தன்னோடு உடன் வந்திருப்பதை விண்ணப்பித்தார். இறைவன் நந்திதேவரிடம் சேரர் கோவை உள்ளே அழைத்து வரக் கட்டளையிட்டார். உள்ளே வந்த சேரர் காவலரைச் சிவபிரான் இங்கு நாம் அழையாமல் வந்தது ஏன் என வினவினார். சேரமான்பெருமாள் சுந்தரரைப் போற்றி வந்தேன் என்று கூறிந்

தாம் பாடியருளிய திருக்கயிலாயஞான உலாவைப் பாடி வணங்கினர். சிவபிரான் அதனைக் கேட்டு மகிழ்ந்து அவரைச் சிவகணத் தலைவராக இருக்குமாறு அருள்பாலித்தார். திருக்கயிலையில் சேரமான் பாடியருளிய திருக்கயிலாய ஞான உலாவை அங்கிருந்து கேட்ட ஐயனர் தென்னாட்டில் திருப் பிடவூருக்குக் கொண்டு வந்து தமிழக மக்கள் அறிந்துய்யுமாறு வெளிப்படுத்தினர். இது பெரிய புராணத்தில் காணப்படும் ஐயனரின் அருளிச் செயலாகும்.

திருப்பிடவூர் திருச்சிராப்பள்ளியிலிருந்து பெரம்பலூர் செல்லும் வழியிலுள்ளது. இங்குள்ள ஐனயர் கையில் திருக்கயிலாய ஞான உலா உள்ளது. இவ்வையனரை மக்கள் அரங்கேற்றிய ஐயனர் என அழைக்கின்றனர்.

## 5. ஆகமங்களில்

சாஸ்தா என்ற சொல்லுக்கு உலகங்களை ஆள்பவர் என்றும், ஆணை செய்பவர்என்றும், மக்கள் மனங்களில் ஊடுருவியவர் என்றும் பொருள்கள் கூறப்படுகின்றன.

ஐனயர் பதினறு பேதங்களை உடையவர் என்று தியாள ரத்னவளி என்ற ஆகம பத்ததி கூறுகிறது. ஐயனரின் பதினறு பேதங்கள்:- 1) மதகஜ சாஸ்தா, 2) மோகினி, சாஸ்தா 3) அமிருதசாஸ்தா, 4) கிராமசாஸ்தா, 5) உக்ரசாஸ்தா, 6) விரசாஸ்தா, 7) லட்சுமிசாஸ்தா, 8) பாலசாஸ்தா, 9) மதனசாஸ்தா, 10) பீஷணசாஸ்தா, 11) ருத்ரசாஸ்தா, 12) வரத சாஸ்தா, 13) அகவசாஸ்தா, 14) சௌந்தரசாஸ்தா, 15) புவனசாஸ்தா, 16) மகாசாஸ்தா, ஆகியனவாம்.

மலைகளில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவைப் பதினறு கைகளை உடையவராகவும் காட்டில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ்தாவைப் பத்துக் கைகள் உடையவராகவும், நகரங்ககளில் பிரதிஷ்டிக்கப் படும் சாஸ்தாவை எட்டுக் கைகள் உடையவராகவும், கிராமங்களில் பிரதிஷ்டிக்கப்படும் சாஸ் தாவை இரண்டு கைகள் உடையவராகவும், பிரதிஷ்டை செய்விக்க வேண்டுமென்று சிவாகமம் கூறுகிறது.

சாஸ்தாவின் மனைவியர் - சௌகந்திகன் என்ற அரசனுடைய புதல்வி பூரணதேவியும், அம்பாராஜனுடைய புதல்வி புஷ்களாதேவியுமாகிய இருவராவர்.

சாஸ்தாவின் பரிவாரங்கள் - மகாகாளன், கோப்தா, பிங்களாக்ஷன், விரசேனன், சாம்பவன், திரிநேந்திரன், சூலி, தக்ஷன், பீமரூபன் முதலியோராவர்.

சாஸ்தாவின் வாகனம்:- குதிரை, யானை ஆகியன. ஐயனர் கோயிலின் வாயிலில் இவ்விரு வாகனங்களும் விளங்குவதைக் காணலாம்.

கொடி:- யானைக்கொடி, கோழிக்கொடி

### சுப்பிரபேதம் என்ற ஆகமத்தில்;

ஐயனர் இரண்டு கண்களும், இரண்டு கைகளும் கொண்டவர். கரிய மேனியில் வெண்ணிறப் பூணூல் அணிந்தவர். ஆபரணங்கள் அணிந்தவர். நாய், கோழி, ஆடு இவைகளோடு விளையாடு பவர். எல்லாச் சித்திகளையும் அளிக்க வல்லவர். மதன வர்ணினி, என்ற இரு மனைவியருடன் திகழ்பவர். பெருவயிறும், பேருடலும், நீளமான அளகங்களால் விளங்கும் தலையும் உடையவர். இடதுகையில் தடியும், வலதுகையில் வளைதடியும், உடையவர். பழம், தளிர் இலைகளைக் கையில் கொண்டவர். மடக்கிய கால்மீது கையை வைத்திருப்பவர் என்று ஐயனரது தோற்றம் கூறப்பட்டு உள்ளது.

**அம்சுமத்பேதம் என்ற ஆகமத்தில்:**

ஐயனுர் வெண்ணிற மேனி உடையவர் என்றும், முக்கண்ணர் என்றும், சாந்தமானவர் என்றும், வெண்பட்டாடை உடுத்துப் பத்மபீடத்தில் அமர்ந்திருப்பவர் என்றும், அபயம், வரதம் சுத்தி, கேடயம் இவைகளைத் தாங்கும் நான்கு கைகளை உடையவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

**பூர்வகாரணுகமத்தில்;**

சாஸ்தா, சாந்தமூர்த்தி என்றும், இரண்டு கைகள் உள்ளவர் என்றும், கருநிற மேனியர் என்றும், தூக்கி மடக்கிய இடதுகால் மீது இடது கையையும் தொங்க விடப்பட்ட வலது காலை யும் உடையவர் என்றும் வளைதடி, வச்சிராயுதம் உடைவர் என்றும், நீல நிற கேசம் உடையவர் என்றும், யானையை வாகனமாகவும், கொடியாகவும் கொண்டவர் என்றும், நீலம் வெள்ளை ஆகிய நிறங்களை உடைய குதிரை, எருது ஆகியவற்றை வாகனங்களாகக் கொண்டவர் என்றும், நான்கு கைகளை உடையவர் என்றும், வீராசனத்திலும், யோகாசனத்திலும் வீற்றிருக்கும் ஞானி என்றும் கூறப்பட்டுள்ளது.

**சில்பரத்தினம் என்ற நூலில்:**

ஐயனுர் அழகிய அளகம் உடையவர். குண்டலம் அணிந்த காதினர். ஒரு கையில் வில் லும், மற்றொரு கையில் அம்பும் வைத்திருப்பவர். நீலப் பட்டாடை தரித்தவர். மேகம் போன்ற மேனியர். பிரமை என்ற மனைவியையும், சத்யகன் என்ற பிள்ளையையும், அருகில் கொண்டு சிம்மாசனத்தில் எழுந்தருளியிருப்பவர். சிவப்பு நிற அணிகலன்கள் பூண்டவர் என்று கூறப்பட் டுள்ளது.

**மகாலக்ஷ்மி கல்பத்தில்:**

மகாசாஸ்தா, சத்ருசாஸ்தா, ஜவசாஸ்தா, சர்வசாஸ்தா, சாஸ்தா, பிரசாஸ்தா என்று ஐயனுர் பேதங்கள் ஆறு விதமாகக் கூறப்பட்டுள்ளன.

**ஐயனுர் நிறங்கள் :**

வசியம், ஆகர்ஷணம் இவைகளில் செந்நிறம் கொண்டவராகவும், மோகனத்தில் கருநிறம் கொண்டவராகவும், ஸ்தம்பனத்தில் பொன்னிறம் உள்ளவராகவும், விஷம் போக்கும் வழிபாட் லும் ஞானம் பெறுவதற்கான வழிபாட்டிலும் வெண்ணிறமுள்ளவராகவும், துவேஷம், உச்சாட னம், மாரணம் இவற்றில் கருநிறமுள்ளவராகவும் ஐயனுர் வழிபடப் பெறுகிறுர்.

# 6. ஐயனுர் பற்றிய சில கதைகள்

கி. பி. 16-ஆம் நூற்றுண்டில் நரசிம்ம பூபாலன் என்ற சோழ மன்னன் ஒருவன் அரசு வகித்தான். அவனது அவைக்களப் புலவராக அப்பய்யதிக்ஷிதரும், வேறொரு புலவரும் விளங்கி னர். இருபெரும் புலவர்களோடு மன்னன் ஐயனுர் கோவிலுக்குச் சென்றுன். அக்கோயிலில் ஐயனுர் மூக்கில் விரலை வைத்த நிலையில் காணப்பட்டார். அதற்கான காரணத்தை மன்னன் அருகில் உள்ளவர்களைக் கேட்டான். அவர்கள், ''இங்கு ஒரு ஞானி'' வருவார். அவர் அரச னுடைய வேண்டுகோளின்படி காரணம் கூறுவர். உண்மைக் காரணத்தைக் கேட்டவுடன் சாஸ் தாதன் மூக்கிலிருந்து கைவிரலை எடுத்துவிடுவார்' என்று எங்கள் மூதாதையர் கூறியுள்ளனர் எனத் தெரிவித்தனர். அரசன் உடனே அருகில் இருந்த ஒரு புலவரைப் பார்த்துக் காரணம் கூறுமாறு கேட்டான். அதற்கு அப்புலவர் பின்வரும் பொருளமைந்த பாடலொன்றைப் பாடினர் 'நான் திருமாலின் புதல்வனுகவும், சிவகுமாரனுகவும், இருக்கிறேன். பிரம்மனுக்கு நான் சம மானவன். பூதகணங்கள் என்னைச் சூழ்ந்துள்ளன.' என்று ஐயனுர் சிந்திப்பதாகக் கவி பாடினுர் அப்புலவர். சாஸ்தா மூக்கிலிருந்து கைவிரலை எடுக்கவில்லை.

அரசன் அப்பய்ய தீக்ஷிதரைப் பார்த்துக் கவி பாடும்படிக் கேட்டுக்கொண்டான். அப்பய்ய தீக்ஷிதர் பின்வரும் பொருளமைந்த பாடலைப் பாடினார். ' '' நான் பார்வதியையும், திருமாலையும் அம்மா என்று அழைப்பேன்; சிவனைத் தந்தை என்று அழைப்பேன். திருமகளை என்ன முறை கூறி அழைப்பது என்று தோன்றவில்லையே என ஐயனார் சிந்தனை செய்கிறார்.'' என்ற பொருளமைந்த செய்யுளைப் பாடினார். அக்கவிதையைக் கேட்டவுடன் ஐயனார் மூக்கிலிருந்து கைவிரலை எடுத்துவிட்டார். அரசனும், ஏனையோரும் அப்பய்ய தீக்ஷிதரின் கவித்திறனைப் பாராட்டினர் என்று தீக்ஷிதேந்திர நூலில் கூறப்பட்டுள்ளது.

## 7. புஷ்கலை - பூரணை திருமணம்

ஐயனாரின் இடதுபுறமிருக்கும் அம்பிகை புஷ்கலை. இவ்வம்பிகை கரிய திருமேனி உடையவள். வலது கையில் மலரையும், இடது கையில் வரமுத்திரையையும் தரித்தவள். இடது காலை தொங்க விட்டும், வலது காலை மடக்கியும் இருப்பவள்.

### புஷ்கலையை ஐயனார் மணந்த வரலாறு:

நேபாள நாட்டில் பலஞன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் மந்திர-தந்திரங்களில் வல்லவன். காளிதேவியிடம் பக்தி கொண்டவன். காளிதேவிக்கு ஒரு கன்னியை அர்ப்பணித்தால் மூப்பின்றி வாழலாம் என்று சிலர் கூறக்கேட்டு ஒரு பெண்ணைக் காளி கோயிலுக்குக் கொண்டு சென்றான். அம்மன்னன் கொண்டு வந்த பெண் சிவபக்தி பூண்டவள். தனக்கு வரும் இடையூற்றிலிருந்து காத்தருளுமாறு சிவபெருமானை வேண்டினாள். சிவபெருமான் ஐயனாரை அனுப்பி அப்பெண்ணைக் காக்குமாறு செய்தார். பலஞன் ஐயனாரின் பேரழகில் ஈடுபட்டு அவரைத் தன் மருமகனாக அடைய விரும்பினான். தன் மகள் புஷ்கலையை மணம் புரிந்துகொள்ளுமாறு வேண்டினான். ஐயனாரும் அதற்கிசைந்து புஷ்கலையை மணந்து புஷ்கலாபதி என்ற பெயரைப் பெற்றார்.

பூரணை ஐயனாரின் வலது புறமிருக்கும் அம்பிகை. இவள் பொன்னிறம் கொண்டவள். இடது கையில் குவளை மலரை ஏந்தியவள். வலது கையைத் தொங்க விட்டிருப்பாள். இடது காலை மடக்கியும் வலது காலைத் தொங்க விட்டுமிருப்பவள்.

### பூரணையை ஐயனார் மணந்த வரலாறு:

வஞ்சி மாநகரில் பிஞ்ஞகன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் ஒருநாள் காட்டிற்குள் வேட்டையாடச் சென்றான். இரவு நேரம், மன்னனுக்குத் திசை தெரியவில்லை. இரவில் பூதகணங்கள் கானகம் வந்தன. அரசனைக் கண்டு அவனைக் கொல்லுவதற்கு நெருங்கி வந்தன. பிஞ்ஞகன் ஐயனாரை வேண்டினான். ஐயனார் மன்னன் முன் தோன்றினார். பூதங்கள் அஞ்சி ஓடின. ஐயனாரின் அழகில் ஈடுபட்ட பிஞ்ஞகன் தன் புதல்வியை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டினான். ஐயனாரும் அதற்கு இசைந்து பூரணையை மணந்து பூரணாபதியானார்.

பூரணை, புஷ்கலை இருவரும் சத்தியபூரணர் என்ற முனிவரின் புதல்விகள் என்றும், சௌகந்திகன், அம்பாலிகன் ஆகியோரின் புதல்விகள் என்றும் அவர்கள் தவம் செய்து ஐயனாரால் மணம் புரிந்துகொள்ளப் பெற்றனர் என்றும் கூறப்படுவதுண்டு.

## 8. ஐயப்பன் வரலாறு

வஞ்சி நாட்டில் ஐயனார் பூரணையுடன் மணந்து வாழ்ந்து வருவதை அறிந்த நேபாள மன்னன் பலஞன் தன் மகளை விடுத்து ஐயனார் பூரணையுடன் வாழ்வதைக் கண்டு வேதனையடைந்து ஐயனாரை நோக்கி மனிதனாகப் பிறந்து பன்னிரண்டு ஆண்டுகள் பிரம்மசாரியாக வாழ்வாயாக என்று சபித்தான். ஐயனாரும் நாம் நிலவுலகில் தோன்றுவதற்கு இது ஒரு காரண

மாயிற்று என்று கூறியும், அந்நேபாள மன்னனை நோக்கி, ''கேரளத்தில் பந்தன தேசத்தில் நீயே மன்னனாய்ப் பிறப்பாய், அங்கே நான் குழந்தையாக உம்மிடம் வந்து பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்வோம்.'' என்று கூறியும் மறைந்தார்.

கேரள நாட்டில் பந்தளம் என்ற பகுதிக்கு அரசனாகப் பாண்டிய மன்னன் பரம்பரையில் இராசசேகரன் என்ற பெயருடன் பிறந்து அரசு புரிந்தான் பலிஞன். திருமணம் ஆகிப் பல்லாண்டுகளாகியும் புத்திரப்பேறு வாய்க்காமையினால் மனவேதனை அடைந்த அம்மன்னன் சிவபெருமானை வேண்டிப் பணிந்தான். சிவபெருமான் திருவருளால் ஐயனார் அம்மன்னனின் குழந்தையாக வரத் திருவுளம் கொண்டார்.

ஒருநாள் காட்டில் வேட்டையாடச் சென்ற மன்னன் குழந்தையொன்று அழுதுகொண்டிருப்பதைக் கண்டு அதனருகில் சென்றான். ஒளியும், தண்மையும் உடைய அக்குழந்தையின் முகத்தைக் கண்டு வியந்தான். சிவபெருமான் அந்தணர் உருவில் வந்து அரசனை நோக்கி, ''மன்னா! இக்குழந்தை தெய்வாம்சம் பொருந்தியது. இதனைத் தெய்வம் உனக்கு அளித்திருக்கிறது. எடுத்துச் சென்று வளர்த்துவா. இக்குழந்தையின் பெருமைகளை விரைவில் நீ உணர்வாய்! என்று கூறி மறைந்தார்.

மன்னன் மகிழ்ச்சிக்கடலில் திளைத்தவனாய் குழந்தையை அரண்மனைக்கு எடுத்துச் சென்று அரசியிடம் கொடுத்து மணிகண்டன் எனப் பெயர் சூட்டி அன்போடு வளர்த்து வந்தான்.

### குருதக்ஷிணை

மன்னன் மணிகண்டனைக் குருகுலத்தில் சேர்த்துக் கல்வி பயிலுமாறு செய்தான் ஓதாமலே எல்லாவற்றையும் உணர்ந்த மணிகண்டனைப் பார்த்துக் குரு வியந்தார். மணிகண்டன் கடவுள் தன்மை பொருந்தியவர் என்று உணர்ந்த குரு, ஊமையும் குருடனுமாயிருக்கும் தன் மகனைக் குறையற்றவனாகச் செய்தருளுமாறு மணிகண்டனை வேண்டினார் மணிகண்டன் குருவின் மகனுக்கு இருந்த குருட்டுத் தன்மையையும், ஊமைத் தன்மையையும் ஒழித்து, அவனை நிறைந்த ஞானமும் உடல்நலமும் உடையவனாகவும் செய்தருளினார்.

### அறிவிழந்த அரசி

மணிகண்டனை மகனாக அடைந்தபின் மன்னன் மனைவி ஒரு ஆண்மகவைப் பெற்றிருந்தாள். அரசனும் அக்குழந்தைக்கு இராஜராஜன் எனப் பெயரிட்டான். மணிகண்டர் தம் இளவல் இராஜனோடு கூடி விளையாடி மகிழ்ந்திருந்தார்.

மன்னனின் அமைச்சன் மணிகண்டனின் பேராற்றலை உணர்ந்து, ''இவர் அரசரானால் நமக்குப் பெருமை இருக்காது.'' என்று நினைத்து எப்படியாவது மணிகண்டரை நாட்டைவிட்டு விரட்டிவிட்டு இராஜராஜனை அரசனாக்க வேண்டுமென்று திட்டமிட்டான். மணிகண்டனிடம் அளவற்ற அன்பைப் பொழியும் மன்னனிடமிருந்து மணிகண்டனை எவ்வாறு பிரிப்பது என்று ஆராய்ந்து முடிவில் அரசியிடம் சென்றான். அவளிடம், ''மன்னன் மணிகண்டனையே அரசனாக்குவான் போலத் தெரிகிறது. அரச பரம்பரையில் வந்த தங்கள் புதல்வன் இந்நாட்டு மன்னனாக ஆவதற்கு ஆவன செய்யுங்கள் என்று கூறினான். அரசி, ''அதற்கு வழி யாது?'' எனக் கேட்டாள். அமைச்சர் அரசிக்கு ஒரு உபாயம் சொல்லிக் கொடுத்தான். 'தாங்கள் தாங்க முடியாத தலைவலியால் தவிப்பவர் போல நடிக்க வேண்டும்.' என்னுடைய தூண்டுதலால், புலிப்பால் கொண்டு வந்து தடவினால்தான் தலைவலி தீரும் என்று மருத்துவர் கூறுவார். அதனைக் கேட்ட மணிகண்டன் தானே புலிப்பால் கொண்டுவந்து தருவதாகக் கூறிப் புறப்பட்டுப் போவார் புலியிடம் அகப்பட்டு இறப்பார்.' என்று தீயவழி கூறினான் அமைச்சன். மந்தரையின் வார்த்தையினால் மனம் மாறிய கைகேயி போல மந்திரியின் சூழ்ச்சிக்குப் பலியானாள் அரசி. அமைச்சன் கூறியவாறே தலைவலி வந்தது போல நடித்தாள். மருத்துவர், இந்நோய் புலிப்பால் இன்றித் தீராது என்றனர். மணிகண்டர், நான் புலிப்பால் கொண்டு வருகிறேன் என்று கூறிப் புறப்பட்டார். கானகம் நோக்கிச் சென்றார்.

## மகிஷி வதம்

தனு என்ற அரசனுக்கு ரம்பன், கரம்பன் என்று இரு புதல்வர்கள் இருந்தனர். ரம்ப னுடைய மகன் மகிடாசுரன் துர்க்கையால் கொல்லப்பட்டான். கரம்பனுக்கு மகிஷி என்ற பெய ருடைய அரக்கப் பெண்ணொருத்தி இருந்தாள். மகிஷி பிரம்மனைக் குறித்துத் தவம் செய்து வரம் பல பெற்று தேவருலகம் சென்று அரசு பெற்று, தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் இடை யூறுகள் பல விளைவித்து வந்தாள்.

ஐயனார் மணிகண்டராகக் கானகம் வருவதை ஞானக்கண்களால் அறிந்த இந்திரன் முத லான தேவர்களும், முனிவர்களும் கானகம் வந்தனர். அவரை அழைத்துக் கொண்டு மேற்கு மலைத்தொடரில் பொன்னம்பலமேடு என்னும் இடத்திற்குச் சென்றனர். காந்தமலை எனப்படும் அம்மலையில் பொன்னம்பலத்தில் சிம்மாசனத்தில் மணிகண்டரை எழுந்தருளச் செய்து, தங்களுக்கு மகிஷி என்ற அரக்கியால் ஏற்பட்ட துன்பங்களைக் கூறி, மகிஷியை அழித்துத் தங்களைக் காத் தருளுமாறு மணிகண்டரை வேண்டினர். மணிகண்டர் உடனே தெய்வலோகம் சென்றார். மகிஷி யுடன் போரிட்டு வென்று அவளைக் கொன்று தேவர்களைக் காத்தருளினார்.

## புலி வாகனர்

மகிஷியைக் கொன்றபின் மணிகண்டர் காந்தமலை வந்து அமர்ந்து தன் தாய் புலிப்பால் கேட்டதை இந்திரனிடம் கூறினார். இந்திரன் புலியானான். மணிகண்டர் அதன் மீது ஏறி அமர்ந்தார். ஏனைய தேவர்கள் பெண் புலிகளாய் உடன் வந்தனர்.

புலி மீது ஏறிப் புலிக்குழாத்துடன் வரும் மணிகண்டரைக் கண்டு நகர மக்கள் அஞ்சி ஓடினர். அமைச்சன் மயக்கமுற்றான். அன்னையும் அடாது செய்ததை எண்ணி வருந்தினாள். தந்தை, மணிகண்டனை வாரித் தழுவினார். மணிகண்டன் அமைச்சரைத் தெளியவைத்துத், தாயைத் தேற்றி, 'அன்னையே எனக்கு அரசாளும் விருப்பம் இல்லை.' இராஜராஜனுக்குப் பட்டம் சூட்டி நாட்டை அரசாளச் செய்யுங்கள். உலகநலம் கருதி பன்னிரண்டு ஆண்டுகள் உங்கள் பிள்ளையாய் வளர்ந் தேன். நான் வந்த காரியம் முடிந்தது போய் வருகிறேன், என்று கூறிப் புறப்பட்டார் மன் னனை நோக்கி, 'சபரி மலையில்' சரங்குத்திய இடத்தில் தனக்கு ஓர் ஆலயம் அமைக்குமாறு கூறி விடைபெற்றுக் காந்தமலை சென்றார்.

## சபரிமலையில் சாஸ்தா கோயில்

மணிகண்டரின் பிரிவாற்றாது மன்னன் இராஜசேகரன் மனம் வருந்தினான். கும்பமுனி அம் மன்னனின் வருத்தத்தை மாற்றி ஆறுதல் கூறினார். சில நாட்கள் சென்றபின் மன்னன் தன் படையோடு சபரிமலை சென்றான். அங்கு சரங்குத்திய மரத்தைக் கண்டு, அவ்விடத்தில் கோயி லைக் கட்டத் தீர்மானித்தான். இரவுப்பொழுது வந்தது, உறங்கிய மன்னனை ஒரு பூதம் தூக்கிச் சென்று காந்தமலையில் இருந்த ஐயப்பரிடம் விட்டது. மன்னன் காந்த மலையிலுள்ள, பொந்கோயி லில் தேவர்கள் புடைசூழ வீற்றிருப்பதைக் கண்டான். மணிகண்டர் மன்னனை வரவேற்று உபசரித் தார். சபரிமலையில் தான் அமர்ந்துள்ள ஐயனார் கோலத்தில் ஒரு கோயில்கட்டுமாறு கூறினார். 'இடை யூறுகள் வரின், பயன்படுத்துக' என்று ஒரு கத்தியையும் வழங்கி அனுப்பினார். மன்னன் சபரி மலையில் சிறந்த சிற்பிகளைக் கொண்டு, கோயிலில் கட்ட முற்பட்டான். இந்திரன், 'தானே அக்கோயிலைக் கட்ட வேண்டும்' என்று மன்னனைத் தடுத்தான். இருவருக்கும் போர் மூண்டது. மன்னன் மணிகண்டர் தந்த கத்தியால் இந்திரனோடு போரிட்டான். முடிவில் இந்திரன் மன்னனைச் சரண் அடைந்தான். மன்னனும், இந்திரனும் விசுவகர்மாவின் துணையோடு பதினெட்டு படி களுடன் கூடிய சபரிமலைக் கோயிலைக் கட்டினர். சாஸ்தாவின் திருவுருவைப் பரசுராமர், அகத்தி யர், தேவர், முனிவர் முதலியோர் துணையுடன் வழிபட்டனர். மன்னன் பிரதிஷ்டை செய்தான்.

சின்முத்திரையோடு கூடிய வலக்கரமும், முழங்காலின் மீது நீட்டிய இடக்கரமும், கொண் டவராய்க் குந்தி அமர்ந்த கோலத்தில் சாஸ்தாவைப் பிரதிட்டை செய்தான் மன்னன். அன்று முதல் இன்று வரை 'சபரிமலை' சாஸ்தா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அன்புத் தெய்வ மாய் விளங்கி அருள் புரிந்து வருகின்றார்.

# இறைவனின் தனிப்பெருங் கருணை

வியாகரண சிரோமணி பூரண - தியாகராஜக் குருக்கள், B. A. Hons. (Cey.)
சம்ஸ்கிருத, இந்துநாகரிக விரிவுரையாளர், சிவாநந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.

இறைவன் "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்" என்று எழுதிக்காட்ட முடியாதவன், "விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந்து எல்லையில்லாதானை" எங்கும் நீக்கமற நிறைந்துள்ளான் என்று முக்காலமுணர்ந்த முனிவர்களும், தத்துவஞானிகளும், சமயகுரவர்களும் புகழ்கின்றனர். எல்லாவற்றுக்கும் மூலப்பொருளாய் உட்பொருளாய் ஒன்றாய் உள்ள அப்பரம்பொருளே பலவாய்ப் பல்கிப்பெருகி இவ்வுலகெலாம் பரந்து விளங்குகின்றது. அப்பரம்பொருளை "அப்பன்நீ அம்மைநீ ஐயனுமநீ அன்புடைய மாமனும் மாமியும் நீ" எனச் சொந்தம் கொண்டாடி அன்பு பாராட்ட முனைகின்றது பேதை உள்ளம். ஊர் பேர் இன்றி - குணம் குறி இல்லாத அப்பரம்பொருளுடன் இனம் கொண்டாட விழைகின்ற மக்கள் அதற்குப் பெயர், ஊர், உறவு, உறையுள், உணவு ஆகியவற்றை அளித்துப் போற்றுகின்றனர். மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானித்துத் துதிசெய்ய அதற்கு உருவினையும் கற்பித்து "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம், தெள்ளேணம் கொட்டாமோ" என்ற மணிவாசகரின் மணிமொழிக் கிணங்கப் பலவிதமான பெயர்களைக் கூறி, வழிபடுவதற்கு ஆலயமும் அமைக்கின்றனர். எங்கும் பரந்துள்ள சக்தியை ஓரிடத்தில் குவித்து, அதன் அருளை - பயனைப் பெறுவதற்காக அமைக்கப்பட்டவையே திருவுருவங்களாகும்.

எல்லாவற்றையும் கடந்து நிற்கும் இறைவன், ஆன்மாக்கள் தன்னை மனத்தால் நினைந்தும் வாயால் வாழ்த்தியும் உடலால் வணங்கியும் உய்தியடைதற் பொருட்டு ஆன்மாக்களின் மேற்கொண்ட தனிப்பெருங் கருணை காரணமாகத் தனது இச்சையினால் பலவகைத் திருமேனிகளைக் கொண்டு அருள் புரிகின்றான்.

இறைவன் வேறொன்றையும் நோக்காது தன்னிலையில் தானிருக்கும் போது ஒருவனாய்ச் சிவன் என்றிருப்பான். இந்நிலையில் அவனுக்கு யாதொரு செயலுமில்லை. அதனால் செயல் செய்வதற்கு வேண்டிய உருவம் முதலிய எதுவுமில்லை. ஒன்றும் செய்யாது அமர்ந்திருப்பவனை நோக்கி, "உனக்குச் சக்தியில்லையெனில் சிவனேயென்று சும்மாகிட" என்று கூறுவது இதனை ஓரளவு புலப்படுத்தும். தன்னிலையில் இருக்கும் சிவன் தனக்கு இயல்பாயுள்ள தனிப்பெருங் கருணை காரணமாக உயிர்களை நோக்கி, அவற்றின் பொருட்டு ஐந்தொழிற் செயலைச் செய்யத் தொடங்கும் போது தானும், தனது சக்தியும் என இருகூறாகி விளங்குவான். சிவமும் சக்தியும் இரண்டாகிய போதும் இரண்டும் இரண்டு தனிப் பொருள்களல்ல.

மேலும், இறைவன் மலரில் மணம் போன்றும், எள்ளில் எண்ணெய் போன்றும், மணியில் நாதம் போன்றும், அக்கினியில் பிரகாசம் போன்றும் எவ்விடங்களிலும், எக்காலங்களிலும் எப்பொருள்களிலும் வியாபித்துள்ளார் என்று தக்ஷகாண்டமும்,

"சர்பி: க்ஷீரேயதா வ்யாப்தம் திலதைல மிவஸ்திதம் /
அநலஸ்ச யதா காஷ்டே ததா சர்வ கத: சிவ:" //

நெய் பாலில் எங்ஙனம் வியாபித்துள்ளதோ, அக்கினி விறகில் எங்ஙனம் வியாபித்துள்ளதோ, அவ்வாறு எள்ளில் எண்ணெய் போலச் சர்வவியாபகராகிய சிவபெருமான் நிலைபெற்றுள்ளார் என்று சிவஞான சங்கிரகமும் கூறுகின்றன.

"விறகிற்றீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

எனத் திருநாவுக்கரசு நாயனாரும் அருளியுள்ளமை இதனையே வலியுறுத்துகின்றது.

மேலும், இறைவன் அஷ்டமூர்த்தி ஸ்வரூபமாக எங்கும் வியாபித்துள்ளான். இதனை "இயமானன் இந்து இரவி எரி வான் நிலம் சலிலம் எறிகால் எனும் பகுதி இருநான்கு மயமான சுந்தரன்" [ யஜமானன் -- ஆன்மா, சந்திரன், சூரியன், அக்கினி, ஆகாயம், பிருதிவி, ஜலம், வாயு ஆகிய அஷ்டமூர்த்தி உருவமாக விளங்கும் சுந்தரேஸ்வரர் ] என திருவிளையாடற் புராணம் கூறும்.

"மூவுருவின் முதலுருவாய் இருநான்கான
மூர்த்தியே என்று முப்பத்து மூவர்..." எனஅப்பரும் ;

"அட்டன் அழகாக அரைதன் மேலரா வார்த்து..." என சுந்தரரும் ;

"போற்றி நின் கருணை வெள்ளப் புது மதுப்புவனம் நீர் திக்காற்று இயமானன் வானம் இரு சுடர்க் கடவுளானே" என்று மாணிக்கவாசகரும் கூறியுள்ளார்

சாகுந்தல நாடகக் காப்புச் செய்யுளில்

"ப்ரத்யக்ஷாபி : ப்ரபந்ந: தநுபிரவதுவ :
தாபிரஷ்டாபிரீச :"

[ "எட்டு உருவம் தாங்கிக் கண்முன்னே தோன்றுமீசன் எமக்கு அருள் புரிக" ] என்று கவிச்சக்கரவர்த்தி காளிதாசரும்,

"பூரம்பாம் ஸ்யநலோ அநிலோம்பர மஹர் நாதோ ஹிமாம்சு : புமான் இத்யாபாதி சரா சராத் மகமிதம் யஸ்யைவ மூர்த்யஷ்டகம்" என ஆதிசங்கரரும் கூறுவதனால் அறியலாம்.

இத்தகைய பெருமை வாய்ந்த இறைவன் உயிர்கள் மீது கொண்ட தனிப்பெருங் கருணையினால் படிப்படியாக உருவநிலை பெறுகின்றார். வேதத்தில்,

"ஆகாசாத் வாயு : வாயோரக்னி : அக்னே ராப : அத்ப்ய ப்ருதிவி
ப்ருதிவ்யா ஓஷதய..."

ஆகாயத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து அக்கினியும் அக்கினியிலிருந்து நீரும், நீரிலிருந்து பிருதிவியும் தோன்றுவனவாகக் கூறப்பட்டுள்ளது.

ஆகாசம் சப்தம் எனும் குணம் மாத்திரமேயுடையது.

வாயு சப்தம், ஸ்பரிசம் எனும் இரு குணமும் தேயு ( அக்கினி ) ஸ்பரிசம், சப்தம் ரூபம் எனும் முக்குணமும், ஜலம், சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம் எனும் நாற்குணமும், பிருதிவி, சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம் எனும் ஐந்து குணமும் உடையன.

"சப்தைக குண ஆகாச : சப்த ஸ்பர்ச குணோ மருத் /
சப்த ஸ்பர்ச ரூபகுண ப்ரதானோ வந்ஹிருச் யதே //
சப்த ஸ்பர்ச ரூபரச குணைகம் சலிலம் மதம் /
சப்த ஸ்பர்ச ரூபரச கந்தாட்யா ப்ருதிவி மதா //

என்று கைலாச சங்கிதையில் கூறப்பட்டுள்ளது.

ஆகாசம் கண்ணுக்குப் புலனாகாத நிலை. வாயு உருவின்றிக் கண்ணுக்குப் புலனாகாவிடினும் ஸ்பரிசத்தினால் உணரும் நிலை. அக்கினி கண்ணுக்குப் புலனாகும் நிலை. இவ்வாறு இறைவன் கட்புலனுக்கு விடயமாகத் தோன்றியமையையே பிரமவிஷ்ணுக்களின் முன் சோதிப் பிழம்பாகத் தோன்றிய வரலாறு காட்டுகின்றது. இவ்வாறு சோதி நிலையில் தோன்றியமையே சிவலிங்கம் ஆகும்

இது, "ஏதோ ஒரு பொருளாகக் கண்ணுக்குத் தோன்றுவதனால் உருவமாகவும், ஏனைய உருவத் திருமேனிகள் போன்று கை கால் முதலிய உறுப்புக்களில்லாமையினால் அருவமாயும் உள்ளமை காரணமாக அருவுருவத் திருமேனி எனப் பெயர் பெறுகின்றது. அடுத்து ஜலம் என்னும் நிலை. இது சப்தஸ்பர்ச ரூப ரசமுடைய நிலையாகும். இதிலிருந்து பிருதிவி நிலையடையுங்கால் பல உருவங்களில் காட்சி தருதலையும் காணலாம்.

இதனை,

"மண்ணதனி லைந்தை மாநீரி னான்கை
வயங்கெரியில் மூன்றை மாருதத் திரண்டை
விண்ணதனி லொன்றை விரிகதிரை.." என நாவுக்கரசரும்

"பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி" என மாணிக்கவாசக சுவாமிகளும்

கூறுவது உறுதிப்படுத்துகின்றது.

இவ்வாறு உருவநிலை பெற்று அருள் பாலிக்கும் இறைவனை வேத மந்திரங்கள், திருமுறைகள் ஆகியவற்றை ஓதி வழிபடுகின்றோம். சிவம் என்றால் மங்களம் என்பது பொருள். தானே மங்கள உருவினராக இருந்து ஆன்மாக்களுக்குச் சர்வ மங்களத்தையும் அருளுகின்றான். சிவன் பஞ்சாக்ஷர ஸ்வரூபமாகவும் விளங்குகின்றார்.

வேதங்கள் ருக், யசுர், சாமம் அதர்வம் என நான்கு ஆயினும், அதர்வ வேதம் லௌகிக வாழ்வுக்குப் பயன்தரவல்ல மந்திரங்கள் கிரியைகள் ஆகியவற்றைப் பெரும்பான்மையாகக் கொண்டமையினால் முற்காலத்தில் ருக்யசுர்சாமம் ஆகிய மூன்று வேதங்களே முதலிடம் பெற்று ஏற்றிப் போற்றப்பட்டன. த்ரயீ (மூன்றன் கூட்டம்) என்று வேதங்களுக்குப் பொதுப்பெயர் உண்டு. இம் மூவேதத்துள்ளும் நடுப்பாகத்திலுள்ளது யசுர்வேதம். அந்த யசுர் வேதத்தில் ஏழு காண்டங்களுள. அவற்றின் மத்திய பகுதியான நாலாவது காண்டத்தில் மிளிர்கின்றது "ஸ்ரீ ருத்ரம்" எனும் பகுதி. அதிலும் மத்திய பாகத்தில் நடுநாயகமாக விளங்குகின்றது. "நம: சிவாய" எனும் பஞ்சாக்ஷரம் - ஐந்தெழுத்து மந்திரம். அதன் மத்தியிலுள்ளது சிவனார் திருநாமமாகிய "சிவ" எனும் ஈரெழுத்து மந்திரம்.

விலைமதிப்பற்ற - நிகரில்லாத சிறந்த இரத்தினத்தைப் பல அடுக்குப் பெட்டிகளின் நடுவே மிகப் பாதுகாப்பாக வைத்து, கண்ணுங்கருத்துமாகப் போற்றிப் பாதுகாப்பது போல் சிவனார் திருமந்திரமான பஞ்சாக்ஷரத்தை வேதங்களின் நடுநாயகமான யசுர் வேதத்தின் நடுவே இடம் பெற்றுள்ள ஸ்ரீ ருத்திரத்தின் மத்திய ஸ்தானத்தில் வைத்து எத்தனை கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாத்துள்ளனர் முக்காலமுணர்ந்த தவயோகிகள் என்பது புலனாகின்றதல்லவா!

மேலும், வேதமாகிய மஹா புருஷனுக்குக் கண்ணாவது 'ருத்திரம்'; கண்மணியானது 'நம: சிவாய' என்னும் பஞ்சாக்ஷரம் மணியாடு பாவையாயுள்ளது. சிவனார் நாமமாகிய 'சிவ' எனும் ஈரெழுத்து ஆகும்.

இதனையே திருநாவுக்கரசு நாயனாரும் 'திருவே என் செல்வமே' என்னும் தேவாரத்தில்

"கண்ணே கண்ணிற் கருமணியே
மணியாடு பாவாய் காவாய்" என அற்புதமாக விளக்கியுள்ளார்.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இறைவனை உண்மையான பக்தி மூலமே நாமடையலாம். அகங்காரம் - நான் எனும் செருக்கு மேலோங்கினால் இறைவனை அடையவே இயலாது

பிரம விஷ்ணுக்களாலேயே அறிய - அடைய - முடியவில்லையே ஏன்? அகங்காரமே அதற்குத் தடையாயிற்று.

இறைவனின் அடர்ந்த சடாபாரத்தைக் காடாகவும், திருவடியைத் தாமரையாகவும் வர்ணித்தல் மரபு. கமலங்கள் கணக்கின்றி மண்டிக் கிடக்கும் தாமரைத் தடாகத்தில் வாழும் அன்னப் பறவைக்கு மிகப் பரிச்சயமானது கமலம். அடர்ந்த காடுகளில் வாழும் பன்றிக்குப் பழக்கமானது காடு. நிலைமை இவ்வாறிருக்க - காடு போல் அடர்ந்த சடாபாரம் மிளிரும் இறைவனின் திருமுடியையும், பாத கமலமெனும் திருவடித் தாமரையையும் தேடிப் போந்த பிரம விஷ்ணுக்களில் பிரமன் அன்ன உருவெடுத்து அதற்குப் பழக்கமில்லாத, சிவபிரானின் சடாபாரமிலங்கும் திருமுடியெனும் காட்டையும், விஷ்ணு பன்றி வடிவெடுத்து அதற்கு அறிமுகமில்லாத (திருவடித்) தாமரையையும் தேட விழைந்தமையாலன்றோ அவர்கள் அடிமுடியைக் காணமாட்டாராய்த் திகைத்து இளைத்தனர். இவ்வாறு அவர்கள் மாறுபடத் தேடிப் போந்தமைக்குக் காரணம் யாது? அஹங்காரம் அறிவுக்கண்ணை; சிந்திக்கும் திறனை மறைத்து விட்டமை தானே!

எனவே, நாமும் ஒருருவமற்று எங்கும் வியாபித்துள்ள இறைவனை, அட்டமூர்த்தி உருவமாகி - உயிர்கள் மேற்கொண்ட கருணையினால் உருவநிலை பெற்றுக் காட்சி தருகின்றவரும், வேதத்தில் மிக அரிய பொருளாய் அமைந்து விளங்கும் பெருமைமிக்கவருமான இறைவனை நான் என்னும் அகந்தையை நீக்கி, மனம் வாக்கு காயம் எனும் திரிகரண சுத்தியுடன் வணங்கினால், நிச்சயம் அவனருள் பெற்றுப் பூரணமான ஆனந்தமான வாழ்வு வாழலாமன்றோ!

---

திண்ணமா புரத்திற் கூத்தன்
திருவரு ணிறைத லாலே
வெண்ணிறக் கமல மாதும்
விண்டுள மகலா மாதும்
நண்ணியந் நகரி லொன்றாய்
வைகுவர் நயந்த கல்வி
பண்முதற் செல்வ மாதி
வளமெலா மலிந்த வன்றே.

-- ஈழத்துச் சிதம்பர புராணம்

# மார்கழி நினைவூட்டுவது.........

கலாநிதி வே. இராமகிருஷ்ணன் அவர்கள்
மெய்யியல்துறை பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அமாவாசை பௌர்ணமியாகிய இரு பக்ஷங்களைக் கொண்டு ஒரு மாதத்தை (திங்களை) அளவையிடுகின்றோம். இவ்விதமாக ஆறு மாதங்களைக் கொண்டு அயனம் என்பதை நிர்ணயித்துக் கொள்கிறோம். ஆடி - ஆவணி - புரட்டாதி - ஐப்பசி - கார்த்திகை - மார்கழி ஆகிய ஆறு மாதங்களையும் தக்ஷிண அயனம் (தக்ஷணாயனம்) என்போம். தேவலோகத்திலுள்ள இந்திராதி தேவர்களுக்குத் தக்ஷிணாயமம் இரவுக் காலமாகும். ஆகவே, மார்கழி மாதம் இரவு முடிவுற்று விடியுங்காலை போன்றுளது என்றும் கொள்ளலாம்.

தக்ஷணாயனத்தில் சூரியன் தென்திசை நோக்கிச் செல்லுமாப் போல் தோன்றும். மார்கழி மாதத்தில் வட திசையை நோக்கிச் செல்ல ஆரம்பிக்குமாப் போல் காட்சியளிக்கும். வட துருவத்தில் வசிக்கும் எமக்கு இது வரவேற்கத்தக்க யாத்திரை போலிருக்கும். அறுவடை காலம் அதனையடுத்து சிறுபோகம். பின்பு விவசாயிகள் ஓய்வுபெற்று திருவிழாக்கள் நடத்தியும், களியாட்ட விழாக்களில் ஈடுபட்டும், இன்புறும் காலத்தையே உத்தராயனம் என்போம். ஆகவேதான் இரு அயனங்களுக்கிடையில் மார்கழி மாதம் காலசந்தி போலிருக்கின்றது.

மேலை நாட்டவருக்கும் இம்மாதம் முக்கியத்துவம் வாய்ந்தது. பனிக்காலம் குன்றி, இளவேனிற் காலத்தைச் சுட்டிநிற்கும் மாதம் இது. இக் காலகட்டத்தில்தான் இறைவனின் மகன் யேசுகிறிஸ்து மக்கள் அனுபவிக்கும் துன்பத்தினைத் தான் ஏற்பதற்காக அவதரித்தார் என்பர். அங்குள்ள மக்கள் தம் இன்னல்களைப் போக்க அவதரித்தமைக்கு நன்றி கூறுமுகமாக இறைவனைப் பிரார்த்திப்பது வழமையாக இருந்தது. பொருளாதார வசதிகள் கூடக்கூட காலப் போக்கில் வீணுக களிப்புக்குரிய காலமாக்கப்படும் போக்கினை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதனது ஆன்மீக முக்கியத்துவத்தை இளஞ்சந்ததியினர் மீண்டும் உணரத்தொடங்கும் அறிகுறிகளும் உண்டு.

பரத கண்டத்தில் வாழும் வைணவர்களும், சைவ சமயிகளும் அதன் வாரிசுகளாகவுள்ள வட இலங்கையில் வாழும் தமிழர்களாகிய நாமும் மார்கழி மாதத்தில் நோன்பு நோக்கும் வழமையை இன்னமும் கைவிடாதிருக்கிறோம். அதிகாலையில் கேட்கும் ஆலய மணியோசையும், கிணறுகளிலும், திருக்குளங்களிலும் நீராடும் பெண்களின் ஆரவாரமும், வானொலிப் பெட்டியில் திருப்பள்ளியெழுச்சி ஓதப்படுவதும், மரபினின்றும் விலக முயலுவோருக்கு, நமக்கென ஒரு பாரம்பரியமுண்டு என்பதை நினைவுறுத்துகின்றன. நாம் செய்த வினைகளின் விளைவாக ஏற்பட்ட மாசுகள் தீரவும் நமது உள்ளங்களைத் தூய்மைப்படுத்தவும் பலவித நோன்பு முதலிய கருமங்களை நம் முன்னோர் செய்து வந்துள்ளார்கள். அவ்வாறே வாழ்ந்து நாமும் கட்டுப்பாடுள்ள சமுதாயத்தைப் பேணிப் பாதுகாக்க முயல்கின்றோம். இவ்வாறு இல்லற வாழ்க்கையில் ஈடுபடும் நாம் கடைப்பிடிக்கும் விரதங்களில் மார்கழி நோன்பும ஒன்றாகின்றது.

இந்நோன்பு எல்லோருக்கும் பொதுவாகவும், கன்னியருக்குச் சிறப்பாகவும் உரியது. நாடு மழை பெய்து வளம்பெற வேண்டும் என்பதே பிரதான நோக்கம். கன்னியர்கள் தாம் விரும்பும் உத்தம நாயகர்களை மணக்கவேண்டிக் கையாளும் நோன்பிது. இயற்கை அன்னை மனமுவந்து நாட்டை வளம்பெற ஆக்கும் அதே அளவு குடும்பம் சீராக அமைவதும் வளம் என்பதன் பொருளுள் அடங்கும். கன்னியர்கள் விலை பேசி விற்கப்படுவதும், பல வறிய கன்னியர்கள் தமக்குத் தகுந்த வாழ்வு இல்லையேயெனத் தவிப்பதும், பண உறவினால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் அன்பு குன்றி, சச்சரவுகள் ஏற்படுவதும் நாம் நேரில் காணக்கூடிய சம்பவங்களாக இருக்கும் இந்நாட்களில் குடும்ப நலம் பெறவும், நாடு நலம் பெறவும் மார்கழி நோன்பு அவசியமாகின்றது என்பது உணர்த்தப்பட வேண்டியிருக்கின்றது.

பண உறவுகள் ஏற்பட்டுள்ள சமூகங்களில், சமுதாயம் வேறு தனி மனிதன் வேறு எனும் கொள்கை இயல்பாகவே நிலைத்துவிடும். இங்கு சமூகம் என்ற உணர்வு குன்றி, மனிதரது கூட்டுத் தொகை என்பதே சமூகத்தின் பொருளாகிவிடும். இங்கு மனித உறவு முறைகளை நெறிப்படுத்தும் இலட்சியங்கள் மங்கி, பஸ் ரயில் வண்டிகளுள் போட்டிபோட்டு ஏறும் சனத்திரள் எனும் மனப்பான்மை குடிகொண்டு, மனிதன் தான் வாழும் சுற்றுடலினின்றும் அந்நியப்படுத்தப்பட்டவனுகின்ருன். உழைப்புக்கு மதிப்பில்லாது போய்விடும். சுற்றுடல்களில் உள்ளவர்கள் மீது நம்பிக்கையின்மை சர்வ சாதாரணமாகிவிடும். இவ்வித சூழலில் பணமே காப்புறுதியாகின்றமையால் எங்கு சென்ருலென்ன, எவ்வாறு தான் உழைத்தாலென்ன எனும் மனப்பான்மை வேரூன்றிவிடும். இவ்வித போக்கின் விளைவாக நன்று, தீது எனும் நியமங்கள் வருவாயையே அளவையாகக் கொண்டதாய் விடும். உழைப்பாளிகள் நாட்டையே விட்டு வெளியேறத் தொடங்குவர். பெண்ணும் உடல் உணர்வுகளுக்கு விடயமாகும் பண்டமாகக் கருதப்படுவாள், குடும்பம் சீரழியும், இளஞ்சந்ததியினரை வளர்த்தெடுக்கும் பொறுப்பு மாற்ருரிடம் ஒப்படைக்கப்படும். நோன்புகள் வெறும் சம்பிரதாயமாகலாம். இவ்வித இக்கட்டான நிலைக்கு ஆளாகும் இனம் எதிரிகளது நகைப்புக்கும் நையாண்டிக்கும் தாக்கலுக்கும் இலக்காகிவிடும். மறுபுறத்தில் அவ்வினத்தில் அங்கம் வகுப்பவர்களும் நிறைவு காணுது அற்பசொற்ப விடயங்களில் இன்பங்காண முயல்வர். நிம்மதியிராது.

இவ்வித சூழல் நாயன்மார் காலத்திலும் நிலவியிருந்திருக்க வேண்டும் என்பதே ஊகம். சிவன்முத்தராகிய இந்த ஞானிகள் தாம் அனுபவித்த உண்மைகளைச் சாதனைகள்மூலமும், பாடல்கள் வாயிலாகவும் பிறரிடம உணர்த்த முயன்றனர். ''மாம்பழ அனுபவத்திலோ மண்ணுங்கட்டி அனுபவத்திலோ நம்மை அழுத்திவிடுவது எளிதாகலாம்'' என்கிருர் தே. பொ. மீனுட்சிசுந்தரனுர் (அணிந்துரை - திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம், மு. கதிரேசச் செட்டியாரது கதிர்மணி விளக்கம், சென்னை, 1965) ஆனுல் ''இருள் கடிந்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன் நீயலாற் பிறிது மற்றின்மை'' என்று பொங்கிவரும் கடலுட் காட்சி அனுபவமோ மாற்றம் மனம் கடந்த அனுபவமாம். அந்த அனுபவத்தில் நம்மை ஆழ்த்துவது செயற்கரிய செய்யும் பெரியார் செயலாம்'' என்பதே மீனுட்சிசுந்தரனுரது முடிவு. ''தேற்றம் இலாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே'' எனப் பாடுகின்ருர் மாணிக்கவாசகர் (திருப்பாண்டிப் பதிகம் - 10) பணிவும் [illegible] புணர்வும் மிகுந்த நிலையில் ''ஊனினை உருக்கி'' (அதன் விளைவாக) ''உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் (திருவருளால்) சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெருமானே யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்'' எனப் பாடியதன் மூலம் இலட்சியம் எது மார்க்கம் எது என்பதும் உணர்த்தப்பட்டு வாழ்க்கையில் தளர்ச்சி ஏற்படாதிருப்பதற்குரிய நங்கூரம் எது என்பதும், திருஎம்பாவை பாடிய நோக்கம் இறைவன் திருவடியைப் புணர்தற்கு என்பர். பிரிந்த நிலையில் உருகுவதை உணர்ந்த திருவருட் சத்தி ''அன்பின் ஐந்திணைப் பேற்றைப் பயக்கவல்ல பல்வகைக் காதல்நெறி பற்றியே பாடுக'' என நினைவுறுத்த அங்ஙனமே திருஎம்பாவை முதல் திருப்பள்ளியெழுச்சி ஈருக, பலவகைக் காதல் நெறி பற்றியே பாடினுரென்பர். மாணிக்கவாசகர் வரலாறு சன்மார்க்க முறையைப் புலப்படுத்தும் என்பதும் உண்மையே. 'சத்தியை வியந்தது' என வழங்கப்பட்ட தலைக்குறிப்பைப் பிரபஞ்ச உற்பத்தியில் நவசத்திகளை மாணிக்கவாசகர் துயிலுணர்ந்திருமென்றும்

கூறப்படுகின்றது. இவ்விதச் சித்திரத்தை விளக்கும் திருப்பாவையிலிருக்க பெண்கள் மார்கழி நீராடி நோற்பதையும் குறிப்பிடுகின்றார் என்பதைக் கவனித்தல் வேண்டும். பெண்கள் சமூகத்தில் தமக்குரிய அந்தஸ்தைப் பெறக் கைக்கொண்ட நோன்புகளில் இதுவே விசேஷமானது. "பெய்யெனப் பெய்யும் மழை" எனும் சக்தியைப் பெற சர்வதேச மாதர் ஆண்டு என ஆர்ப்பாட்டம் செய்யவோ பெண் தளை நீக்க இயக்கம் நடத்தவோ வேண்டிய அவசியமில்லை.

வேறு ஒரு விடயமும் குறிப்பிடத்தக்கது. பல புனித ஸ்தலங்களில் இறைவன் உறைகின்றான் எனப் போற்றிப் பாடியிருப்பதைக் காணலாம். அனுபூதிமான்கள் பாடியதால் புனித ஸ்தலங்களாயின. என்றோ புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்ததினால் அனுபூதிமான்கள் ஆயினர். என்றோ வாதிக்கவில்லை. இறைவன் படைத்த அண்டப் பகுதியின் அளப்பருந் தன்மையையும், வளப்பெருங் காட்சியையும் கண்டு வியந்த அடிகளார் அதனுள் அடங்கிய தென்னாட்டின் தில்லை, திருப்பெருந்துறை, திருவண்ணாமலை போன்ற ஸ்தலங்களின் புகழைப் பாடும்போது முரண்பாடு ஒரு புறத்திலும், குறுகிய தேசாபிமானம் வேறொரு புறத்திலும் இருப்பதாகத் தோன்றும். மிலேச்சரென அந்நியரை வெறுக்கும் மனப்பான்மையல்ல இது. நாம் வாழும் சுற்றுடல் தெய்வீகத் தன்மை வாய்ந்தது என்பதே பொருள். தெற்கே திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீச்சரமும் எல்லையாக வடக்கே விந்திய மலைக்குள் அடங்கிய புண்ணிய பூமி என்றார் ஆறுமுக நாவலர். இந்த எல்லைக்குள்ளேயே நம் முன்னோர் நெறிப்பட வாழ்ந்தும், வாழ்ந்து காட்டியும் நம்மை நெறிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். இதனையே சுப்பிரமணியபாரதி "நம் தந்தையார் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்று பாடினார்.

முழுவதும் துன்பமயமானது என நினைந்து துறவு மார்க்கத்தைக் கையாண்ட சில சமயங்கள், சமூகம் வேறு துறவிகள் வேறு எனக் கூறுபோட்டு, சமூகத்தை நெறிப்படுத்த இயலாது மங்கிப் போயின. வேறு சில, சமயம் என்பது முழுநேர ஊழியரது பொறுப்பு எனக் கொண்டதால் ஆன்மசக்தி குன்றிய நிலைக்குத் தள்ளப்பட்டன. சைவம் மட்டுமே தேசியத்தின் எல்லைகளைச் சுட்டிக்காட்டி, உலகு பரம்பொருளால் படைக்கப்பட்டதென்றும், எங்கும் அவன் நிறைந்து நிற்பதனால் நாம் வாழும் நாடு புண்ணிய பூமியென்றும், துன்பத்தைக் கண்டு மனந் தளராது வாழ்க்கை சோதனைக்குரிய கருவியாகும் என்றும், நற்றுணையாவது நமச்சிவாயவே என்றும், சமூகத்தை ஒன்றிணைக்கும் சக்தியாகவும், நிறைவுள்ள வாழ்க்கைக்குரிய இலட்சியங்கள் இவையெனவும் காட்டுகின்றது.

மார்கழி நோன்பினைக் கடைப்பிடிக்கும்போது இந்த உண்மைகளை நினைவுறுத்திக் கொள்வோமாக.

*With Best Compliments From*

**Yarlton Stores**

82, FIRST CROSS STREET,

COLOMBO-1.

**Universal Organisation**

COLOMBO.

*K. Sivagurunathan & Son*

MAIN STREET, YATIYANTOTE.

WITH BEST COMPLIMENTR FROM

# ROJAHS

47, WOLFENDHAL STREET

**COLOMBO - 13**

Telephone: 32148

T. grams; ROJAH

ஆனந்தா

வாரக் கலண்டர்

1980

ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன் துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 348

அன்பளிப்பு

குறூஸ் ரெக்ஸ்ரையில்ஸ்

இல 52, மத்தியசந்தை

சுன்னாகம்

அன்பளிப்பு

# நாகமுத்து குடைத் தொழிற்சாலை

( உரிமையாளர்: க. நா. நவரத்தினம் ஜே. பி. )
ஏற்றுமதியாளர் - இறக்குமதியாளர்

இல 54, பழைய வீதி, கனுவன,
ஜா - எல

குடைகள் வாங்கும்போது,
நாகமுத்து குடைகள் என்றே கேட்டுவாங்குங்கள்

தயாரிப்பாளர்கள்

நாகமுத்து குடைத் தொழிற்சாலை
54, பழையவீதி,
கனுவன,
ஜா - எல.

விநியோகஸ்தர்கள்

இல 111, 2ம் குறுக்குத்தெரு
கொழும்பு,
தொலைபேசி; 26961

WITH BEST COMPLIMENTS

*of*

# MANOHARAN PHARMACY

General Merchants, Chemists & Druggists

364, MAIN STREET

PANADURA

T. Phone: 046 - 2541

WITH BEST COMPLIMENTS

OF

# K. KANDIAH & SONS

NO 322 MAIN STREET

PANADURA

உ

திருச்சிற்றம்பலம்

# "நினைவித்துத்தன்னை என் நெஞ்சத்திருந்து"

-- திருக்கோவையார்

திரு. க. சிற்றம்பலம், காரைநகர்.

யான் சைவ ஆசிரிய கலாசாலைப் படிப்பை முடித்துவந்தபோது ஒரு கிழவி என்னைப் பார்த்து நீ பெரிய படிப்பெல்லாம் படித்து விட்டாய் இதற்கு மறுமொழி சொல்லு பார்ப்போம் என்று ஒரு பரீட்சை நடத்தியது. கேள்வி இதுதான். ஒரு மரத்தில் இரண்டு குருவிகள்; அதில் ஒன்று அந்த மரத்தின் பழங்களைத் தின்னுகிறது. மற்றது பார்த்துக் கொண்டிருக்கிறது. இது என்ன?

இந்தக் குருவிக்கதை உபநிடதவாக்கியம் என்பதை காசிவாசி செந்தி நாதையரவர்கள் எழுதிய சிவஞானபோத வசனாலங்காரதீபத்தைப் படித்தபோதுதான் அறிந்தேன்.

அந்தக் குருவிகளுள் ஒன்று இந்த மாயா காரிய மாகிய சரீரத்தில் இருந்து கொண்டு வினைப்போக மாகிய பயன்களை - பழங்களை (பிராரத்தம்)ப் புசிக்கின்றது மற்றக் குருவி அதனுடனிருந்து கொண்டு அதன் ஆடலைப் பார்க்கின்றது - அந்தந்த ஆன்மாக்களுக்கு பிராரத்தமாய் அநுபவத்திற்கு வருகின்ற வினைப் போகங்களை ஊட்டி உண்பித்து ஆள்தலுக்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஒன்று ஆன்மா; மற்றது ஆன்மாவுடன் அநாதியே தொடர்பு பட்டிருக்கும் பிரமம் - கடவுள்.

கண்ணுக்குப் பார்க்கும் சக்தி உண்டு. அதனைச் சாத்திரம் ஐம்புலன்களில் ஒன்றாகிய கண்ணொளி - ஒளி என்னும். உயிருக்கு அறியும் சக்தி உண்டு. அது அறிவு. அதைச் சாத்திரம் ஆன்ம போதம் என்னும், ஆன்ம போதமாகிய அறிவும், கண்ணின் பார்வையாகிய ஒளியும் வெவ்வேறு பொருட்கள். பார்வையாகிய ஒளியுடன் அறிவு உடனாகிக் கலந்து செயற்படும் போதுதான் எதிர்ப்பட்ட பொருட்கள் காட்சிப்படும். இதில் அறிவு கண்டதா? கண்ணொளி கண்டதா? என்று பிரித்தறியவாராது. அறிவிருந்தும் கண்ணொளி இல்லாவிடத்து காட்சி இல்லை. எனவே கண்ணொளிக்கு ஆன்மபோதம் உடனாயிருந்து உபகரித்தலினால்தான் காட்சி நிகழ்கிறது. ஆன்மபோதம் கண்ணொளிக்குக் காட்டிக் காண்கிறதென்றும் கூறலாம்.

உயிருக்கு அறிவு உண்டு. அது சிற்றறிவு; அறிவிக்க அறியும் அறிவு. இறைவன் பேரறிவினன் ஞானமே வடிவமாக உள்ளவன். அநாதியே பெத்தம், முத்தி இரண்டிலும் தொடர்பு பட்டிருப்பவனாகிய இறைவன் தமது பரமகருணை காரணமாக உயிர்களுக்கு அவைதம் வினைப்பயன் காரணமாக அநுபவிக்க வேண்டிய

போக போக்கியங்களைக் காட்டிக்காண்பன் இதைத்தான் முன்னர்க் கூறிய உபநிடத வாக்கியம் கூறுகிறது. இறைவன் இவ்வாறு உபகரியாவிடின் உயிர்கள் உய்திபெறா. இவ்வாறு உபகரித்தல் இறைவன் உயிர்களுடன் உடனாய் நிற்றலினால் நிகழ்கிறது. இக்கருத்தை திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் 'விளம் புமா விளம்பே' 'கருதுமா கருதே' நணுகுமா நணுகே' என்பன போன்ற தொடர்களால் விளக்கியருளுகின்றார். ஆகவே அவன் அருளுபகாரம் இன்றி உயிர் அவனை நினைத்தலும் இன்றாம். 'அவனருளாலே அவன்தாள் வணங்கி,' சிவபுராணம்.

சிவகோசரியார் திருக்காளத்தியப்பருக்கு சிவாகமவிதிப்படி பூசை செய்பவர் கண்ணப்பர் பேரன்பினால் வந்தவாறு பூசை செய்பவர். கண்ணப்பர்பூசை சிவகோசரியாருக்கு அநுசிதமாய் திருக்கோயிலில் செய்யக் கூடாத குற்றமாய் இருந்தது. ஆனால் கண்ணப்பரது பேரன்பைச் சிவகோசரியாருக்குக் காட்டி அவர் மனக் குறையைப் போக்க விரும்பி ஒரு திருவிளையாடலை நிகழ்த்தினார். அதன் மூலம் அன்பின் திருவுருவான கண்ணப்பரின் முறுகிய பேரன்பைச் சிவகோசரியாருக்குக் காட்டியருள வேண்டி இறைவன் கண்டு காட்டியருளினார் இவ்வாறு இறைவன் திருவிளையாடல் நிகழ்த்திக் காட்டாக்கால் சிவகோசரியார் அன்புருவான கண்ணப் பரைக் காணுமாறில்லை. 'காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே' அப்பர் அருள்மொழி.

தலைப்பில் உள்ள தொடர் 'என்நெஞ்சத்திருந்து தன்னை நினைவித்து என்று பொருள்படும். நெஞ்சத்திருத்தல் அநாதிநித்தியம் அநாதியே இறைவன் உயிர்க ளின் நெஞ்சத்திலேயிருந்து தன்னை நினைவிக்கின்றான். ஆனால் உயிர்கள் ஆணவக் கலப்பினால் நினைக்கின்றில. ஆணவ இருளின் நீங்கித்தன்னை நினைக்க இறைவன் மாயையாகிய விளக்கைக் கொடுக்கின்றான். விடிவாமளவும் விளக்கனையமாயை' என் பது திருவருட்பயன். மாயை காரணமாக உடம்பும் உலகமும் பிறவும் தோன்று கின்றன. உடம்பைத் தந்தவன் கருத்தறிந்து அந்த உடம்பினால் இன்பம் பெற வேண்டியன உயிர்கள். அவை இன்பம் பெறவேண்டி உடனாய் நின்று உதவுவது அவனது இயல்பு.

> "என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
> தன்னை நினையத் தருகின்றான்." 11-ஆம் திருமுறை

இவ்வாறு இறைவன் செய்யும் உபகாரத்தை உயிர்கள் மறவாதுவனைக்க நினைக்கப் பேரன்பு பிறக்கும். அப்பேரன்பு காரணமாக என்றும் மாறாத பேரின்பத்தைப் பெற்று இறைவன் திருவடி நீழலையடைந்து நிலைபெற்று வாழும்.

> "காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம் போற்
> காணவுள்ளத்தைக்கண்டு காட்டலின்
> அயரா வன்பின் அரன் கழல் செலுமே" சிவஞானபோதம்11 ஆம் சூத்திரம்

திருச்சிற்றம்பலம்

# மனிதப் பிறவியும் வேண்டுவதே!

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., பேராசிரியை தருமபுரம்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்த உயிர், எல்லாம் வல்ல இறைவனின் திருவடியில் தங்கி இன்புறவே நினைக்கும். அந்த வற்றாத மூற்றாத இன்பம் இவ்வுலகிலேயே கூட கிடைக்கும் என்றால் அது எங்கே எப்படிக் கிடைக்கிறது என்றறியும் ஆர்வம் உயிர்களுக்கு எழுந்தானே!

ஆனால் அவ்வின்பத்தை மற்றைய சரீரங்களுக்குள் இருக்கும் ஜீவனால் அனுபவிக்க முடியாது மானிடச் சட்டைக்குள் இருக்கும் ஆன்மா மட்டுமே அவ்வானந்தத்தை அனுபவிக்க வல்லது. எப்படி என்றால் - கூறுவோம்.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்தவன் - தலைவன்

என்ற உணர்வு யாருக்குள் எழுகிறது!

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்று திருமூலர் கூறுவது நமக்கும் ஒரு பாடம் அல்லவா!

ஆகவே ''பிறவி'' தந்த பெருமானைப் போற்ற விரும்புகிறோம்.

அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது - என்றாளே ஔவை. அந்த அருமை உணரும் மானிடப் பிறப்புக் கிடைத்துவிட்டதே - இனியும் என்ன?

நீ நாளும் நன்னெஞ்சே நினை கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ் நாளும் சாய்க்காட் டெம் பெருமாற்கு
பூநாளும் தலைசுமப்பப் புகழ் நாமம் செவி கேட்ப
நாநாளும் முயன்றேத்தப் பெறலாமே நல்வினையே

என்று ஞானசம்பந்தர் கூறியது போல்

இளமை யாக்கை செல்வம் இவையெல்லாம் நிலையாத உலகத்தில் மனித சரீரம் நமக்குக் கிடைத்துள்ளது. அந்த வாய்ப்பை நழுவ விடாமல் இறைவனை வழிபடுதல் வேண்டும் - இதை முதலாவதாக நாம் உணர்தல் நல்லது.

அப்பர் பெருமான் பல காலம் சமணராக இருந்து, பின் சைவம் சார்ந்தவர் ஆகையால் அவர் பாடல்களில் இக்குறிப்பை அதிகமாகக் காணமுடியும்.

பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

என்று வைத்தீஸ்வரன் கோயில் தேவாரத்தில் கூறுகிறார்.

'ஏற்றும் அடிக்கே - இரவும் பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்' - என்று இனித் 'தம்பால் வீணடிப் பொழு வீணடிக்க இயலாது என்பதையும் குறிப்பிடுவார்.

ஒருநாவுக் குறை செய்ய ஒண்ணு அத் திருநாவுக்கரசர் பெருமான் சிதம்பரம் வந்து நிற்கிறார். மற்றவர்களைப் பார்ப்பது பொல் பொது நோக்கால் இறைவன் அவரைப் பார்க்காமல் சிறப்பு நோக்க செய்கிறார். நாவரசரும் ஐயப்படாது அகத்தது உணர்ந்து 'என்று வந்தாய்'- என்னும் இறைவன் அருட்குறிப்பை வியந்து பாடுகிறார். தோற்றம் துடியிலும் காத்தல் அருள் நிலையிலும் அழித்தல் தீயிலும் மறைத்தல் ஊன்றிய பாதத்திலும், அருளல் எடுத்த பாதத்திலுமாக இருந்து அருளும் அபூர்வ வடிவம் ஆண்டவனுடையது அல்லவா. அந்த வடிவத்தை ஆழ்ந்து நோக்குகிறார். அவர் பெருமையை வள்ளலார் எப்படிக் கூறுகிறார் என்று கண்டு மேற் செல்வோம்

## வள்ளலார் வாக்கு:

பகுதி தகுதி விகுதி எனும் பாட்டில்
இகலின் இடையை இரட்டி - தகவின்
அருச்சித்தால் முன்னுமது கடையாங் கண்டீர்
திருச்சிற் சபையானைத் தேர்ந்து.

பாட்டின் முதல் வரியில் உள்ள மூன்று பதங்களின் இடையில் இருக்கும் ''கு''வை இரட்டிக்க அனு'கு' ஆயிற்று. அதைக் கொண்டு அர்ச்சித்தால் மூன்று பதங்களிலும் முன்னுள்ள ஒன்று 'பதவி' கிடைக்கும். மூன்று பதங்களிலும் கடைசியிலுள்ளவற்றை இணைக்க முத்'தி' கிடைக்குமென்று கூறவா வேண்டும்.

முன்னுமது கடையாங் கண்டீர் என்பதற்கு பதவி மோகம் அகலும். அதை ஒரு பொருளாக ஆன்றோர் கருதா வண்ணம் அது கடையாதலும் கண்கூடு என்ற நயமுந் தோன்றுகிறது. திருச்சிற்சபையான் பெருமை தெரிந்ததல்லவா!

## திருமாலின் தவம்:

பெருமாள் பூவுலகை வராகமாகித் துளைத்துச் சென்று சிவபெருமானின் திருவடிகளைக் காண முயன்றார். முயற்சி வெற்றிபெறாத போது தோல்வியை ஒப்புக் கொண்டு 'தில்லைக்கு வந்தாதாராம். நடராஜப் பெருமான் ஒரு காலைத் தூக்கிக் காட்டவே அவர் மனம் மிக மகிழ்ந்தாராம் அத்தோடு போகாமல் மற்றொரு காலையும் காட்டிடுக என்று கேட்டுப் பார்த்துப் பார்த்து அப்படியே அங்கே சயனித்து விட்டாரும். எப்படி இருக்கிறது மணிவாசகர் கற்பனை

புலங்கடந்தாழை காண்பான்
புவி விண்டுபுக் கறியாது
இரங்கிடு எந்தா யென்றிரப்பதன்
ஈரடிக் கென்னிரண்டு
கரங்கள் தந்தான் ஒன்றுகாட்ட
மற்றொன்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை முன்றில்
அம்மாயவனே.

**நால்வர் வழிபட்ட நல்லவர்:**

அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும், மணிவாசகரும் வழிபட்ட தில்லைத்தலம் என்ற பெருமை வேறு அப்பதிக்கு உண்டு.

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அந்த ஆனந்தக்கூத்தை சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

கற்றுங்கெரியோம்பி கலியை வராமே செற்றவர்கள் வாழுகின்ற தில்லையாக திருஞான சம்பந்தரும்;

நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்தெலும்புள் நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடையானை மணிவாசகரும்;

என்றுவந்தாய் என்று குசலம் கேட்கும் கொற்றவனை அப்பர் பெருமானும் கண்டு மகிழ்ந்த தலம் அது.

**யார் பெரியார்**

நடுவில் ஒரு சுவையான செய்தி ஒன்று நினைவுக்கு வருகிறது. மனிதப் பிறவி அடைந்தும் பலனடையாமல் பலர் இருக்கிறார்கள். அவர்கள் அடையும் பலன்தான் என்ன! பரிதாபம் என்பதே.

ஒரு முனிவர் எதிரே வரும் காமுகன் ஒருவனைக் கண்டு ஒதுங்கியதோடு அவன் கால்களில் விழுந்தும் வணங்கினார்.

காமுகன் உள்ளம் வருந்த, உடல் நடுங்க - ஐயா நீங்கள் என் காலில் விழலாமா! நான் கீழ்ப்பட்டவன் அல்லவா! தாங்கள் மிக உயர்ந்த முனிவராயிற்றே - என்று தடுமாறி நின்றான்.

முனிவர் சொன்னார் - அப்பா! உண்மையில் நீதான் பெரியவன். நன்கு யோசித்துப்பார். வாழ்வில் அநித்தியமாகவும் சிறிதாகவும் உள்ள இன்பத்தை விரும்பி - பேரின்பத்தைத் துறந்தாய். வேப்பெண்ணெயை விரும்பி அமுதத்தைத் துறந்தாய். கடுகளவு இன்பம் நச்சி மலையளவு இன்பத்தைத் துறந்தவனாகிய உன்னையும், மலையளவு இன்பம் விரும்பி கடுகளவு, அதுவும் வேப்பெண்ணெயாகவும் சிற்றின்பமாகவும் இருக்கிற ஒன்றைத் துறந்த என்னையும் இணைத்துப் பார்க்கும்போது - நீதானே பெரியவனாகத் தோன்றுகிறாய். என்னைவிட உனக்கே ஆற்றல் அதிகம் - என்று கூறி மீண்டும் விழப்போன முனிவர் திருவடியில் தான் முன் வீழ்ந்து நல்லறிவு கொளுத்த ஆடிய நாடகம் நன்று என்று கூறி உண்மை உணர்ந்தான் அக்காமுகன்.

மான் இடங் கொண்டவனைப் பணிய

**மானிடப் பிறவி:**

மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காய
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்காக -

என்று அருணந்திசிவாசாரியார் சுட்டுவதைக் காண்க. ஆகவே அப்பர் பெருமான் உணர்ந்து சொன்ன வாக்கே நமக்கு வழிகாட்டியாகி உய்விக்க வல்லது.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயில்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே.

வணக்கம்

# காரைநகர் தந்த கவிஞர் நூல்கள்

1. **அருணசல உபாத்தியாயர் ச.:** நீதி வெண்பா உரை *(1904)*

2. **அருளப்ப நாவலர்:** திருச்செல்வர் காவியம்

3. **அருளம்பலவனர் சு.:** *சங்கநூற் செல்வர், பண்டிதமணி.*
*1)* திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை *( 8-2-37 ), 2)* பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியுரை **(20 9 37), *3)*** பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை - இரண்டாம் பத்து **(10-4-56),** *4)* பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை - முதலாம் பாகம். (இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்) *(31-12-60), 5)* பதிற்றுப் பத்து ஆராய்ச்சியுரை இரண்டாம் பாகம் *(22-10-63), 6)* திருவாசக ஆராய்ச்சியுரை- முதலாம் பாகம் *(1967), 7)* திருவாசக ஆராய்ச்சியுரை - இரண்டாம் பாகம் [ இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்] *(1973)*

4. **அல்லின் ஏபிரகாம் B.A., F.R.A.S.** *1)* வானுறிசயங்கள். *2)* மதுவிலக்குக் கும்மி.

5. **ஈழத்துச் சிதம்பர தேவத்தானம்.** *1)* திருவாதிரை மலர் *(1964) 2)* திருவாதிரை மலர் *(1965)*

6. **ஐயம்பிள்ளை வெ.** - வள்ளுவர் வாய்மொழி மாண்பு **(1956)**

7. **கணபதிப்பிள்ளை வே.** - மாணவர் தமிழ் வாசகங்கள் *1)* பாலர் வகுப்பு - கீழ்ப்பிரிவு **(1944)**, *2)* பாலர் வகுப்பு - மேற்பிரிவு *(1945), 3)* 2 ஆம் புத்தகம் *[1945], 4)* 3 ஆம் புத்தகம் (1947), 5) 4 ஆம் புத்தகம் *(1947), 6)* 5 ஆம் புத்தகம் *(1950), 7)* 6 ஆம் புத்தகம் *(1957)*. Sri Lanka Readers: 8) Primer (1956), 9) Book One (1957), *10)* Book Two *(1958)*, 11) Book Three (1958), 12) Book Four (1960).

8. **கணபதீசுவரக் குருக்கள் ச.** - *1)* ஈழத்துச் சிதம்பரம் *(1961)* ஈழத்துச் சிதம்பர தேவத்தானம், காரைநகர். *2)* திருவூடல் *(1964)* ஈழத்துச்சிதம்பர தேவத்தானம், காரைநகர். *3)* ஆத்ம யாத்திரை *(1965)*

9. **காரை அபிவிருத்திச் சபை:-** ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேக மலர் *[10 7-1970 ]*

10. **கார்த்திகேயப் புலவர்:** *1)* சூரபன்மன் நாடகம் *2)* சந்திர வண்ணன் நாடகம் *3)* கிறிஸ்து மத குடாரம் *4)* வண்ணைத் திரிபந்தாதி *5)* நகுலேசுவரி யமக அந்தாதி *6)* திருத்தில்லைப் பல்சந்தமாலை *7)* திண்ணபுரத் திரிபந்தாதி *8)* திருப்

போசை வெண்பா [1924]. 9) விதானமாலை உரை:- (உரையில்லாத பாடல்களுக்கு) [1881] (10 தன்னையமக அந்தாதி (இறுதியிலுள்ள 30 பாடல்கள்)

11. சண்முகம் க. - உலக பூமி சாத்திரம்

12. சபாரத்தின ஐயர் மு. - காரைநகர்ச் சுந்தரேசுவரப் பெருமான் பேரில் ஊஞ்சல் [1910] - சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள்

13. சபாரத்தினம் ந. B. A. National Education Its Concet and Contents - S. S. Sanmuganathan & Son, Jaffna.

14. சிவகுரு B. Sc. (Hons.) வே. 1) சக்தியின் தோற்றமும் மாற்றமும் (1967) 2) திருவெம்பாவை உரை (1968) காரை அபிவிருத்திச் சபை

15. சிவசிதம்பர ஐயர் கா. - வித்துவான் 1) திக்கைநாயகர் மும்மணி மாலை (1882) 2) காலிக்கதிரேசர் அடைக்கலப்பத்து (1887) 3) கந்த புராணம் மகேந்திர காண்ட உரை (1910) 4) கார்த்திகேயப் புலவர் சரித்திரம் (1908)

16. சிவலிங்கபிள்ளை ஐ. 1) சிவபுராண உரை (22-7-65) 2) பிடித்த பத்து உரை (29-7-67) 3) கோயில் திருப்பதிக உரை 4) அடைக்கலப்பத்து உரை (25-7-70) 5) திருவெம்பாவை உரை (15-8-75) 6) கோயில் மூத்த திருப்பதிக உரை (5-7-76)

17. சுந்தரம்பிள்ளை B. A. செ. - கவிஞர் 1) தேனுறு (1968) யாழ். இலக்கிய வட்டம். 2)[சங்கிலியம் இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்](1970) யாழ். ஈழநாடு நிறுவனம். 3) தவம் (1971) யாழ். இலக்கிய வட்டம்

18. சுப்பிரமணிய தேசிகர், சி.-சைவப்பெரியார். 1) திருவெம்பாவை உரை (1959)- மணிவாசகர் சபை, காரைநகர். 2) திருப்பள்ளியெழுச்சி உரை (1960) கலைமகள் மன்றம், காரைநகர். 3) சைவக் கிரியைகள் (1964) 4) காரைநகர்த் திண்ணபுரம் சுந்தரேசுவரர் ஆலய வரலாறு (1943) - திரு. அருணுசலம் சண்முகம் 5) இராமாயணம் - காட்சிப்படலம், நிந்தனைப் படலம் உரை (1961) திரு. வே. கணபதிப்பிள்ளை. 6) இம்பர்சிட்டிச் சித்திவிநாயகர் கோயில் வரலாறும், பதிகமும், பொன்னூசலும்.

19. சுப்பிரமணியம் க. - உலக சரித்திர வினு விடை

20. சுப்பிரமணியம் க. க. - ஈழத்துச் சிதம்பரத்தின் சுருக்க வரலாறு [1972)

21. சுப்பிரமணியம் மு. கு. 1) திருக்குறட் பாடம் அறத்துப்பால் (1938 2) கடவுளுடன் ஐக்கியப்படும நேர நிகழ்ச்சிகள் (1960) 3. பக்தி நெறி (1963), 4) தாயுமானுர் திருவாக்கு (1967)

22. சுப்பையா 1) நல்லைநாயகர் நான்மணிமாலை 2) காரைக்குறவஞ்சி

23. சைவ மகாசபை: 1) பொன்விழா மலர் (1967) 2) வைரவிழா மலர் (1976)

24. ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்: 1) சிவஞான விளக்கம் (1974) தாளையன் அச்சகம், கொழும்பு. 2) ஸ்ரீ பஞ்சாக்ஷர விளக்கம் (1973) தாளையன் அச்சகம், கொழும்பு.

25. தமிழ் வளர்ச்சிக் கழகம்: மதிப்பீட்டுப் பயிற்சிக் கோவைகள் - 1) 10 ஆம் வகுப்புப் புத்தகம் - I (1973) 2) புத்தகம் - II (1974) 3) 9 ஆம் வகுப்பு (1975) 4) 8 ஆம் வகுப்பு (1976) 5) 10 ஆம் வகுப்பு (1979) 6) தொடர்மொழிப் பொருளுக்கு ஒரு சொல் (1979)

26. திக்கரை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கு விழாச்சபை (கொழும்புக் கிளை): திக்கரை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கு விழா மலர் (1974)

27. தியாகராசா, M. A., M. Litt. ஆ. - Ecconomic Development of Ceylon - V. GANESHALINGAM

28. நடராசா, எவ். எக்ஸ். ஸி. - வித்துவான் 1) எண்ணெய்ச் சிந்து (1853) திரு. இ. மா. கோபாலகிருஷ்ணன், மதுரை. 2) மொழி பெயர்ப்பு மரபு (1954) கலைமகள் கம்பனி, கொழும்பு. இலங்கைச் சரித்திரம் 3) போர்த்துக்கீசர் காலம் (1955) 4) ஒல்லாந்தர் காலம் (1956) 5) ஆங்கிலேயர் காலம் (1951) கலைமகள் கம்பனி, கொழும்பு. 6) ஈழமும் தமிழும் (1957) 7) ஈழத்து நாடோடிப் பாடல்கள் (1962) ஆசீர்வாதம் அச்சகம், யாழ்ப்பாணம். 8) மட்டக்களப்பு மான்மியம் (இலங்கைச் சாகித்திய மண்டலப்பரிசு பெற்ற நூல்). (1962) கலாநிலையம், கொழும்பு. 9) ஜேர்மனி-சுருக்க விளக்கம் (1962) 10) கண்ணகி வழக்குரை (1965) 11) ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு (1970) அரசு வெளியீட்டு நிலையம், கொழும்பு. 12) காரைநகர் மான்மியம்

29. நாகலிங்கம் அ. - சாம்பசிவம் ஞானமிர்தம்

30. நாகமுத்துப் புலவர்: 1) காரைநகர் திண்ணபுரச் சுந்தரேசர் திருப்பதிகம் 2) காரைநகர் திண்ணபுரச் சுந்தரேசர் திருவூஞ்சல் 3) காரைநகர் திண்ணபுரச் சுந்தரேசர் பக்திரசக் கீர்த்தனங்கள் 4) காரைநகர் பயிரியம்பதி சுப்பிரமணியர் திருவூஞ்சல் 5) கலிகால வேடிக்கைக் கும்மி 5) மலாய் நாட்டு மனோரஞ்சிதக் கும்மி 7) திருமங்கல வாழ்த்துச் சீட்டுக் கவித்திரட்டு

31. பஞ்சாக்ஷரக் குருக்கள் ச. - பண்டிதர்: 1) காரைநகர் மருதடி விரகத்தி விநாயகர் இரட்டை மணிமாலை (1931) 2) திண்ணபுர வெண்பா (1945) 3) விநாயகரகவல், விநாயக கவசம்-பதவுரை (1947) கொழும்பு தம்பையா சத்திரம் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான் திருப்பதிகம், திருவூஞ்சல் (1948)

32. பொன்னம்பலம் சி. - 1) சுந்தரத் தமிழ் (1969) 2) திண்ணபுரக் கவிமலர் (1972) 3) வாணி மலர் (1973) 4) திண்ணபுரச் திருச்சதகம் (1974)- நீலிப்பந்தனை இந்து இளைஞர் மன்றம், காரைநகர்.

33. மணிவாசகர் சபை: 1) மணிவாசகர் விழா மலர் (1957) 2) மணிவாசகர் விழா மலர் (1960) 3) மணிவாசகர் விழா மலர் (1979)

34. முருகேசையர் - 1) தன்னை யமக அந்தாதி (முதலிலுள்ள 70 பாடல்கள்) 2) மாவிந்தம்

35. வேலாயுதபிள்ளை, க. - பண்டிதர்: நாகமுத்துப் புலவர் கவிதைகள் (17-6-1974)

36. வைத்தியலிங்கம் B. A., மு. - The life of Sri Ponnampalam Ramanathan. Part - I (1971) Part II (1977). Commemoration Society, Colombo.

37. வைத்திலிங்கம், இ - திண்ணபுர மான்மியம் (1960)

38. காரைநகர் மக்கள்: நவாலியூர்ப்புலவர் மணியின் புகழ்மாலை (4-1-1976)

# காரைநகர்ப் பதிப்பாக வெளிவந்தவை

1. நூல்: விதானமாலை - முதலாம் பதிப்பு (1881)
2. ஆசிரியர்: நாராயண சுவாமிகள்
3. பதிப்பு: கார்த்திகேயப் புலவர்

1. நூல்: திரு. ச. அருணாசலம் (1971)
2. ஆசிரியர்: திரு. சி. கணபதிப்பிள்ளை ஐயர்
3. பதிப்பு: சைவ மகாசபை

1. நூல்: தக்ஷிணகைலாச புராணம் (1887)
2. ஆசிரியர்: மகாவித்துவான் சிங்கைச்செகராசசேகரன்
3. பதிப்பு: வித்துவான் கா. சிவசிதம்பர ஐயர்

1. நூல்: விதானமாலை - இரண்டாம் பதிப்பு (1900)
2. ஆசிரியர்: நாராயண சுவாமிகள்
3. பதிப்பு: வித்துவான் கா. சிவசிதம்பர ஐயர்

1. நூல்: தமிழ் இலக்கிய விளக்கம் (1961)
2. ஆசிரியர்: வித்துவான் க. ந. வேலன்
3. பதிப்பு: கலைமகள் மன்றம்

1. நூல்: கதிரேசர் சதகம் (1969)
2. ஆசிரியர்: செஞ்சொற் கொண்டல், வித்துவான் சொ. சிங்காரவேலன் M. A.
3. பதிப்பு: மணிவாசகர் சபை

1. நூல்: ஈழத்துச் சிதம்பர புராணம் (1971) (அரசினரின் பரிசு பெற்ற நூல்)
2. ஆசிரியர்: புலவர்மணி சோ. இளமுருகனார், பண்டிதைமணி இ. பரமேஸ்வரி
3. பதிப்பு: ஈழத்துச்சிதம்பர தேவத்தானம்

1. நூல்: திருவருட்பயன் உரை (15 பாடல்கள்) (1972)
2. ஆசிரியர்: காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
3. பதிப்பு: இலங்கை மெய்கண்டார் ஆதீனம் ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள்

1. நூல்: யாழ். காரைநகர் ஸ்ரீதிண்ணபுர இலிங்கப்பதிகம் (1974)
2. ஆசிரியர்: அருட்கவி சீ. விநாசித்தம்பி
3. பதிப்பு: மணிவாசகர் சபை.

1. நூல்: நாவலர் பிள்ளைத் தமிழ் (1979)
2. ஆசிரியர்: பண்டிதர் மு. கந்தையா B. A.
3. பதிப்பு: தமிழ் வளர்ச்சிக் கழகம்

[தொகுத்தளித்தவர்: க. வைத்தீசுவரக் குருக்கள்]

# கிருஸ்ணா கோல்ட் கவுஸ்

இல. 282, நியூ பசார், செங்கல்லடி.

(நகை அடைவு பிடிப்பவர்கள்)

எங்களிடம் ஓடர் நகைகள் குறித்த தவணையில்
சிறந்த முறையில் செய்துதரப்படும்.

கிளை:

## ஸ்ரீ கிருஸ்ணா ஸ்ரோர்

இல. 30, மெயின் வீதி, நமுனுகுல.

அன்பளிப்பு

ஞானேஸ்வரன் அரிசி ஆலை

இணுவில்

இளை:

லிங்கம் ஸ்ரோஸ்

இணுவில்

அன்பளிப்பு




# லீலா அரிசி ஆலை

மருதனைமடம்

கிளை:

லீலா ஸ்ரோஸ்

சுன்னாகம்

பொன்னுஸ்

சுன்னாகம்

மணிவாசகர் சபை மேன்மேலும் வளரவும்
மணிவாசகர் விழா சிறப்பாக நடைபெறவும்

இறைவனை இறைஞ்சுகின்றோம்

**அ. வே. அருளம்பலம் அன் சன்**

55 கே. கே. எஸ். வீதி,

சுன்னாகம்

WITH BEST COMPLIMENTS OF

*S. S. Shanmugam & Co*

NO 300 302 Main Street,

**PANADURA**

T. Phone: 2467

அன்பளிப்பு

**நியூ ராஜா ஸ்ரோர்ஸ்**

15 ஜனப்பிரிய மாவத்தை

பாணந்துறை.

அன்பளிப்பு

# பேழ் றிச்

( காலணிகள் விற்பனையாளர் )

**32 ஜனப்பிரிய மாவத்தை, பாணந்துறை.**

உரிமையாளர்: கே. இராசையா

கிளை: 5, வில்ஸி அவன்யூ

வெள்ளவத்தை தொலைபேசி; 85188

அன்பளிப்பு

# ஹரன் கோப்பி பார்

கண்டி வீதி, கிளிநொச்சி.

அன்பளிப்பு

**ஸ்ரீ அம்பிகை ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி,

நெடுங்கேணி.

அன்பளிப்பு

**விநாயகர் ஸ்ரோர்ஸ்**

பிரதான வீதி,

பாணந்துறை,

உரிமையாளர்: ஏ. எம். செல்லையா

அன்பளிப்பு

நாதன் லீக சொப்

குருநகர்

அன்பளிப்பு

எஸ். இராசலிங்கம்

சுன்னுகம்

WITH BEST COMPLIMENTS OF

# CADER STORES

102 / 1 WOLFENDHAL STREET

**COLOMBO - 13**

Telephone: 35072

*ROYAL GRINDING* MILLS
414/4 BLOEMENDAL ROAD
*COLOMBO*
T. Phone: 26468

Telegrams: CADERROYAL
C. S. GRINDING MILLS
101/*121* NEGOMBO ROAD
*PELIYAGODA*

WITH BEST COMPLIMENTS FROM

# Gnanamalar Stores

102/2 SIR RATNASOTHY SARAVNAMUTHU MAWATTA

**COLOMBO - 13**

T. Phone:: 36929

WITH BEST COMPLIMENTS OF

# WELIGAMA STORES

*General Merchants & Commission Agents for Local Produce*

**139, 4TH CROSS STREET**

**COLOMBO - 11**

23271

WITH BEST COMPLIMENTS

*of*

# A. S. K. KANDAIAPILLAI

**539 MAIN STREET**

**KANDANA**

*Dealers in Textiles Best Jaffna Cigars & Oilmanstores*

WITH BEST COMPLIMENTS
OF

# KANDY PALAYAKAT'S

NO 109, 3RD CROSS STREET

COLOMBO - 11

WITH BEST COMPLIMENTS OF

*Libra Jewellery Stores*

*Jewellers & Pawn Brokers*

74, Sea Street,

COLOMBO - 11

Prop: K. K. VELUPILLAI

Dial: 31304

அன்பளிப்பு

கந்தையா தம்பிராசா

ரதி ஸ்டோர்ஸ்

நிர் 267, மெயின் வீதி,

கந்தானே.

அன்பளிப்பு



ஸ்தாபிதம்: 1950

# விக்னேஸ்வரா ஸ்ரோஸ்

நம். 366, பிரதான வீதி,

பசறை.

நகை அடைவுபிடித்தல், நகைவிற்பனை

அலுமினியம் பித்தளை முதலியன

கிளை:

## கதிரமலையான் ஸ்ரோஸ்

நம்: 370 பிரதான வீதி,

பசறை,

WITH BEST COMPLIMENTS OF

# MANJU TRADERS

Manufacturers and Distributors of Manju Beedi

DEALERS IN TOBACCO

**164 WOLFENDHAL STREET**

**COLOMBO - 13**

Prop: *K. KIRUPAINATHAN*

அன்பளிப்பு

# வினாயகர் ஸ்ரோர்ஸ்

( பலசரக்கு மொத்த வியாபாரம் )

**136, பிரதான வீதி, ஜா - எல,**

உரிமையாளர்; எஸ். சிவஞானம்

அன்பளிப்பு

# கலைவாணி நகை மாளிகை

111B கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

# கொழும்பு ரெக்ஸ்ரைல்ஸ்

மகேசன் கட்டிடம், 109, பெரியகடை.

யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

# ஈ. வி. கார்த்திகேசு

301 - 303 பிரதான வீதி, பசறை.

தொலைபேசி; 245

அன்பளிப்பு

# சிவாஸ் கூல் பார்

இல 54, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

★ சிவாஸ் கோப்பி, சிவாஸ் ரீ, சிவாஸ் பீடா, மற்றும்

★ சகல சிற்றுண்டி வகைகளுக்கும் சிறந்த இடம்

கிளை;

கணபதி ஸ்ரோர்ஸ்
27, புதிய சந்தை,
சுன்னாகம்.

அன்பளிப்பு

# அம்பிகை ஸ்டோர்ஸ்

இல 42. பிரதான வீதி, அப்புத்தளை.

புடவை, சாய்ப்புச் சாமான் வியாபாரமும்,
நகை அடைவு பிடிப்பவர்களும்

உரிமையாளர்; திருமதி ஏ. சோமசுந்தரம்

காரைநகர் மணிவாசகர் சபையின் பணிகள் தொடர

## எமது நல்வாழ்த்துக்கள்

எல்லா வகையான புடவை வகைகளையும்
கெம்வி கைக்கடிகாரம், ரேடியோ மற்றும் சாய்ப்புச் சாமான்களும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

# சிவா பிறதர்ஸ்

304, பிரதான வீதி,

பசறை.

அன்பளிப்பு

## வி. ரி. ஏ. அருணாசலம் அன் கோ

இல 397, 399, பிரதான வீதி,

பசறை.

தொலைபேசி; 326

கிளை

79, கஸ்தூரியார் வீதி.

யாழ்ப்பாணம்.

மணிவாசகர் விழாவிற்கு

எமது நல்வாழ்த்துக்கள்

அன்பளிப்பு

# இராசம் அரிசி ஆலை

சுன்னாகம்

கிளைகள்:

## வினாயகம் அரிசி ஆலை

சுன்னாகம்

## K. R. சிவலோகநாதன் & கோ

யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

# செல்லையா ஸ்ரோஸ்

பலசரக்கு வியாபாரம்

25 கே. கே. எஸ். வீதி,

சுன்னுகம்

அன்பளிப்பு

# சிறீதேவி நகைமாளிகை

( அடைவு பிடிப்பவர்கள் )

தங்கப்பவுண் நகைகளுக்கு சிறந்த இடம்

சேர். பொன். இராமநாதன் வீதி,

சுன்னுகம்

தொலைபேசி: 268

மணிவாசகர் விழாவிற்கு

எமது நல் ஆசிகள்

அன்பளிப்பு

ஐங்கரன் அரிசி ஆலை

இணுவில்

அன்பளிப்பு




# நாகராசா கோப்பரேஷன்

பிரபல வியாபாரிகள், கொம்மிஷன் ஏஜன்ட்

பிரதான வீதி,

பசறை.

கிளைகள்:

விரைவில் திறப்பு விழா

## நெல் மா அரிசி ஆலே இன்டஸ்ரி

வவுனியா

## நாகேந்திரம் பாம்

கோயிற்குளம்,

வவுனியா,

ஸ்ரீ ராம ஜெயம்



அன்பளிப்பு

மணிவாசகர் சபையின் 25 வது மணிவாசகர் விழா சிறப்புற

எமது நல்வாழ்த்துக்கள்

# கற்பகம்ஸ்

சுன்ணுகம்.

கிளைகள்:

சுகன்யா அரிசி ஆலை
சுன்ணுகம்

சிவா பேக்கர்ஸ்
சுன்ணுகம்

ஜோதி ஜுவல்லர்ஸ்
சுன்ணுகம்

கற்பகம் இண்டஸ்ரீஸ்
சுன்ணுகம்.

அன்பளிப்பு



மணிவாசகர் சபையின் சைவப் பணிகள் மேன் மேலும் வளர

எமது நல்வாழ்த்துக்கள்

# மகேஸ்வரி அரிசி ஆலை

கொக்குவில்

கிளைகள்:

ஏ. கே. சுப்பையா
கொழும்பு

ஹுசைன் பீடி கொம்பனி
கொழும்பு

மகேஸ்வரி அரிவு காலை
மருதனமடம்

WITH BEST COMPLIMENTS

*From*

# Industrial Exports Company

**NO 81 & 83 MAIN STREET**

**COLOMBO**

T.gram ENDEAVOUR
COLOMBO

29469
27955

அச்சுப்பதிவு
பாலா அச்சகம்
காரைநகர்.
(இலங்கை)

*With Best Compliments*
*From*

Importers and Wholesale
Indenters

# INTER-TEND CO.

**127, NEW CHETTY STREET**
**COLOMBO-13**

*T'Phone :* **34688** *T'grams:* **'Poombukar'**

சிங்கைக் கமுது செவிக்குப் பசுந்தேறல்
வங்க பிறவிக்கு மாமருந்து—தங்க
மணிவா சகப்பெயர்கொள் மாமன்றம் வாழி
அணிவிழா வாழி யமைந்து.


# சிவஞானம் ஸ்ரோர்ஸ்

(பலசரக்கு வியாபாரம்)

91/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


அட்டை அச்சு: திருமகள் அழுத்தகம், சுன்னுகம்